# பாடசாலைகளின் விஷேட நடைமுறைகளுக்கான பிரவேசம் 2



முகாமைத்துவ மற்றும் தர உறுதிப்பாட்டுக் கிளை

## கல்வி அமைச்சு

# அறிமுகம்

ஒரு செயற்பாட்டினது அல்லது ஒழுங்கமைப்பினது இருக்கின்ற நிலையினை மேம்படுத்துவதற்காக பல்வேறு நுட்ப முறைகளை அல்லது வியூகங்களைப் பயன்படுத்துவர். அவ்வியூகங்கள் வெற்றியளித்து செயற்பாட்டில் அல்லது ஒழுங்கமைப்பில் நேர்மறையான மாற்றங்கள் நிகழுமாயின் அதுசார்ந்த சமூகம் அவ்வியூகங்களைப் பின்பற்ற முனைவர். இவ்வாறான வியூகங்களின் ஒழுங்கமைப்பு பிரகைளிடையே ஒரே நோக்கில் செயற்படுவதற்கான நடத்தை மாற்றத்தை ஏற்படுத்தும் நடைமுறையே விஷேட நடைமுறை என பொருள்படுகின்றது.

விஷேட நடைமுறைகள் எப்பொழுதும் ஒழங்கமைப்பில் காணப்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் அதன் செயற்பாடுகளை அபிவிருத்தி செய்வதற்கும் சமூகத்துக்கு உதவுகின்றது.

விஷேட நடைமுறை என்பது இருக்கின்ற நிலையை நேரியமுறையாக அபிவிருத்தி செய்து கொள்வதற்கு நிறுவனத்தில் காணப்படுகின்ற வளங்களை வினைதிறனுடனும் விளைதிறனுடனும் பயன்படுத்தி, அந்நிறுவனத்திற்குப் பொருத்தமான வகையில் ஆக்கத்திறன் மிக்கதாக செயற்படுத்துகின்ற, இலக்கை நோக்கிய வியூகம் அல்லது செயற்பாடுகள் ஆகும்.

பாடசாலையொன்றின் விஷேட நடைமுறையொன்றில் காணப்பட வேண்டிய முக்கிய பண்புகளை இவ்வாறு கூறலாம்.

- நம்பகத் தன்மை
- வரவேற்புக்குள்ளாக்கல்
- ஆக்கத்திறன்மிக்கது
- ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கை மற்றும் கோட்பாடுகளுக்கு ஏற்புடையதாதல்
- நீடித்து நிலைத்தல்
- முன்மாதிரியாக இருத்தல்
- பாடசாலையினுள் சிறந்த கலாசாரமொன்றை உருவாக்க முடிதல்
- அளவிட முடிதல்

விஷேட நடைமுறை என ஒரு செயற்பாட்டினை அறிமுகப்படுத்துவதற்கு முன்னர் அது பாடசாலைக்கு எவ்வளவு தூரம் பொருத்தமானது என்பதை தீர்மானிப்பதும், செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற நடைமுறை ஏற்றுக்கொள்ளப்பட்ட கல்விக் கொள்கைகள் மற்றும் புலக்காட்சிகளுக்கு மாற்றமின்றி இருப்பதும், அதனைப் பிரயோக ரீதியில் பாடசாலையினுள் நடைமுறைப்படுத்தக்கூடியதாக இருப்பதும், அவசியமாகும். பாடசாலையின் மனித மற்றும் பௌதீக வளங்களுக்கு, சூழலுக்கு, சமூக நிலைமைக்கு அந்த நடைமுறை பொருத்தமானதா என்பதை கவனத்திற்கொள்ளல் வேண்டும்.

மேலும் இனங்காணப்பட்ட நடைமுறையினை செயற்படுத்துவதற்கு முன்னர் அதுபற்றி முகாமைத்துவக் குழுவுக்கு போதிய விளக்கம் இருப்பதும் பாடசாலைச் சமூகம் அதுபற்றி அறிந்திருப்பதும் அவசியமாகும். அவ்வாறே பாடசாலைச் சமூகத்தின் அர்ப்பணிப்பு, மாற்றத்துக்கான விருப்பம், ஒரே நோக்கத்திற்காக செயற்படுதல், குழு உணர்வு, தனியாள் நடத்தையை நேர்மறையானதாக மாற்றிக்கொள்ளல், சிறந்த தொடர்பாடல் ஆகிய விடயங்கள் பாடசாலையொன்றில் விஷேட நடைமுறையை செயற்படுத்துவதற்கு அவசியமானதாகும்.

விஷேட நடைமுறை பற்றிய குறைவான விளக்கம், நடைமுறைக்கு மாறுவதற்கான ஆதரவு குறைவாக இருத்தல், நடைமுறையை செயற்படுத்துவதற்கு தேவையான வசதிகள், தேர்ச்சிகள் குறைவாக இருத்தல் போன்ற காரணங்களினால் விஷேட நடைமுறையை செயற்படுத்தும்போது பிரச்சினைகள் ஏற்படலாம். ஆகவே பாட-சாலையினுள் ஆக்கத்திறன் மிக்க வியூகங்களை விஷேட நடைமுறையாக அபிவிருத்தி செய்யும் போது பாடசாலையின் தலைவர்கள் அவ்வாறான நிலைமைகள் பற்றி மிக்க அவதானத்துடன் செயற்படுதல் வேண்டும்.

2015 இல் இருந்து கல்வி அமைச்சினால் பாடசாலைக்கல்வியின் பண்புசார் விருத்திக்காக அறிமுகப்படுத்தப்படுகின்ற புதிய மதிப்பீட்டுச் செயற்பாடுகளினுள் அவதானிக்கப்படுவது பாடசாலை நடைபெறும்போது ஏற்படுகின்ற பிரச்சினைகளை பாடசாலை மட்டத்தில் தீர்த்துக்கொள்வதற்காக ஆக்கபூர்வமான உபாயங்களை விஷேட நடைமுறையாக அபிவிருத்தி செய்து நடைமுறைப்படுத்துவதன் முக்கியத்துவம் பற்றியே ஆகும். அவ்வாறே பாடசாலையில் பயன்படுத்தப்படுகின்ற அத்தகைய சிறந்த செயற்பாடுகள் இருப்பின் அவற்றை பாடசாலை வெளிவாரி மதிப்பீட்டாளர்கள் இனங்கண்டு வலய, கோட்ட பாடசாலைகளிடையே பிரபல்யப்படுத்தவும் அதனூடாக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் காணப்படுகின்ற விஷேட நடைமுறைகளை இனங்கண்டு அவற்றை மதிப்பீட்டுக்கு உட்படுத்துவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. அதன் பிரகாரம் 2014 மற்றும் 2015 வருடங்களில் நாட்டின் பாடசாலைகளிலிருந்து சமர்ப்பிக்கப்பட்ட நடைமுறைகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட விஷேட நடைமு-றைகளுக்கு கல்வி அமைச்சினால் விருது வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறே அத்தகைய விஷேட நடைமுறைகள் பற்றி நாட்டின் சகல பாடசாலைகளுக்கும் தெரியப்படுத்துவதற்காக 2014 ஆம் ஆண்டில் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட சிறந்த நடைமுறைகளைத் தொடர்புபடுத்தி “பாடசாலையின் விஷேட நடைமுறைகளுக்கான பிரவேசம்” என்ற நூலை 2015 ஆம் ஆண்டில் கல்வி அமைச்சின் முகாமைத்துவ தர உறுதிப்பாட்டுக்கிளை வெளியிட்டது. இவ்வெளியீட்டுக்கு இணைவாக பல பாடசாலைகளின் விஷேட நடைமுறைகளை உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட வீடியோ நிகழ்ச்சித் திட்டமொன்றையும் இறுவட்டாக சகல பாடசாலைகளுக்கும் வழங்க நடவடிக்கை மேற்கொண்டது.

2015 மற்றும் 2016 ஆம் வருடங்களில் பாடசாலைகளில் செயற்படுத்தப்பட்ட விஷேட நடைமுறைகளை இனங்கண்டு, அச் செயற்பாடுகளை முன்மாதிரியானவையாக கொள்வதற்கு இந்த “பாடசாலைகளின் விஷேட நடைமுறைகளுக்கான பிரவேசம் 2” என்ற வெளியீடு பாடசாலை முறைமைக்கு முன்வைக்கப்படுகின்றது. இந்த புத்தகத்தை சகல அதிபர்களும் பரிசீலனை செய்வதோடு சகல ஆசிரியர்களுக்கும் வாசிப்பதற்கு சந்தர்ப்பமளிப்பதன் மூலம் பாடசாலைகளின் அபிவிருத்திக்கான ஆக்கபூர்வமான பிரவேசத்திற்கும் விரிவான சிந்தனைக்கு வித்திடுவதற்கும் வழியமைத்துக் கொடுக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

# உல்லை

1. உழைப்போம் சேமிப்போம்
2. மின்னும் குரு தாரகை
3. பற்களைப் பாதுகாக்க பள்ளி செல்வோம்
4. சொன்னவை மறந்துவிட்டன, பார்த்தவை என்றுமே ஞாபகம்
5. தளவடிவாம் பூங்காவால் வனப்பு பெற்ற சிறு பள்ளி
6. தேசிய வைத்திய சிகிச்சை முறை செயற்திட்டம்
7. கற்றலுக்கு புத்துயிரூட்டும் சத்துணவு
8. தலைமைத்துவத்துக்கான அரவணைப்பு
9. தூய்மையான சூழல்
10. வகுப்பறை வேலைத்திட்டம்
11. பாடசாலைக்கு வலுவூட்டும் வலுசக்திச் சங்கம்
12. நடுவினில் மிளிரும் கல்லூரி
13. புதுமை காண்பிக்கும் நூலகம்
14. எங்கள் வகுப்பறையே சிறந்தது.
15. ஊக்கமளித்த ஊடகப்பிரிவின் ஆசான்
16. வைத்தியசாலைக்கு உதவுதல்
17. அழகியல் திறனை வெளிப்படுத்த மேலதிக ஒரு மணிநேரம்
18. ஒன்று பட்டால்.............!!!
19. மறைந்திருக்கும் திறன்களைத் தேடி
20. உலகளாவிய நடமாடும் அறிவகச் சாதனம்

21. உயிர் கூடும் (ஜீவ கொட்டுவ) விளை நிலமும்

22. நற்பழக்க வழக்கங்கள் 365 நாட்கள்

23. விண்வெளிப் பயணம

24. எமது பாடசாலைக்கும் வீதி விளக்கு

25. தேயிலைத் தோட்டத்திலே கூட்டம்

26. சிந்தனை ஊற்றை திறந்திடலாமா........

27. பாடசாலை நாட்குறிப்பு

28. தொலைத் தொடர்பினால் புதுவாழ்வு பெறும் பாடசாலை

29. வேடிக்கையாக கணிதத்தைக் கற்போம்

30. சிறுதுளி......!!

31. ஆசிரியரின் விம்பம்

32. பாடசாலையில் உருவான மாதிரி மிருகக் காட்சிச் சாலை

33. எங்கள் பாடசாலை வரைபடம்

34. ஹெலபட பாரம்பரியத் தேசிய நெல்லினத்தை அறிமுகப்படுத்தும் செயற்றிட்டம்

35. பழையன கழிதலும் புதியன புகுதலும்

36. மேலதிகமாக சிந்தித்து பரிசு வெல்லுங்கள்

37. போதைப்பொருள் பாவனையிலிருந்து மாணவர்களை விடுவிப்போம்

38. சகல மாணவர்களுக்குமான சுயவிபரக்கோவை

39. **CCTV**

40. புத்தெழுச்சி

*எண்ணற்கரிய அனுபவங்களை அனுபவித்து தேசத்தின் கல்வி நோக்கங்களுக்காக அர்ப்பணிப்புடன் பாடசாலை பிள்ளைகளது அறிவுக் கண்களை திறப்பதற்காக அயராது உழைக்கின்ற பாடசாலைகளை வலிமை மிக்கதாக்க ஆக்கத்திறனும் விளைதிறனுமிக்க வழிவகைகளை மேற்கொள்கின்ற அதிபர்கள், பாடசாலைத் தலைவர்கள், ஆசியர்களுக்காக இந்நூலை கௌரவத்துடன் கையளிக்கின்றோம்.*

# 1. உழைப்போம் சேமிப்போம்

நாளாந்த ஜீவனோபாயத்தை ஓட்டிச்செல்கின்ற பெற்றோர்களது பிள்ளைகளை உள்ளடக்கிய எமது பாடசாலையில் மாணவர் மத்தியில் சேமிப்பு பழக்கத்தை மேலோங்கச் செய்தல் மற்றும் எதிர்காலம் தொடர்பான உயர் வாழ்க்கைக் குறிக்கோள்களை ஏற்படுத்துவதற்காக செயற்றிட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தல் எமது நோக்கமாகும். அனைத்து மாணவர்களும் பாடசாலையை விட்டு விலகிச் செல்லும் போது யாதேனும் ஒரு சுய தொழிலை ஆரம்பிக்கவோ அல்லது உயர்கல்வியைத் தொடர தேவையான குறிப்பிட்டளவு நிதியினை வங்கிக் கணக்கில் வைப்புச் செய்ய எதிர்பார்க்கிறேன். அத்தோடு சந்தையொன்றில் நடைமுறைசார் செயற்பாடுகள் தொடர்பான விளக்கமளித்தல் மற்றும் வீட்டுத் தோட்ட உற்பத்தி மாணவர்களை ஈடுபடுத்தல் கணித எண்ணக்கரு, மொழித்தேர்ச்சி போன்றவற்றை மாணவர் மத்தியில் ஏற்படுத்துவதனை நோக்கமாக கொண்டு "உழைப்போம், சேமிப்போம், உலகை வெல்வோம்" என்ற திட்டமானது பாடசாலையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

மேற்படி திட்டம் தொடர்பாக ஆசிரியர்கள் குழாத்தின் முன்மொழிவுகளை வினவியபோது கீழே குறிப்பிடப்படும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

- மாணவர்களை வீட்டுத் தோட்ட உற்பத்தியில் ஈடுபடுத்தல் மற்றும் வீட்டுத்தோட்டத்தில் பெற்றுக் கொள்கின்ற அறுவடைகளை பாடசாலையில் மாதமொருமுறை நடத்தப்படுகின்ற சந்தையில் விற்பனை செய்தல்.
- தெங்கு உற்பத்திப் பொருட்களை விற்று பணம் சம்பாதித்தல்.
- தினசரி தமது தேவைகளுக்காக கிடைக்கும் நிதியில் ஒரு பகுதியை சேமித்தல்.
- சேமிப்பு தொடர்பாக பெற்றோர் மற்றும் மாணவர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
- அனைத்து மாணவர்களுக்கும் வங்கிக் கணக்கினை ஆரம்பித்தல்.
- மாதாந்தம் ஒரு முறை வங்கி ஊழியர்களை பாடசாலைக்கு அழைத்து மாணவர்கள் நிதியினை வைப்பிலிட வாய்ப்பளித்தல்.
- மாணவர்களின் வங்கிக் கணக்கில் சேமிப்புத் தொகையை அதிகரித்தல்.



இதன் மூலம் அனைத்து மாணவர்களும் 11ஆம் தரத்தில் தமது கல்வியை பூர்த்தி செய்யும் போது ஆகக்குறைந்தது 50000/= ருபா அவர்களின் வங்கிக்கணக்கில் சேமிப்பில் இருக்குமென அதிபர் நம்பிக்கையளித்தார்.

(அநுராதபுரக் கல்வி வலயம் மகமான்கடவல மற்றும் கம்பஹா கல்வி வலய வெலிக்கடமுல்ல வித்தியாலயத்தின் செயற்றிட்டத்தை தழுவியது.)

## 2. மின்னும் குரு தாரகை

ஒரு நாள் காலை 7.30 மணிக்கு ஓட்டமும் நடையுமாக காரியாலயத்தினுள் நுழைந்த திருமதி. சிவரஞ்சனிக்கு அதிபரின் காரியலயத்திலிருந்து ஒரு வேதனையுடனான குரல் கேட்டது.

"என்ன செய்வதென்று புரியல்ல சேர். புத்தகத்தில் சிவப்பு மையினால் எழுதப்பட்ட பெயர்கள் தான் அதிகமா இருக்கு, தினமும் வாரவங்கள விட லீவு எடுக்குற டீச்சஸ்தான் கூட"
அது அபிவிருத்தி உதவியாளர் திருமதி மேரியின் புலம்பல்.

"நானும் அதத்தான் புள்ள யோசிச்சிகிட்டு இருக்கேன் இந்த டீச்சஸ்ட லீவக் குறைக்க ஏதாவது ஒரு வழியத் தேடிப்பிடிக்கணும்" இது அதிபரின் ஆதங்கம்.

அதிபர் அவர்கள் மேரிக்கு வழங்கிய பதில், திருமதி சிவரஞ்சனிக்குத் தெளிவாகக் கேட்டது. 7.30 மணிக்கு அடித்த சிவப்புக் கோட்டுக்குக் கீழே தமது வழமையான கை-யொப்பத்தையிட்ட பின் அதிபரின் பிரச்சினைக்கு ஒரு தீர்வைப் பற்றிச் சிந்தித்தவாறே ஓய்வறையை நோக்கி நடந்தார்.

என்னோட தவறும் தான். இனிமேல் ஒரு நாளும் நான் தாமதித்து வர மாட்டேன். நாம் அறிவைத் தேடி வைத்துக் கொண்டு சின்னப் பிள்ளைகளின் காலத்தை வீணாக்குவது நல்லதல்ல. நேரத்திற்கு வேலை செய்ய சின்னப் பிள்ளைகளுக்கு முன் மாதி-ரியாக இருக்க வேண்டிய நாம், தாமதித்து வருவது பெருந் தவறு. பாடசாலைக்குத் தாமதித்து வர்ர பிள்ளைகளுக்கு தண்டனை வழங்கும் நாமே பாடசாலைக்கு தாமதித்து வருவது எவ்வளவு கேவலம்? ஆசிரியை தமது தவறை உணர்ந்து தன்னை மாற்றிக் கொள்ள உறுதி பூண்டார். அவ்வாறே தினமும் மாலை நேரங்களில் ஆசிரியர் வரவுப் புத்ததகத்தை அவதானித்து ஒரு புத்தகத்தில் குறிப்பெடுத்துக் கொள்வதை பல நாட்களாக அவதானித்த மேரி, திருமதி சிவரஞ்சனியிடம் அது பற்றி விசாரித்தார்.

"இன்னும் சில நாட்கள் பொறுத்துப் பாருங்களேன் மேரி! நீங்களே ஆச்சரியப்படுவீங்க" திருமதி சிவரஞ்சனி பதிலளித்தார்.

அடுத்த மாதம் முதலாம் வாரத்தில் பிரதான காலைக் கூட்டத்தில் ஏதோ ஒரு விசேடம் இருப்பதைக் குறிக்கும் வகையில் முன்னாலிருந்த மேசையில் பல பொருட்கள், ஆசி-ரியர்கள் மாணவர்கள் எல்லோருக்கும் தெரியுமாறு வைக்கப்பட்டிருந்தன.

காலை ஆராதனையின் பின்னர் திருமதி சிவரஞ்சனி மேடைக்கு வந்தார். அதிபரையும் அன்போடு மேடைக்கு அழைத்தார்.

நீண்டகாலமாக பாடசாலையில் காணப்பட்ட பிரச்சினைக்குத் தீர்வாக தாம் முன்னெடுத்த செயற்திட்டத்தைப் பற்றி முதலில் திருமதி சிவரஞ்சனி சபையில் விவரித்தார். பாட-சாலைக்கு நேரத்தோடு வந்த 5 ஆசிரியர்களின் பெயர்களை முறையே 1, 2, 3, 4, 5 ஆம் இடங்களைப் பெற்றுக் கொண்ட ஒழுங்கில் அழைத்து சிவப்பு, பச்சை, நீலம், மஞ்சல், ஊதா என ஐந்து வர்ணங்களில் நட்சத்திரங்களை அதிபரின் கரங்களால் அணிவித்தார். அந்த மாதத்தில் தவறாது பாடசாலைக்கு வந்த ஆசிரியருக்கு ஒரு பரிசும் வழங்கப்பட்டது. கூட்டத்திலிருந்த அனைத்து ஆசிரிய, ஆசிரியைகளும் முகத்தை முகம் பார்த்துக் கொண்டார்கள். தொடர்ந்து பேசிய அதிபர் திருமதி சிவரஞ்சனியின் திட்டத்தைப் பெரிதும் பாராட்டிப் பேசினார்.

செயற்திட்டத்தின் விசேடமான அங்கத்தை, அனைவரும் பாடசாலை விட்டு கையொப்பமிட காரியாலயத்திற்கு வந்த சமயத்திலேயே அவதானித்தார்கள்.

ஆசிரியர் கையொப்பமிடும் புத்தகம் வைக்கப்படும் மேசையின் மேலாக சென்ற மாதம் சிறந்த வரவுக்காகப் பரிசு பெற்ற ஆசிரியை ஒரு புகைப்படத்தில் சிரித்துக் கொண்டிருக்க அதற்குக் கீழாக "சென்ற மாதத்தின் விசேட ஆசிரிய நட்சத்திரம் நானே!" என அச்சிடப்பட்டிருந்தது.

அன்றைய நாள் இவ்வாறு மகிழ்ச்சியோடு நிறைவுற்றாலும் **இந்நாள் பாடசாலையின் தலையெழுத்தைத் மாற்றி எழுதும் ஒரு நாள்** என யாரும் நினைக்கவில்லை. அன்றிலிருந்து அனைத்து ஆசிரிய ஆசிரியைகளும் காலை 7.30 மணிக்கு முன்னர் பாட-சாலைக்கு வந்தனர். அத்தியாவசிய தேவைக்காகவன்றி யாரும் லீவு எடுப்பதையும் தவிர்த்துக் கொண்டனர்.



(நாளடைவில் பாடசாலையின் சகல ஆசிரியர்களும் தாரகைகளாக மின்னத் தொடங்கினர். வேதர கனிட்ட வித்தியாலயம் - ஹோமாகம கல்வி வலயம்)

# 3. பற்களைப் பாதுகாக்க பள்ளி செல்வோம்

ஒரு ஆசிரியர் என்ற வகையிலும், அதிபர் என்ற வகையிலும் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் இச்செயற்திட்டத்தை உள்ளம் நிறைந்த மகிழ்ச்சியுடன் சமர்ப்பணம் செய்கின்றேன்.

ஒரு பொழுது 'பல் வலிக்குது சேர்' என ஓடிவரும் மாணவர்களும், அவர்களுடன் வரும் ஆசிரிய உறவுகளும் வேண்டுவது பல் வலிக்கும் மாணவர்களை வீட்டிற்கு அனுப்ப பெற்றாரை அழைக்கும் பணிக்கு உதவுங்கள் என்பதே. தொடர்ச்சியாக மாணவர்கள் இவ்வாறு நோய்வாய்ப்படுவது அவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு ஒரு தடையாக இருப்பதால், இதற்கான ஒரு தீர்வுபற்றி சக ஆசிரியர்களுடன் ஒரு கலந்துரையாடலை ஆரம்பித்தேன்.

அப்போது மாணவர்கள் முறையாக பல்துலக்காததன் காரணமாக அருகிலிருந்து பயிற்சிப் புத்தகம் திருத்தும் போது அவர்களின் வாயிலிருந்து துர்வாடை வருவதாகத் தெரிவித்தார். அவ்வாறே ஆசிரிய குழாத்தின் அநேகரின் கருத்தின் படியும் பெரும்பாலான மாணவர்கள் பல் துலக்குவதில்லை என்பது தெரியவந்தது. கலந்துரையாடல் முடிவுற்ற போதிலும் எனது உள்ளம் இருட்டறையில் விடப்பட்ட மான் குட்டியைப் போல் வேகமாக அங்குமிங்கும் ஓடியது. வறுமை மட்டுமன்றி கல்வியறிவுமில்லாத இந்த அப்பாவிகளான தோட்டப்புற கீழ் வகுப்பு பெற்றாரின் பிள்ளைகளை இந்த இருளிலிருந்து மீட்டெடுக்க ஒரு செயற்திட்டத்தை அமுலாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தேன். இதற்காக மறுதினமே பிரதேச பல்வைத்தியரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இதுபற்றிக் கதைக்க ஒரு நேரத்தை ஒதுக்கிக் கொள்ள முடியுமானது.

ஒரு பாடசாலை நாளில் மாணவர்களுக்கும், பெற்றாருக்கும், ஆசிரியர்களுக்குமாக

- பல்துலக்கும் சரியான முறை
- பல்துலக்கப் பொருத்தமான பற்தூரிகையை தெரிவுசெய்வது எவ்வாறு?
- பயன்படுத்த வேண்டிய பற்பசையின் அளவு
- பல்துலக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் என்பன பற்றி விளக்கமளிக்கும் ஒரு கூட்டம் நடந்தது.

மேலும் பற்களில் படிந்திருக்கும் மஞ்சள் கறைகளை உப்பு நீரினால் அகற்ற முடியுமெனவும் பல்வைத்திய அதிகாரி கூறினார்.

இதற்கேற்ப வாரத்தில் முதல் நான்கு நாட்களும் காலையுணவைத் தொடர்ந்து பல் துலக்கப்பட்ட அதே நேரம் வெள்ளிக்கிழமை தினங்களில் இலைக் கஞ்சி பருகிய பின்னர் உப்புநீர் கொண்டு வாய் கழுவவும் மாணவர்களைப் பழக்கப்படுத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது. இதற்கு முக்கிய காரணம் பற்களில் கறை படிவதைக் குறைப்பதாகும்.

மறுநாள் நான் வகுப்பறை மேற்பார்வைக்குச் சென்றபோது வகுப்பறையில் கற்பித்தல் உபகரணங்களுக்கு மேலதிகமாக மாணவர்களின் பற்தூரிகைகளை வகுப்பில் வரிசையாக வைத்திருக்கும் அபூர்வ காட்சியைக் காணமுடிந்தது. சின்னையா முதலாளி அன்பளிப்புச் செய்த பற்பசையை ஒரு கடலை விதையின் அளவு மாணவரின் பற்தூரிகைகளில் எடுத்து வைக்க சகல வகுப்பு ஆசிரிய ஆசிரியைகளும் தவறவில்லை.

மணித்தியாலங்கள், நாட்கள், வாரங்கள், மாதங்களாகும் போது பல் துலக்குவதில் மாணவருக்கிருந்த அசமந்தப் போக்கு நீங்கி பல் துலக்குவது ஒரு விருப்பமான செயலாக மாறியிருந்ததோடு உப்புநீரில் வாய் கழுவுவதால் மாணவரின் வாய்ச் சுகாதாரம் உயர் மட்டத்தில் இருப்பது பாடசாலை பற் சிகிச்சைப் பரிசோதனையின் போது தெரிய வந்தது. அவ்வாறே இரவுவேளைகளில் அறிவிக்காது வீடுகளுக்குச் சென்று மாணவர்கள் பல்துலக்கும் முறை, மற்றும் சுகாதார முறையில் உடை அணிவது பற்றியும் இரகசியமாக தேடிப்பார்ப்பதன் மூலம் மாணவர்களை சிறந்த சுகாதார வழிகளைப் பின்பற்ற வைக்க எனக்கும் ஆசிரியர் குழாமுக்கும் முடியுமாக இருந்தது.

சிறுவயது முதல் பல் துலக்குவதில் அசிரத்தை காட்டிய எனது பிள்ளையும் இப்போது விருப்பத்துடன் பல் துலக்குவதால் இந்தக் குறிப்பை எழுதும் போது என் கண்கள் குளமாகின. **'பிறருக்கு நல்லது நாடுவோர் மோட்சம் பெறுவர்'** என்ற புத்தரின் கூற்று நினைவுக்கு வரும்போது நானும் எனது ஆசிரியர் குழாமும் இதன் மூலம் மோட்சம் பெறுவோம் என்பதை நினைத்து மகிழ்ச்சி அடைகிறேன். நாம் செய்யும் நல்லவைகள் எமக்கும் நல்ல பெறுபேற்றைப் பெற்றுத் தரும் என்பது புரிந்தது, “ எதிர்காலத்தில் தான் ஒரு பல்வைத்தியர் ஆவேன்” என்று எனது மகன் வகுப்பாசிரியரிடம் சொல்வது எனது காதுகளுக்குக் கேட்ட பொழுது நான் ஈன்ற பொழுதில் பெரிதுவந்தேன்.



(தம்புத்தேகம கல்வி வலயத்தில் அலுத்கந்திரியாகம் வித்தியாலயத்தின் செயற்பாட்டின் அடிப்படையில்)

## 4. சொன்னவை மறந்துவிட்டன, பார்த்தவை என்றுமே ஞாபகம்

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை வகுப்பாசிரியர்களுக்காக நடத்தப்பட்ட கலந்துரையாடலின் போது, வினாப்பத்திரத்தில் தொழிற்சாலை தொடர்பான வினாக்கள் பற்றி மாணவர்களுக்கு போதிய தெளிவின்மையால் பிழையாக பதிலளிக்கப்பட்டும் சில வினாக்கள் கைவிடப்பட்டும் இருந்தமை பெரும்பாலானோரின் பார்வைக்குப்பட்டது.

தற்கால கற்றல் கற்பித்தல் செயற்பாட்டினுள் பாடசாலைச் பிள்ளைகளுக்கு எதையாவது பார்த்து அனுபவிக்க ஒழுங்கு செய்வதானது முறையான கற்றலின் உயர் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக அமையும்.

இவ்வாறான செயற்பாடுகளின் தேவை ஆரம்பப் பிரிவு வகுப்புகளுக்கு வேண்டி நிற்பது அவர்களுக்கு விரிவுரை முறையில் பெரும்பாலான விடயங்களை கிரகித்துக் கொள்ள முடியாமையினாலாகும். அந்த பிரச்சினையை வெற்றி கொள்வதற்கு 5 ஆம் தர புலமை பரிசில் பரீட்சையில் தொழிற்சாலை சார்ந்த சொற்கள் மற்றும் உபகரணங்கள் பற்றி வகுப்பறையில் ஏற்படும் கற்றல் இடர்பாடுகளை குறைத்துக் கொள்வதற்கு முயற்சிக்கப் பட்டது பிள்ளைகளுக்கு பத்து தொழிற்சாலைகளை தெரிந்து அது தொடர்பாக சிறந்த விளக்கத்தை பெற்றுக் கொடுக்க அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டனர். இங்கு தொழிற்சாலைகள் தொடர்பான சகல பொருட்களையும் உள்ளடக்கி காட்சிப்படுத்துவது தொடர்பான ஆக்கபூர்வமான ஆலோசனைப் பிரகாரம் தொழிற்சாலை நூதன சாலையொன்றை நிர்மாணிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதனூடாக மாணவர்களுக்கு எப்பொழுதும் காண முடியாத தொழிற்சாலை உபகரணங்களைப் போன்றே அத்தொழிற்சாலைகளில் தொழில்புரியும் தொழிலாளர்களின் சிலைகளை வடித்தும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. கடற்றொழில் சுரங்கத் தொழில், பயிர்ச்செய்கை, பண்ணை நிர்வகிப்பு, நெசவுத் தொழில், மட்பாண்டக் கைத்தொழில் போன்ற பாரம்பரியத் தொழில்கள் அவற்றுள் அடங்குகின்றன. இது பிள்ளைகளின் அறிவுப் புத்துணர்ச்சியை தோற்றுவிப்பதற்கு துாண்டுகோலாக அமைந்துள்ளமை தெ-ரியவருகின்றது. தம் கண்களால் எதையும் பார்ப்பதானது ஆயிரமாயிரம் சொற்களையும் வாக்கியங்களையும் விட மாணவர் மனதில் பதியும் என்பது எம் அனைவரினதும் கருத்தாகும்.

சகல ஆரம்பப் பிரிவு மாணவர்களும் பாடத்தின் போது தொழிற்சாலை சார்ந்த உபகரணங்களை அறிமுகப்படுத்தும் சந்தர்ப்பத்தில் அதன் பால் ஈர்க்கப்பட்டு பிரயோக செயற்பாடுகள் மூலம் தொட்டு உணர்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. மாணவர்களிடத்தே நிலவுகின்ற தொழிற்சாலை சார்ந்த பிரச்சினைக-ளுக்கு இந்நுாதனசாலை மூலம் தீர்வு கிடைத்துள்ளதாக ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள். அதாவது தொழிற்சாலை சார்ந்த நிலைகாண் பரீட்சையின் போது எல்லா மாணவர்களும் நல்ல முறையில் பதிலளித்திருப்பது தெரிய வந்துள்ளது. வேறு வகையில் மாணவர்கள் அறிவினை விருத்தி செய்யவும், இப் பொருட்களை வேறு விதங்களில் நிர்மாணித்து புத்தாக்கங்களில் மாணவர்கள் ஈடுபடவும் இந்நுாதனசாலை வழிவகுத்துள்ளமையை காண முடிகின்றது.


அத்தோடு அவர்களது இந்த நற்பணி மூலம் இந்நுாதனசாலை மாகாணத்தின் பிள்ளைகளது கல்வி மத்திய நிலையமாக மாறியமை பாராட்டுக்குரிய விடயமாகும்.

(எண்ணக்கரு :- மே.மா / ஜய / இஹல போமிரிய கனிஷ்ட வித்தியாலயம்)

## 5. தளவடிவாம் பூங்காவால் வனப்பு பெற்ற சிறு பள்ளி

முகங்கள் பல கொண்டு
விளிம்புகளும் அதற்குண்டு
மேலிருந்து நோக்குகையில்
வடிவமொன்று தோன்றிடுதே
முப்பரிமாணமென
கூறுகின்றார் ஆசானும்.

வட்டமுடன் முக்கோணி
பலவித மாய் அதனோடு
நாற்பக்கல் போலங்கு
ஒரு புறத்தில் இரு சதுரங்கள்
அதற்குள்ளே பூங்காவாம்
அறிந்திட்டோம் அவையனைத்தும்.
இருபரிமாணமவை-இது
வன்றோ பூம்பாத்தி.



கூட்டலும் கழித்தலும் தான்.
கணக்கு என்று சொல்லிடுவார்.
பார்த்தவுடன் மாணவர்கள்
கண்டிடுவார் வடிவமதை.
கூட்டலையும் கழித்தலையும்
விரும்பாத பிள்ளைகளும்
பார்த்தவுடன் பூம்பாத்தி
விருப்புடனே கற்றிடுவார்.

என்றைக்கும் அழியாத
எண்ணறிவை மேம்படுத்தும்
எமக்கெல்லாம் ஆசையான
பூங்காவை அமைத்தோம்

கோபமென்று இருந்தாலும்.
நோகவில்லை அவர் நெஞ்சம்
சிரித்திடுவாள் மறுநாளில்
கதைத்திடுவாள் பாசமுடன்
வாஞ்சையுடன் பெற்றாரை
அழைத்திடுவாள் ஆசிரியை.

பெற்றோரும் ஒன்று சேர்ந்து
வெளிதனிலே உரையாட
நாள்தோறும் படிப்படியாய்
எண் பூங்கா தோன்றியது

உருளையுள் தான் எத்தனை பக்கம்
கனவுருக்கு எத்தனை உச்சி
பன்னிரண்டு விளிம்புகளின் கனவுருவை
உடனுக்குடன் நாம் சொன்னோம்

இருபரிமாண வடிவத்தை முப்பரிமாண முறையினிலே
சொன்னாலும் எங்களுக்கு விளங்காமற் போனதன்றோ
காணும்வரை முறையான தளவுருவ வடிவங்களை
கண்ணெதிரே கணிதப் பூங்காவின் ஒழுங்கமைப்பில்

(ஹொரண,குருகொட
க.வி மற்றும்
பொலன்னறுவை வலய
பொக்குனுகல ஆரம்பப்
பாடசாலையிலிருந்து
தொகுக்கப்பட்டது)

# 6. தேசிய வைத்திய சிகிச்சை முறை செயற்திட்டம்

ராஜாங்கன யாய :- மஹசென் மஹாவித்தியாலயம்

தொலைக்காட்சி நேர்காணல்

**"வில்லையிலிருந்து–மரப்பட்டைக்கு"**
தொலைக் காட்சிக் கலையகத்தில் ஒலிப்பதிவு செய்யப்பட்ட மேற்படி கலந்துரையாடலில் கொழும்பு பல்கலைக்கழக உள்நாட்டு மருத்துவ நிறுவகத்தின் பேராசிரியர், விஞ்ஞானப் பாடப் பொறுப்பாசிரியர், "நீண்ட ஆயுள்" உள்நாட்டு மருத்துவப் பிரிவின் தலைவர், மற்றும் செயலாளராகக் கடமையாற்றும் மாணவ, மாணவிகளுடன் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளரும் கலந்துகொள்கின்றார்.

**தொகுப்பாளர்:-** காலை வணக்கங்கள் கூறி உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்றுக் கொள்கின்றேன். எமது நாட்டில் எமக்கே உரித்தான ஒரு மருத்துவ சிகிச்சை முறையொன்று காணப்படுகின்றது. இம்முறையானது ஒரு நீண்ட கால வரலாற்றைக் கொண்டதாக இருந்தபோதிலும் கூட மேற்கத்தைய வைத்தியத்தின் கவர்ச்சி எங்கள் அனைவரையும் முழுமையாக ஆக்கிரமித்து அடிமைப்படுத்தி விட்டுள்ளமை கவலைக்குரிய விடயமாகும். இவ்வாறான சூழ்நிலையில் ஒரு கஸ்டப் பிரதேச மாணவர்கள் மேற்கொண்டுள்ள இம்முயற்சியை நாம் மிகுந்த மகிழ்ச்சியுடன் பாராட்டுகிறோம். முதலில் நாம் இந்த நிகழ்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் ஒத்துழைக்கும் எமது ஆசிரியையிடம் இது தொடர்பான எண்ணம் முதன் முதலில் தோன்றியது எவ்வாறு எனக் கேட்போம்.

**ரூபிகா ஆசிரியை**:- ஆம் எமது பாடசாலை மிகவும் கஸ்டப் பிரதேசத்தில் அமைந்துள்ளது. அநேக பெற்றார்கள் கமத்தொழில் செய்தே வாழ்க்கை நடாத்துகிறார்கள். போசாக்குக் குறைபாட்டினால் அநேக குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். வழமையாக பாதிக்கப்படும் குழந்தைகளுக்கு நாம் பனடோல் மாத்திரையை மட்டுமே வழங்குவதுண்டு.

இங்கு நான் எமது பாடசாலை அதிபரை கட்டாயமாகக் குறிப்பிட வேண்டும். இந்தப் பணியை மேற்கொள்ள அவர் பெரும் உந்துசக்தியாக விளங்கினார். பின்னர் எமக்கு மாகாண சபையிடமிருந்தும், ஆயுர்வேதத் திணைக்களத்திடமிருந்தும் ஆயுர்வேத ஔடதங்கள் மட்டுமின்றி இலைக் கஞ்சி தயாரிப்பதற்கான உபகரணங்களையும் பெற்றுத்தந்தார். இவற்றைப் பாதுகாத்துக் கொள்வதற்கு தனி அறையும் தந்தார்.

**தொகுப்பாளர்** :- அப்படியாயின் இலைக்கஞ்சி வியாபாரத்தையும் தொடங்கினீர்களா?

**சுபுன்** :- ஆம். நாம் அதைப் பெரிய அளவில் செயற்படுத்தினோம். பெற்றாரின் ஒத்துழைப்போடு "வாழ்க்கை ஔடதம்" என்ற பெயரில் இலைக் கஞ்சி தயாரித்து மாணவர்களுக்கு சிறிய தொகைக்கு விற்பனை செய்தோம். இதனை பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் சொக்கலிங்கம் மாமா தான் மேற்கொண்டார்.

**திரு:- சொக்கலிங்கம்** ஆம். மாணவர்கள் ஆரம்பித்த இப்பணி அனைத்து மாணவர்களுக்கும் பெரும் சேவையாக அமைந்தது. இங்கு மாணவர்கள் மரப்பட்டை, மரமூலிகை வில்லை, மூலிகைக் கட்டு என்று பழகி விட்டார்கள். ஔடதபானம், இலைக்கஞ்சி பிரபல்யமாகி விட்டது. இப்போது ஒரு சங்கத்தை அமைத்து பெற்றாரும் இத்திட்டத்திற்கு உதவுகிறார்கள்.

**ரூபிகா ஆசிரியை** :- ஆம் இப்போது எமக்கு ஒரு நிரந்தர கட்டடம் இருக்கின்றது. கம்பினாலும் மண்ணினாலும் தயாரிக்கப்பட்ட சிறிய குடிசையில் முழுமையான பண்டைய தேசிய அம்சங்களை உள்ளடக்கி இருக்கின்றோம். ஔடதபான செயற்திட்டம் பிரபல்யம் அடைந்துள்ளது. அனைத்து வைபவங்களுக்கும் நாம் ஔடத பானத்தையே வழங்குகிறோம்.

**சுபுன்** :- அது மட்டுமல்ல நாம் எமது ஊரிலுள்ள பரிகாரியைப் போன்று வைத்தியம் அறிந்த வைத்தியர்களை அழைத்து வந்து கிராமத்தவர்களுக்கு வைத்திய உபதேசங்களை நடத்துகிறோம். அத்துடன் மாதிரி மூலிகைத் தோட்டத்தை நாம் வெற்றிகரமாக பரிபாலிக்கின்றோம்.

**தொகுப்பாளர்** :- மிகவும் நல்லது. இத்திட்டத்திற்கு நாம் வாழ்த்துக் கூறுகிறோம்.

**அனைவரும்** :-
மிகவும் நன்றி.
வணக்கம்.




(எண்ணக்கரு:- தம்புத்தேகம கல்வி வலய ராஜாங்கனயாய 13/14 மகாசென் வித்தியாலயம்)

# 7. கற்றலுக்கு புத்துயிரூட்டும் சத்துணவு

காலைக் கூட்டம் ஆரம்பித்து 05 நிமிடங்கள் கூட கழிந்திராத நிலையில் காலை வெய்யிலைக்கூடத் தாங்க முடியாத சில மாணவர்கள் விளையாட்டு மைதானத்தில் மயங்கி விழ ஆரம்பித்தனர். இதனால் அவர்கள் மாணவ தலைவர்களின் உதவியோடு வகுப்பறைகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இவ்வாறு மாணவர்கள் காலைக் கூட்டத்தில் மயங்கி விழுவது ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் புதிய ஒரு விடயமல்ல. இது தொடர்பாக மனம் வருந்தாத ஆசிரியர்களும் இல்லாமல் இல்லை. இது பாடசாலை நிர்வாகத்திற்கு பெரும் பிரச்சினையாக உள்ளது. இது தொடர்பாக கர்ணா, தியாகு ஆகிய இரு ஆசிரியர்களுக்கிடையில் இடம்பெற்ற உரையாடல்:

‘‘பிள்ளைகள் தினமும் மயக்கமடைவது அவர்கள் உண்ணாமல் குடிக்காமல் வருவதால் தான்.’’

‘‘பிள்ளைகளுக்கு முறையாக உண்ண, குடிக்க கொடுக்க அவங்க பெற்றாருக்கு வருமானமோ நேரமோ இல்லதானே. பாவம் இந்த பிள்ளைங்க’’

பகலைக்கு பாடசாலை விட்ட பொறகு மரங்கள்ல காய்கள பிடுங்கி திண்ணுற பிள்ளைங்கள மத்த டீச்சர்ஸ் மிரட்டி உருட்டுறது கர்ணாவுக்கும் தியாகுவுக்கும் வேற ஒரு கோணத்துல தெரியுது.

‘‘இன்னைக்கும் இந்த பிள்ளைங்க மரத்துக்கு கல்லு அடிக்கிறாங்க. இந்த பிள்ளைங்க ஸ்கூலுக்கு வந்து என்னா படிச்சாங்கன்னு எனக்கு தெரியல. பிஞ்சி மாங்காயையும் பிடுங்குறாங்க’’

‘‘அது பிள்ளைங்கட குத்தமில்ல. அந்த பிள்ளைங்க பசிய தீத்துக்கிறதுக்கு மாங்காயாவது திண்ணுறாங்க’’

பாடசாலையில் மாணவர்களின் நலன்புரி விடயங்களை மதிப்பீடு செய்வதற்காக அதிபரால் நியமிக்கப்பட்ட ஆசிரியர் குழுவின் உறுப்பினர்களான கர்ணா மற்றும் தியாகு ஆகிய இருவரும் இணைந்து இந்தப் பிரச்சினைக்கு தீர்வொன்றை காண முனைந்தது அப்பாடசாலையின் மாணவர் நலன்புரித் துறை அபிவிருத்தி மிக முக்கியம் என்பதாலாகும். குறிப்பாக ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்காக அரசாங்கத்தின் சத்துணவு வேலைத்திட்டத்தினூடாக உதவி கிடைத்தாலும் 6-11 வரையிலான வகுப்புகளிலுள்ள 200க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு இது கிடைப்பதில்லை. கிழமையில் ஐந்து நாட்களுக்கும் போஷாக்கு நிறைந்த பானம் ஒன்றை மாணவர்களுக்கு வழங்குவதற்காக செயற்றிட்ட முன்வைப்பொன்றை கர்ணன் மற்றும் தியாகு ஆகியோர் தயாரித்தனர். அதற்கிணங்க வார நாட்களில் இலைக்கஞ்சி, குரக்கன் கஞ்சி, அரிசிக் கஞ்சி, வில்வம் பூ, பொன்னவரைப் பானம், பழப்பானம் என்பவற்றோடு மரக்கறிகூழ் போன்ற சத்துணவுப் பானங்களை வழங்குவதற்காக வேலைத்திட்டம் ஒன்றை வடிவமைத்தனர். கிராமியச் சூழலில் அமைந்துள்ள பாடசாலையென்பதால் சுற்றுப் புறச் சூழலில் இதற்கெனத் தேவையான மூலப் பொருட்களை இலகுவில் பெற்றுக்கொள்ளலாம். இதனால், கர்ணா இவ் வேலைத்திட்ட யோசனைகளை மிகுந்த எதிர்பார்ப்புடன் அதிபரிடம் சமர்ப்பித்தார். மாணவர்களது பெற்றோர் மற்றும் ஏனைய பாடசாலை சமூகத்தின் உதவியை இதற்கென பெற்றுக் கொள்வது தொடர்பாக இந்த யோசனையில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதற்கிடையில் தியாகுவால் சத்துணவு வேலைத்திட்ட யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டு வாரத்தில் ஐந்து நாட்களிலும் ஐவகையான சத்துணவுகளை இலவசமாக மாணவர்களுக்கு வழங்குவதற்கு திட்டமொன்று அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

"இருவரும் முன்வைத்த யோசனைகள் நல்லது தான். நான் வரவேற்கின்றேன். நண்பர்கள் இருவருக்கும் இதனை கூட்டாக செய்வதற்கான பொறுப்பை தனித் செயற்றிட்டமாக ஒப்படைக்கலாம். அப்போது இதனை மிகவும் வலுவாக செய்யலாம்." இது அதிபரின் கருத்து.

அதற்கிணங்க வாரத்தின் ஐந்து நாட்களுக்காகவும் 6-11 வரையிலான வகுப்பு மாணவர்களுக்கு ஏதாவதொரு போஷாக்கு பானத்தையோ அல்லது சத்துணவையோ வழங்குவதற்கு பெற்றோரினதும் சமூகத்தினதும் உதவியுடன் தேவையான செயற்பாடுகளை ஒழுங்கமைத்தனர். உத்தேச சத்துணவு வேலைத்திட்டத்தையும் அதற்கான கால அட்டவணையையும் பெற்றோர் சந்திப்பில் முன் வைக்கப்பட்டதோடு அதற்கு ஆதரவாக அனேகமானவர்களால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. அதனை நன்கு விளங்கிக் கொண்ட அதிபர் எதிர்காலத்தில் பெற்றோரின் ஒத்துழைப்பை இதற்கென பெற்றுக் கொள்ள முடியுமென எண்ணினார். சத்துணவு வேலைத்திட்டத்தின் முதல் வாரத்திற்கான கால அட்டவணையை தயாரித்ததோடு ஒவ்வொரு வகுப்பிலும் பெற்றோர் மூவர் என்ற அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டனர். உணவு மற்றும் பானவகைகளை தயாரிக்கும் போது அவற்றை மிகவும் சுவையானதாக தயாரிக்க வேண்டும் எனவும் தீரமானிக்கப்பட்டது.

| நாள் | உணவு | தரம் |
|---|---|---|
| திங்கட்கிழமை | கடலை | 06 |
| செவ்வாய் | பழச்சாறு | 07 |
| புதன் | சோறு | 08 |
| வியாழன் | அரிசிக் கஞ்சி | 09 |
| வெள்ளி | வற்றாளைக் கிழங்கு | 10 |

வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக அமுல்படுத்துவதற்கு சகல ஆசிரியர்களதும் ஒத்துழைப்பு மிக முக்கியம். இவ் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு உதவிய சகல ஆசிரியர்களையும் காலைக்கூட்டத்தில் பாராட்டுவதற்கு அதிபர் தவறவில்லை. இவ் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஒருமாதம் கடந்த நிலையில் அது தொடர்பாக பாடசாலையின் வெளிச் சமூகத்தினரின் ஒத்துழைப்பும் கிடைத்தமை இவ்வேலைத்திட்டத்திற்குக் கிடைத்த பெரு வெற்றியாகும் என்பது அதிபருக்கு விளங்கியது. தவணை இறுதியில் வேலைத்திட்டத்தை நடத்திச் செல்வது தொடர்பாக சுருக்கமான முன்னேற்ற அறிக்கை ஒன்றை கர்ணா, தியாகு ஆகிய இருவரும் முன் வைத்தனர். இதனை அதிபர் வெகுவாக பாராட்டினார்.

"உங்கள் இருவரினதும் வேலைத்திட்டம் கட்டாயமாக உங்களது செயலாற்றுகைக்கு மிகவும் முக்கியமானது. சகல ஆசிரியர்களும் தங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் துறையின் முன்னேற்றத்துக்கு இது போன்ற புதிய செயற்றிட்டங்களை செய்வார்களேயானால், சகல துறைகளிலும் முன்னேற்றம் ஏற்படும். அதன்போது பாடசாலையை சிறந்த மட்டத்திற்குக் இட்டுச் செல்லுதல் முடியாத காரியமல்ல."

எதிர்காலத்தில் மாணவர்களை கரண்டி, முட்கரண்டி ஆகியவற்றைப் பயன்படுத்தி உணவருந்த பழக்கப்படுத்துவதற்கான ஆலோசனையொன்றை சகுந்தலா ஆசிரியை முன்வைக்க, அதிபர் ஏனைய ஆசிரியர்களோடு ஆலோசித்து அத்திட்டத்தினை வாரத்தில் ஒருநாள் நடைமுறைப்படுத்த உடன்பட்டார். அதிபரின் சிறந்த முகாமைத்துவத்துவத்தின் வெளிப்பாடு இந்த சத்துணவு வேலைத்திட்டத்தினை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்கு எந்தளவிற்கு காத்திரமாக அமைந்தது என்பதை நண்பர்கள் இருவரும் புரிந்துகொண்டனர்.

(எண்ணக்கரு - இப்பாகமுவ கல்வி வலய வில்லியம் கொபல்லாவ ம. ம. வி. மற்றும் ஹொரண கல்வி வலய வெலிக்கல தக்ஷிலா ஆரம்பப் பாடசாலை)

## 8. தலைமைத்துவத்துக்கான அரவணைப்பு

பின்னேரம் ஆசிரியர்களுக்கான கூட்டத்தில் அதிபரினால் முன் வைக்கப்பட்ட புதிய ஆலோசனைகள் ஆசிரியர்களை வியப்பில் ஆழ்த்தின.

“இப்பாடசாலை அதிபராக நான் இருந்தாலும் இப்பதவியின் பொறுப்பு, வகை கூறல் போன்றன ஆசிரியர்களுக்கும் உரித்தானது. இப்பாடசாலையின் தலைவன் நான் மாத்திரமல்ல. ஆசிரியர்களும் தலைவர்களே. ஆகையால் ஆசிரியர்களின் தலைமைத்துவத்துக்கு சந்தர்ப்பம் வழங்க தீர்மானித்துள்ளேன். அடுத்த வாரத்திலிருந்து அனைத்து ஆசிரியர்களுக்கும் வகை கூறல் கிடைக்கத் தக்கதாக பாடசாலையின் அதிபர் பதவியினை ஒரு வார காலத்துக்கு நான் சம்பவத் திரட்டு மூலம் ஒப்படைக்கவுள்ளேன். பாடசாலையின் அதிபராக நினைத்து தேவையான சந்தர்ப்பங்களில் தீர்மானங்களை எடுப்பது அவ்வாசிரியரின் பொறுப்பாகும். முரண்பாடுகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் முடியுமான வரை சுயமாக சிந்தித்து சரியான முடிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.”

அதிபரினால் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட பொறுப்புக்களின் விபரங்களடங்கிய படிவம் காட்சிப்படுத்தப்பட்டது. அடுத்த வாரம் முதல் அதிபர் பதவிக்கான பொறுப்புக்கள்

தை (ஜனவரி ) 13 – திங்கட்கிழமை

திட்டமிட்டபடி இன்று முதல் ஒரு வார காலப் பகுதிக்கு வதனி ஆசிரியைக்கு, என்னால் ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைப் பட்டியலுக்கு அமைய அதிபர் கடமைகளைப் புரிவதற்கு பொறுப்பளித்துள்ளேன். மதிப்பீட்டுப் பணிகள் என்னால் மேற்கொள்ளப்படும். வார இறுதியில் உரிய ஆசிரியரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட முகாமைத்துவ ஆற்றல்கள் தொடர்பாக குறுகிய அறிக்கை-யொன்றினை எனக்குக் கையளிக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளேன்.

ஒப்படைத்தல் பற்றி சம்பவத் திரட்டுப் புத்தகத்தில், அதிபரினால் கீழ் காணும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

வார இறுதியில் புதிய கடமைகள் தொடர்பாக குறுகிய அறிக்கையொன்று உரிய ஆசிரியையினால் அதிபரிடம் கையளிக்கப்பட்டது. அந்த அறிக்கையில் அவரால் பெற்றுக் கொள்ளப்பட்ட நன்மைகள் இவ்வாறாக விபரிக்கப்பட்டிருந்தன.

- சாதாரணமாக ஆசிரியர் அபிவிருத்தி செயற்பாடுகளை விட நடைமுறையில் பாடசாலைத் தலைமைத்துவத்தின் தினசரிப் பணி நிறைவேற்றல் தொடர்பான அனுபவத்தினைப் பெற்றுக் கொண்டேன்.
- பாடசாலை தொடர்பாக நிறைவான விளக்கத்தைப் பெற்றுக் கொள்ள வழியேற்பட்டது.
- ஆசிரியர்களின் நன்மைக்காக மேற்கொள்ள வேண்டிய விஷேட பணிகள் செயற்பாடுகள் தொடர்பான புதிய கருத்துக்கள் தோன்றியுள்ளமை
- ஏனைய ஆசிரியர்களுடன் சிறப்பான தொடர்புகளைப் பேணுவதன் மூலம் எனது பணிகளுக்கு அவர்களின் ஒத்தழைப்பினைப் பெற்றுக் கொள்ளும் ஆற்றல் மேலோங்கியுள்ளமை.

- காரியாலய முகாமைத்துவத்துடன் தொடர்பான செயற்பாடுகள் பற்றிய தெளிவான விளக்கத்தினைப் பெற்றுக் கொண்டுள்ளமை.

- பாடசாலை முகாமைத்துவம் தொடர்பான சுற்றறிக்கை, அறிவுரை, சஞ்சிகைகள், மற்றும் கடிதங்களை பரிசீலிப்பதற்கு கூடிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் முகாமைத்துவத்தின் வகை கூறல் தொடர்பாக பரிச்சயத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளமை.

அநேகமான, ஆசிரியர்கள் அதிபர்களாகப் பணியாற்றியதன் மூலம் தமக்குக் கிடைக்கப் பெற்ற அனுபவங்கள் வாழ்க்கைக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தன எனக் குறிப்பிட்டிருந்தமை அறிக்கைகளில் காணப்பட்டது.

இவ்வாறாக பாடசாலையின் அனைத்து ஆசிரியர்களுக்கும் ஒரு வாரத்திற்கு அதிபராகச் செயற்பட சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அத்தகைய சந்தர்ப்பங்களில் சில ஆசிரியர்கள் பாடசாலையில் ஏற்படும் பல்வேறு முரண்பாடுகளுக்கு மிகவும் ஆக்கபூர்வமான தீர்வுகளை முன்மொழிவு செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இச் செயற்பாட்டின் மூலம் முகாமைத்துவம் தொடர்பாக ஆசிரியர்களுக்கு ஒரு பயிற்றுவிப்பும் அதிபர் பதவிக்கான அனுபவமும் நேரடியாக பெறக் கூடியதாக அமைந்தமையும் அரிதான ஒரு செயற்பாடாகும். அத்துடன் அதிபர் பதவிக்காக ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் முன்னேற்பாடான ஒரு நிகழ்வாகும். இதன் மூலம் அதிபர் இல்லாத சந்தர்ப்பங்களிலும் பாடசாலை சுமுகமாக இயங்க வழி ஏற்படுகிறது.

(எண்ணக்கரு :- கேகாலை கல்வி வலய பின்னவல தேசிய பாடசாலை)

# 9. தூய்மையான சூழல்

காலையில் ஓடோடி வந்த சின்னஞ் சிறுமியின் உடையில் பாடசாலை அருகிலிருந்த கத்தாப்பு மரத்திலிருந்து உணவுக்கழிவு விழுந்தது. மரத்திலிருந்து எப்படி உணவுக்கழிவு விழும்?.... மேலே பார்த்தபோது மரத்திலிருந்த காகமொன்று உணவுக் கடதாசியை விரிப்பதைக் கண்டாள். அதிலிருந்தே உணவுக் கழிவு விழுந்திருக்கலாம் என்பதை ஊகித்தாள். அழுக்குப்பட்ட சட்டை அவளுக்கு அருவருப்பாக இருந்தது. அழுது கொண்டே பாடசாலைக்கு ஓடிச் சென்று வகுப்பாசிரியரிடம் முறையிட்டாள். அதைக் கேட்ட ஆசிரியருக்கும் மிகக் கவலையாக இருந்தது. சிறுமியை ஆறுதல் படுத்தி அழுக்கை கழுவி சுத்தம் செய்த பின் இதற்கு ஒரு நிலையான தீர்வினை பெறும் நோக்கில் அதிபரைச் சந்திக்கச் சென்றார்.

‘சுற்றாடலைப் பாதுகாப்பதன் மூலம் மனிதனும் பாதுகாக்கப்படுவான்’

‘நாட்டின் உயிர்நாடி மாணவச் சந்ததியினரே’

‘உன்னதமான சமூகம் ஒன்றை உருவாக்குவதற்கு மாணவர்களிடத்தே நல்ல பழக்க-வழக்கங்களை தோற்றுவிக்க வேண்டும்’

என்ற சிந்தனையுடன் அதிபரிடம் அவ்விடயத்தினை முன்வைத்தார். அதிபரோ அனைத்தையும் அமைதியாக செவிமடுத்த பின் அருமையான யோசனையொன்றை தெரிவித்தார். சிறு பை ஒன்றைத் தயாரித்து அதில் மாணவர் தாம் அன்றாடம் வீசுகின்ற கழிவுகளை அதில் இட்டு, வீட்டுக்கு எடுத்துச் சென்று அப்புறப்படுத்தலாம் என்பதாகும். பின்னர் அந்த யோசனையை ஆசிரியர் குழாத்துடன் கலந்துரையாடி, அதை வகுப்புரீதியில் நடைமுறைப்படுத்த ஒரு குழு நியமிக்கப்பட்டது. ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களைக்கொண்ட அப் பாடசாலையினுள் அதனை ஆக்கபூர்வமாக நடைமுறைப்படுத்தும் நோக்கில் ஒவ்வொரு வகுப்புக்கும் வெவ்வேறு நிறப் பைகள் தயாரித்து வழங்கப்பட்டன. பாடசாலை மாணவர்களுக்கு மட்டுமன்றி சகல கல்வி சார்ந்த, கல்வி சாராத ஊழியர்களுக்கும் இம்முறை அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

தற்போது பல்வேறு நிறங்களிலான சிறு பைகளை எடுத்து வரும் சிறு பிள்ளைகள் அதனுள் துடைப்பப் பஞ்சு (ஸ்பொன்ச்) ஒரு துண்டையும் எடுத்து வந்தார்கள். அதன் மூலம் கதிரை மேசைகளிலுள்ள தூசு துடைக்கப்பட்டு சுத்தப்படுத்தப்படுவதை பார்க்க மகிழ்ச்-சியாக இருந்தது. முன்னர் பாடசாலை வகுப்பறைகளிலும், சுற்றாடலிலும் பரவிக்கிடந்த குப்பைக் கூழங்கள் தற்போது காண்பதற்கில்லை. தத்தமது அன்றாடச் செயற்பாடுகளின் போது ஒன்று சேரும் குப்பைகளை அல்லது கழிவுகளை பையினுள் இட்டு எடுத்துச் செல்லும் பழக்கத்தை மாணவர்களது நடத்தைக் கோலமாக உள்வாங்கியுள்ளமை வியப்பினைத் தோற்றுவித்தது.

எதிர்கால உலகை வெற்றி கொள்ளவுள்ள மாணவர்களது சுற்றுச் சூழலை தூய்மையாகப் பேணுவதன் அவசியம் குறித்து சிறு பிராயத்திலிருந்தே பயிற்றுவித்து பழக்கப்படுத்துவதற்கு வழிகாட்டச் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு அதிபரும் ஆசிரியர் குழாமும் பெருமையுடன் மகிழ்சியடைந்தனர். ஒவ்வொரு புதன் கிழமை காலைக்கூட்டத்தின் போதும் அதிபர் இச்செயற் திட்டத்தைப் பற்றி பேசுவதுடன் அதைத் தற்காலப்படுத்துவதும் பாராட்டுக்குரிய விடயமாகும். வகுப்பாசிரியர்களும் இது தொடர்பாக மிகக் கவனத்துடனும் ஆர்வத்துடனும் செயற்பட்டனர்.

“இயற்கையை நேசிக்கும் பிள்ளைகளை இயற்கையும் நேசிக்கும்” என்பது யாவரும் அறிந்த உண்மையே.

நாளைக்கும் தவறாது சூரியன் உதிக்கும். அவ்வாறு எமது பாடசாலையிலிருந்து உருவாகும் பிள்ளைகளும் சமூக நலனுக்காக செயற்படும் குணநலமிக்க அறிவு சார்ந்த பிள்ளைக-ளாவார்கள் என அதிபர் கூறுவதானது இச்செயற்பாடு சமூகத்துக்கு முன்மாதிரியான ஒரு சிறந்த செயற்பாட்டின் பிரவேசமாக இருப்பதனாலாகும்.

(எண்ணக்கரு - மேல்மாகாண மினு/பல்லேவல மகாவித்தியாலயம்)

# 10. வகுப்பறை வேலைத்திட்டம்

வகுப்புப் பொறுப்பாசிரியரினால் பெற்றோருக்கு அனுப்பப்படுகின்ற படிவத்தின் மாதிரி.

அன்பார்ந்த பெற்றோர்களே,

வகுப்பறையில் உங்கள் பிள்ளையின் கற்பித்தலுக்குத் தேவையான கற்றல் உபகரணங்களை வீட்டிலிருந்தே தயாரித்துக் கொண்டு வராதமையினால் நான் மிகவும் இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறேன். அதனால் உங்கள் பிள்ளையின் பெப்ரவரி மாதத்திற்கு தேவையான கற்பித்தல் உபகரணப் பட்டியலை கீழே தருகின்றேன்.

| செயற்படுத்தும் திகதி | தேவையான பொருள் |
|---|---|
| 2016.02.08 | கடிகார முகம் (1 – 12 வரை இலக்கங்களைக் கொண்டது) |
| 2016.02.15 | மீற்றர்கோல், 2 மீற்றர் நீளமான கயிற்றுத்துண்டு |
| 2016.02.18 | கடதாசியினால் செய்யப்பட்ட ஆகாய விமானம் |
| 2016.02.19 | பாய்ச்சற் கயிறு (Skipping Rope) |
| 2016.02.23 | 1 -20 வரையான இலக்கங்கள் கொண்ட அட்டவணை |
| 2016.02.25 | வனவிலங்குகளின் படங்கள் |
| 2016.02.28 | நுளம்பு வலை வட்டம் |

ஒவ்வொரு மாத ஆரம்பத்திலும் இது போன்ற படிவமொன்று அனுப்பி வைக்கப்படும். அதனைக் கவனத்திலெடுத்து தேவையான பொருட்களை உரியதினத்தில் பாடசாலைக்கு அனுப்பி வைக்குமாறு கேடட்டுக்கொள்கிறேன்.

நன்றி

வகுப்பாசிரியர்
தரம் - 03

(எண்ணக்கரு - மத்துகம கல்வி வலய ஆனந்த சந்திராலய ஆரம்பப் பாடசாலை)

## 11. பாடசாலைக்கு வலுவூட்டும் வலுசக்திச் சங்கம்

***உங்கள் மின்சாரப் பட்டியல் கட்டணத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள்.........!***

**வலுசக்திப் பாதுகாப்புக்காக சமூகத்தைப் விளிப்பூட்டும் வேலைத்திட்டம் 2016**

கம்/ விக்ரமபாகு தேசியப் பாடசாலை சக்திப் பொறி முறைச் சங்கம் 10வது முறையாகவும் ஒழுங்கு செய்கின்ற வருடாந்த வேலைத் திட்டங்களில் சமூகத்தைத் தெளிவுபடுத்துதலையும் பிரயோக செயற்பாடுகளையும் உள்ளடங்கிய செயலமர்வு 2016-02-11/12 ஆகிய இரு தினங்களிலும் பாடசாலையில் இடம்பெறும்.

இங்கு பின்வரும் செயற்பாடுகளினூடாக சமூகத்தை தெளிவுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

- LED விளக்குகளின் உதிரிப் பாகங்களை ஒன்றிணைத்து மீள்சுழற்சிக்கு உட்படுத்தல்
- வீட்டில் மாற்றீட்டு வலுச் சக்திகளைப் பாவித்தல்
- பல்செயற்பாட்டு அடுப்பு, பல் செயற்பாட்டுப் பாத்திரங்களைப் பயன்படுத்தல்
- வீட்டுக்கு மலிவு விலையில் சூரிய கலத்தை பெற்றுக் கொள்ளல்

இவ் வேலைத்திட்டத்தில் மாவட்டத்திலுள்ள பல பாடசாலைகளின் ஆசிரியர்களும் மாணவர்களும் பங்குபற்றுவதுடன் மின் வலுப் பாதுகாப்பிற்கும் வீட்டு மின் கட்டணத்தைக் குறைப்பதற்கும் அவர்களின் அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்குமான வாய்ப்புக்கள் கிடைக்கப்பெறும்.

பாடசாலை மின்வலு அமைப்பின் மூலம் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் சமூக தெளிவூட்டலை மென்மேலும் பலப்படுத்துதலே இக்கருத்தரங்கின் நோக்கமாகும்

பாடசாலை வலுசக்தி சங்கம்.

## 12. நடுவினில் மிளிரும் கல்லூரி

கிராம வளச்
செழிப்புடன

உவப்பற்ற
நகரமதின்

மாணவ மனம் விளித்திடும்
உடலுழைப்பு வியர்வை
விதைத்திடும்
காணும் கண்கள் குளிர்ந்திடும்.
பசுமை விளைந்த நிலமே
கல்லூரி

பட்சிகளின் கானங்களிலும பச்சை
மரங்களின் செழிப்பினிலும்
வளம்மிக்க கிராமமானது சகல
காய்கறி பழங்கள் நிறைந்ததுவாம்.

முகட்டை தொடும் உச்சியிலே
நீர் வழியும் ஊற்றுக்களும்
நாட்டுக்கே குளிர் பரப்ப
நாற்புறமும் வடிந்திடுமே

மலை முகட்டில் மிளிர்ந்திடும்
கலையகமது தினம் தினம்
புகழாரம் பொங்கியெழ
விருது பெறும் மாணவர் குழாம்

பூஞ்செடி கொடி உருவமதோ
விளை சுவை குணம் பரவி
கலையக தோட்டமெங்கு
ரசிக்க ருசிக்க சிரித்திடுமே

குளிர்காற்று காண்பதெங்கே
வெதுப்பினிலே உடல் வேகையிலே
உயிரும் நோயுறவே
வாழும் இந்த நகரமது.

கலையகம் நாடி நகரமதில்
வரும் செல்லக் குழந்தைகள் தாம்
மகிழ்ந்து சுற்று சூழ பார்க்கையிலே
குளிர் காற்றோ சிலிர்க்கவில்லை

கதைக்கும் ஒலி வெடித்திடுமே
ஓலமுடன் உருட்டல் பிரட்டலுமே
சத்தமுடன் தூசும் இணைந்திடவே
கலையகமதும் கலைந்திடுமே

மரஞ்செடி கொடி உருவமதோ
விளை சுவை குணமதுவோ
கல்லு பொல்லு தடி சத்தமுடன்
குசிந்து உருகி அழுதிடுமே

சுகந்தமான சுற்றாடல்களும் உடன்
சுகமிக்க மாணவர் குழாமுடன்
உவப்பளிக்கும் சுற்றாடல் கொண்ட
பரம்பரையே பாடசாலையாம்

பாடசாலையே பரம்பரையாம்.

## 13. புதுமை காண்பிக்கும் நூலகம்

“வாசிப்பு மனிதனைப் பூரணப்படுத்தும்” எல்லா நூலகங்களிலும் இந்த முன் உதாரண வாக்கியம் காணப்படுகின்றது.

ஆயினும் இக்கூற்றினை உண்மைப்படுத்துவதற்கு தற்கால நூலகங்கள் வெறுமனே வாசிப்பு கூடமாகவோ அல்லது புத்தகங்களைப் பரிசீலிக்கும் ஒரு அறையாகவோ மாத்திரம் இருத்தல் கூடாது. பாடசாலை நூலகத்தின் மூலம் மாணவர்கள் பல்வேறு கற்றல் தேர்ச்சிகளை அடைந்துகொள்ள முடியும் என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும். எனினும் நூலகத்தை மையப்படுத்தி உசிதமான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் பாடசாலைகள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன.

அவ்வாறான பாடசாலை நூலகமொன்றில் செயற்படுத்தப்படுகின்ற செயற்றிட்டங்கள் பலவற்றை விஷேட நடைமுறைகளைத் தேடிச் செல்லும்போது நாம் கண்டுகொண்டோம். அச் செயற்பாடுகளை நாட்டின் சகல பாடசாலைகளுடனும் பகிர்ந்து கொள்ளும் நோக்கில் கீழே தருகின்றோம்.


- நூலக முகாமைத்துவப் பயிற்சியை மாணவர்களுக்கு அளிப்பதும் மாணவ நூலகவியலாளர்களைப் பயிற்றுவித்தலும்.
- பாடசாலை அறிவுப் புதிர் போட்டிகளை தயார்செய்து செயற்படுத்தல்.
- ஆக்கத்திறன் தேர்ச்சிகளை விருத்திசெய்வதற்கான செயலமர்வுகளை நடாத்துதல்.
- ஆரம்பப்பிரிவு மாணவர்கள் எழுதிய கதைகளை புத்தகமாக வெளியிடுவதற்கு வாய்ப்பளித்தல்.
- செய்தித்தாள்களில் வரும் கார்ட்டூன்களைச் சேகரித்தல், கதைகளைச் சித்திரமாக வரைதலும், காட்சிப்படுத்தலும்.
- தற்காலச் செய்திகள் மற்றும் தகவல்கள் பற்றிய அறிவிப்புத்திறனை விருத்தி செய்தல்.
- பல்வேறு தரங்களுக்குமான ஒப்படைக்கோவை மற்றும் ஒப்படை வங்கியை நடைமுறைப்படுத்தல்.
- உருவங்கள், பொருட்களின் உதவியோடு கதைகளை நிர்மாணித்தல்.
- கதைகளின் உதவியோடு கவிதைகளை இயற்றுதல்.
- பத்திரிகைத் துணுக்குகளைக் கத்தரித்து புத்தகம் தயாரித்தல்.
- கல்விசார் புத்தகங்களின் உதவியோடு கணனி முன்வைப்புக்களை (Presentations) தயாரித்தல்.
- ஆங்கில / சிங்கள இலக்கிய மற்றும் மொழிப் போட்டிகளை நடாத்துதல்.
- பேச்சு, விவாதப் போட்டிக் குழுக்களை தயார்படுத்தல்.
- பிரேலி, சவாலான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணல், விளையாட்டு போன்றவற்றை அறிமுகப்படுத்தல்.
- பெறுமதியான கூற்றுக்கள் மற்றும் புத்தி ஜீவிகளின் வெளியீடுகளைக் காட்சிப்படுத்தல்.
- கைப்பணி ஆக்கங்களுக்கு வழிகாட்டல்.

இவ்வாறான வேலைத்திட்டங்கள் பலவற்றை மேற்கொள்வதற்கு நூலக சூழலை தரப்படுத்தலும் அதனை நடைமுறைப்படுத்தலும் ஒரு சவாலான விடயமாகும்.

அதனை வெற்றி கொள்வதற்கு நூலக நெறியை பாதுகாத்தல் மற்றும் அதில் ஈடுபடுகின்ற மாணவர்களின் செயற்பாடுகளை மதித்தல் போன்றவற்றின் பால் பாடசாலை கூடுதல் கவனம் செலுத்துவதைக் காண முடிந்தது.

தற்போது இந்த நூலகத்திற்கு தொடர்பாடல் தொழிநுட்ப பயன்பாட்டிற்கான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. இணைய வசதி காணப்படுவதால் மாணவர்களும் ஆசிரியர்களும் இலகுவில் தகவல்களைக் பெறும் வசதி காணப்படுகின்றது. அவ்வாறே மின் புத்தகம் (e-books ) பரிசீலனைக்குத் தேவையான மென் பொருள் ஸ்தாபிக்கப்பட்டு உள்ளது.

இவை அனைத்தும் ஒரு சேரப் பெற்ற இடம் ஒரு புதுமை மிக்க நுலகம் அல்லவா?



(எண்ணக்கரு – களுத்துறை தொடங்கொட தேசிய பாடசாலை, தெநுவர கல்வி வலய பிலிமத்தலாவ கனிஷ்ட வித்தியாலயம், தெகிஅத்தகண்டிய மெதகம இடைநிலைப் பாட-சாலை, பொலன்னறுவை கிழக்கு பலுகஸ்வெவ வித்தியாலயம்)

# 14. எங்கள் வகுப்பறையே சிறந்தது.

வலய கல்விப் பணிமனையினுடாக நடாத்தப்பட்ட செயலமர்வுகளில் முறையான விரிவுரைக்குப் பின் முன்மாதிரியாக நடாத்தப்படும் பாடசாலைகளுக்குச் சென்று அவர்களின் அனுபவங்களை பரிமாறும் சந்தர்ப்பமொன்று பதில் அதிபர்களுக்கு கிடைத்தது.

பாடசாலை வளாகத்தினுள் நடந்து செல்லும் போது அப்பாடசாலையின் வகுப்பறைகள் அழகான முறையிலும் கவர்ச்சிகரமானதாகவும் இருப்பதைக் காண முடிந்தது. கற்றலுக்குறிய வகுப்பறைச் சூழல் சிறப்பாக வடிவமைக்கப்பட்டிருந்தது. மாணவர்கள் அமைதியான முறையில் கற்றற் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர். பாடசாலையின் கல்வித்தரத்தை மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட்டிருந்த செயற்றிட்டங்கள் குறித்து கல்வி உத்தியோகத்தர்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

பாடசாலை அதிபரைச் சந்தித்து இப்புதிய செயற்றிட்டம் சம்பந்தமாகக் கலந்துரையாடிய போது இச்செயற்றிட்டத்தை ஆதரித்து உதவி அதிபர்கள் வழங்கிய ஒத்துழைப்பு பற்றி அதிபர் பின்வருமாறு கூறினார்,

"எமது பாடசாலையின் வகுப்பறையில் கற்றற் செயற்பாடுகள் இதற்கு முன் இந்த நிலையில் இருக்கவில்லை. மாணவர்கள் கற்றற் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிப்பவர்களாகவே இருந்தனர். அதனால் நாம் முன்மாதிரி வகுப்பறை ஒன்றைத் தெரிவு செய்யும் ஒரு முறையைத் தேர்ந்தெடுத்து இந்தப் பிரச்சினைக்கு தீர்வொன்றைக் கண்டோம்.

இந்தப் போட்டியில் நாங்கள் தயாரித்த நியதிகளுக்கேற்ப புள்ளிகள் வழங்கத் தீர்மானித்தோம் இதன் நியதிகள் பின்வருமாறு:

- வகுப்பறையையும் அதனைச் சுற்றியும் சுத்தப்படுத்தல்
- சமய வழிபாடுகளிலும் காலைக் கூட்டத்திலும் ஒழுங்காகப் பங்குபற்றல்
- வகுப்பறையில் வரவு இடாப்பு- நேர அட்டவணை என்பவற்றையும் வேறு ஆவணங்களையும் ஒழுங்கான முறையில் பராமரித்தல்
- வகுப்பறிக்கைப் புத்தகம் ஒழுங்கான முறையில் பேணப்படல்
- மாணவர் சீருடை, நகம், முடி போன்றன நேர்த்தியாகவும் சுத்தமாகவும் பேணப்படல்
- கதிரை, மேசை உட்பட சகல தளபாடங்களும் நேர்த்தியாகவும் சுத்தமாகவும் பேணப்படல்
- மாணவர்களின் வரவு, ஆசிரியர்களுக்குக் கீழ் படிதல் கற்பித்தலுக்கு உதவுதல்
- ஒவ்வொரு பாடத்துக்கும் 40 புள்ளிகளுக்கு மேல் பெறல்
- மாணவர்களின் ஒழுக்காற்றுப் பிரச்சினைகள் குறைவதற்கு வழி வகுத்தல்

இந்நியதிகளுக்கேற்ப நியமிக்கப்பட்ட பரிசீலனைக் குழுக்கள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வகுப்பறைகளை மதிப்பீடு செய்து புள்ளிகளை வழங்கி அவற்றின் அடிப்படையில் சமாந்தர வகுப்பறைகளில் ஒன்றுக்கு மாத இறுதியில் சான்றிதழ்களும் சின்னங்களும் வழங்கப்படும்.

இத்திட்டத்தைத் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தியதால் பாடசாலையின் சகல வகுப்பறைகளையும் சிறந்த கற்றல் சூழலோடு கவர்ச்சிகரமாக மாற்றியமைக்கக் கூடிய-தாக இருந்தது. வகுப்பாசிரியர்களுக்கு தமது வகுப்பைச் சிறந்த முறையில் வழி நடாத்தும் பொறுப்பு காணப்படுகின்றது. வருட இறுதியில் சிறந்த வகுப்பாசிரியருக்கு கௌரவிப்பு வழங்கப்படும்'' எனவும் அதிபர் கூறினார்.

''உண்மையிலேயே உங்கள் பாடசலையில் நடைமுறைப் படுத்தப்படும் இந்தச் செயற்றிட்டம் எங்கள் ஏனைய பாடசாலைகளுக்கும் ஒரு சிறந்த வழி-காட்டலாக இருக்கும்'' என வலயக் கல்விப் பணிப்பாளர் கூறினார்.

.



(பதுளை வலயத்துக்குப் பொறுப்பான பண்டாரவலை விசாக்கா பாலிகா வித்தியாலயத்திலும், மொனராகல வலயத்திலும் இதிகவுல கனிஷ்ட வித்தியாலயத்திலும் நடைமுறைப்படுத்தப் படும் புதிய செயற்றிட்டமாகும்)

## 15. ஊக்கமளித்த ஊடகப்பிரிவின் ஆசான்

நிவ்யோர்க் நகரத்திலிருந்து.
அன்பான ஆசிரியருக்கு,

குளிர் மிகுந்த நாட்டிலிருந்து உங்களது அரவணைப்பை நாடி இந்தச் செய்தியினூடாக பறந்து வருகிறேன். எமது பாடசாலையின் ஊடகப் பிரிவிலிருந்து உங்களால் எனக்குக் கொடுக்கப்பட்ட தைரியத்தினால் ஐக்கிய நாடுகள் சபையின் இளைஞர் கழகத்தினூடாக எனது குரலை ஓங்கச் செய்ய வாய்ப்புக் கிடைத்தது. அன்பு ஆசானே, உங்களது இனிய குரலை எனது காதுகளில் செலுத்தி, உங்களது உருவத்தை எனது கண்முன் தோன்றச் செய்து, உங்களது சக்தியை எனது வாழ்க்கையின் ஒளியாக்கி நான் சிறுவனாக இருந்த போது சிறிய கதையினூடாக இலக்கிய சங்கத்தின் மாநாட்டில் சபைக் கூச்சத்தால் கண்கள் சிவப்பாகி கை கால்கள் நடுநடுங்க நான் பலவீனப்பட்டிருந்த நிலையில் நீங்கள் என்னைப் பார்த்து தைரியப்படுத்திய விதம் இன்றும் அளவிட முடியாத வகையிலான சக்தியாகும். “நீங்கள் இன்றைக்குக் கூறியது போதும். நாளைக்கு நாங்கள் வேறொரு பேச்சுக்குத் தயாராகுவோம் என்று கூடியிருந்தவர்கள் மத்தியில் கைதட்டும்படி அவர்களை வேண்டிக் கொண்டதை இன்றும் மறக்க முடியாது.

அடுத்த நாள் முழுவகுப்பையும் சிறிய கெசட் ரேடியோ ஒன்றுடன் சிறிய ஒரு அறைக்கு ஒரு வீரனைப் போல அழைத்துச் சென்றீர்கள். “பிள்ளைகளே, உங்களது குரல்களை உங்களது காதுகளிலேயே கேட்கச் செய்கிறேன். உங்களுக்காக நல்ல கதையொன்றை எழுதிக் கொண்டு வந்திருக்கிறேன். சிறிது சிறிதாக உங்களுக்குப் பழக்கி நீங்கள் நன்றாக கூறும்போது அதனை இந்த கெசட்டில் பதிவு செய்கிறேன். நீங்கள் இவ்வாறு கூறியவுடன் அதைப்போலவே எங்கள் கதையை எங்களுக்குப் பழக்கினீர்கள். இதோ என்னுடைய முறை வந்தது. நேற்றுப் போல இன்று எனக்கு வியர்வை வரவில்லை. மற்றவர்களைவிட நான் நன்றாகச் செய்தேன், என்று கூறியபோது உங்களைப்போலவே நானும் ஒரு வீரன் என்று நினைத்தேன். எனது இரு கண்களிலும் கண்ணீர் வடிகின்றது அந்த மகிழ்ச்சியில் உங்கள் கண்களும் சிரிக்கின்றன. என்னுடைய தோளை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டு “மகனே உலகத்திற்கே கேட்கக் கதைக்கக்கூடிய குரல் வளம் இருக்கிறது. எனக்குப் பெருமையாக இருக்கிறது” அந்த சொற்கள் இன்றும் எனது காதில் ஒலிக்கின்றன. நான் எனது வாழ்க்கையில் கேட்ட நல்ல சொற்கள் அவைகள் தான்.

அன்றிலிருந்து எனக்கு பெரிய ஆத்ம விசுவாசம் ஏற்பட்டது. இலக்கிய மன்றக் கூட்டத்தில் தினமும் எனக்கு ஒரு பேச்சு. நான் சங்கத்தில் இணைந்து விட்டேன் என்று எனக்குத் எண்ணத் தோன்றியது. அதற்குப் பின்புலமாக இருந்தவர் நீங்களே. எனக்கு மாத்திரம் அல்லாது எங்கள் வகுப்பிலுள்ள சகலருக்கும் இந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தவர் நீங்களே. அதன் பின்னர் நீங்கள் எங்களை வாசிக்கப் பழக்கினீர்கள். செய்தித் தாள்களில் எழுதவும், சீனி சுற்றிய கடதாசித் துண்டுகளை பொறுக்கி வாசிக்கவும் நாங்கள் பழகினோம். எழுதிக் கொண்டு வந்த அறிக்கையை காலைக் கூட்டத்தில் வாசிக்க வழி செய்தீர்கள். பல நாட்களுக்கு அதை நாங்கள் சொல்வதுண்டு. ஒலிப் பெருக்கியில் எங்கள் குரல்களை கேட்டபோது எங்களுக்கு ஏற்பட்ட உணர்வினை விளக்க முடியாது. நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறோமா என்பதை பார்ப்பதற்கு நீங்கள் இடையிடையே கேள்விகளைக் கேட்டது எனக்கு ஞாபகமிருக்கிறது.

தமிழ்ப் பாட வேளையில் ஒவ்வொரு நாளும் 05 நிமிடங்கள் கதைப்பதற்கு எல்லோருக்கும் வாய்ப்பளித்தீர்கள். சிறந்த கதையை தெரிவு செய்து காலைக் கூட்டத்தில் அன்றைய தினத்திற்கான கதையாக அதனை முன் வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தீர்கள். அதனை மேற்பார்வை செய்வதற்கு எனக்கு ஏன் வாய்ப்பளித்தீர்கள் என்று எனக்கு விளங்கியது. நான் ஒரு தலைவன் என்று அப்போது எண்ணத் தோன்றியது.

நல்ல கதையொன்றுக்கு கிடைத்த கைத்தட்டின் ஓங்கார ஒலியைக் கேட்கும் போது எங்களுக்கு உண்டான உணர்வு என்னவென்று கூற முடியாது. எங்கள் எல்லோருக்கும் பெரிய கனவு ஒன்று இருந்தது. பாடசாலையில் வானொலி ஒலிபரப்புச் சேவையொன்றை ஆரம்பிப்பதற்கு அதிபருக்கும் உங்களுக்கும் இருந்த கனவுதான் அது.

எங்களுக்கு அது மிகவும் நல்ல வாய்ப்பாக அமைந்தது. இந்த அளவிற்கு எங்களை சிந்திக்கத் தோன்றியது "செய்தித் துணுக்கு" என்ற பெயரில் முன்னெடுக்கப்பட்ட வானொலி செய்தி முன்வைத்தல் நிகழ்ச்சியாகும். செய்தித் துணுக்கு" நிகழ்ச்சியால் நூல் நிலையத்துக்கு செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொன்றாக அதிகரித்தது. சகலரும் எறும்புகளைப் போல தகவல்களைத் தேடுகிறார்கள். சஞ்சிகைகளைப் புரட்டும் தவணைகள் அதிகரித்தன. புத்தக இறாக்கைகளிலிருந்து மேசை மீது விழுந்த புத்தககங்களின் எண்ணிக்கை அநேகம். எமது கண்கள் அவற்றின் மீது அலைபாய்ந்தன. கடதாசித் துண்டுகளில் குறிப்பெடுக்கிறோம். அடுத்த நாள் முழுப் பாடசாலைக்கும் புதிய தகவல் ஒன்று கிடைக்கிறது. கைத்தட்டல் ஓசை வெளியில் பாய்ந்து செல்லுகிறது. எங்கள் கரங்களில் பரிசுகள் கிடைக்கின்றன. பாதையில் போவோர் வருவோர் தமது மிதி வண்டிகளை நிறுத்திவிட்டு கேட்கும் அளவிற்கு எங்களது அயல் சூழல் மாற்றமடைந்தது. இவை யாவற்றுக்கும் நீங்களே பாரிய நிழலாக இருந்தீர்கள். இந்த வேலைத்திட்டத்தினூடாக முன் வைக்கப்படுகின்ற சிறப்பம்சங்கள் ஏராளம். உங்களது அறிவுப் புத்தகத்துக்கு, உங்களது வாழ்க்கையின் முன்னேற்றத்தைக் காண, வாழ்க்கைக்கு ஆதாரம். வருடாந்த வினாவிடைப் போட்டி, காட்டில் பூத்த மலர், ஒரு நொடி அவையே எனது நினைவில் நின்றவை.



அதனால்தான் பாடசாலையில் சஞ்சிகை வாசிப்பது மிகவும் பிரபல்யம் ஆனது. நாங்கள் வருடாந்தம் புத்தகங்களை கொள்வனவு செய்யும் போது சஞ்சிகைகளைக் கொள்வனவு செய்வதற்கு கொடுக்கப்பட்ட முன்னுரிமையே. எங்களுக்குத் தெரியாமலேயே செய்திகளுக்கு தகவல் திரட்டுவது ஒரு போட்டியைப் போல அமைந்தது. ரஜரட்ட வானொலியில் கிடைத்த பயிற்சி எங்களுக்கு பெரும் உதவியாக அமைந்தது. ஒக்டோபர் முதலாந் திகதி சிறுவர் தினம், முதியோர் தினத்தை முன்னிட்டு வினா விடைப் போட்டி நடத்தியமை.

அன்று எங்கள் கரங்களில் பரிசுகள் குவிந்தன. செய்தி வடிவத்தில் வினா தொகுத்தலும் விடை தொகுத்தலும், அவற்றைப் பெட்டியில் போடுவதும் முத்திரை இடப்பட்ட பெட்டியில் சிறந்த விடையைத் தேடி பரிசளிப்பதும் எங்களுக்கு மிகவும் கவர்ச்சியை ஏற்படுத்தியது. இவை யாவற்றினதும் பொறுப்புக்களை என்னிடம் ஒப்படைத்தது மிகுந்த நம்பிக்கையோடும் எதிர்பார்ப்போடும் என்று நான் அறிந்திருந்தேன்.

எமது பாடசாலைக்கு பெறுபேறு ஆறு பெருக்கெடுப்பது போல பெருக்கெடுத்து வந்தது. கோட்ட, வலய, மாகாண, அகில இலங்கை, தேசிய மட்டத்தில் பேச்சு, விவாதம் போன்ற வெற்றிகள் பல கிடைத்தன. ஒலிப்பெருக்கியில் பெயரைக் கூப்பிட்டு சான்றிதழ், பதக்கம் போன்றவை இரு கரங்களில் கிடைக்கும் போது கைத்தட்டல் ஒலி மாகாணம் முழுக்கவும் பரவிச் செல்லும் போது சரீரம் பூராவும் பரந்து சென்ற உணர்வு வாழ்க்கையின் எதிர் பார்ப்பை வானத்துக்கெல்லாம் மேலாக ஒளியேற்றியபடி. அதில் இறுதியும் நல்லதுமான பயனைப் பெற்றுக் கொண்டவன் நான் என்று எண்ணும் போது அதன் கௌரவமான பாரிய நிழலாக இருந்தது எனது ஆசிரிய தெய்வம் நீங்களே. அன்று நீங்கள் வெளிப்படுத்திய எதிர்வு கூறல் இன்று நிஜமாகியது. என்னுடைய ஆசிரிய தெய்வத்துக்கு மேலான பக்தியைத் தெரிவிக்கிறேன்.

(எண்ணக்கரு அனுராதபுர கல்விவலய அனு/ராஜங்கனயாய மகசென் வித்தியாலயம்)

# 16. வைத்தியசாலைக்கு உதவுதல்

குறிப்பிட்ட திகதியில் திட்டமிடப்பட்ட கடமைகள் அனைத்தும் கிரமமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில்;

அம்மணி, இன்றும் இரண்டு நோயாளிகள்……………..

முச்சக்கர வண்டியில் வைத்தியசாலைக்குச் சென்று மருந்து வாங்கிக் கொண்டு வரவா? இது வழிகாட்டற் பொறுப்பாசிரியரின் குரல்

வேத்தேவ வைத்தியசாலை என்பது நோய்க்கும் துக்கத்திற்கும் புகலிடம் கொடுக்கும் ஒரு தேவாலயம் போன்றது. பாடசாலை மாணவர்கள் திடீரென்று நோய்வாய்ப்பட்டால் இங்கு தான் எடுத்துச் செல்ல வேண்டும். இன்று அதிபராக நான் பிள்ளைகளை அங்கு அழைத்துச்செல்வதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. அதில் முதலாவது, வழக்கம் போல் சுகயீனமடைந்த பிள்ளைக்கு மருந்து எடுத்தல், இரண்டாவது இன்றும் மருந்து சுற்றித் தருவது கடதாசித்துண்டிலா என்ற வினாவிற்கான விடையினைத் தெரிந்து கொள்ளல். இதற்கான விடையிலிருந்து தான் பாடசாலையின் சிறந்த செயற்பாடுகள் வெளிக்கொணரப்படுகின்றது.

வேத்தேவ அரசாங்க வைத்தியசாலைக்கு தினந்தோறும் அதிகமான நோயாளர்கள் வருகை தருகிறார்கள். மருந்து வில்லைகளை உறைகளில் இட்டு வழங்கக்கூடிய வசதிவாய்ப்புக்கள் கூட அந்த வைத்தியசாலையில் காணப்படவில்லை.

அப்படியாயின் பாடசாலை நலன்புரி செயற்திட்டத்தினுடாக இந்த திட்டத்தை பொறுப்பேற்க வேண்டும். பாடசாலை மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் ஒய்வு நேரத்தை பயனுள்ளதாக்கி மாணவர்களைக் கொண்டு மருந்து இடும் உறைகள் தயாரிக்கப்பட்டு வைத்தியசாலைக்கு அனுப்பப்படுகிறது. மாணவர்கள் இதை மிகவும் விருப்பத்துடன் செய்து வருகின்றனர். இரண்டு வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட இச் செயற்பாட்டினால் பாடசாலைக்கும் வைத்தியசாலைக்கும் இடையிலான உறவு மேலோங்கி காணப்படுகிறது. பயன்களைப் பெற்றுக் கொண்ட நோயாளிகள் வாழ்த்திச் செல்கின்றனர்.



(எண்ணக்கரு - மத்துகம வலய இத்தகொட கனிஷ்டவித்தியாலயம் தபுத்தேகம/மகா வித்தியாலயம்)

## 17. அழகியல் திறனை வெளிப்படுத்த மேலதிக ஒரு மணிநேரம்

சந்தர்ப்பம்: ஆசிரியர் கலந்துரையாடல்        நெறிப்படுத்தல்: அதிபர்

வணக்கம்.
இன்று இந்த ஆசிரியர் கலந்துரையாடலில் பங்குபற்றும் உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கிறேன். இன்றைய இந்த ஆசிரியர் கலந்துரையாடலைக் கூட்டுவதன் பிரதான நோக்கம், ஒரு விசேட வேலைத்திட்டமொன்று தொடர்பாக உங்களுக்கு அறியத் தருவதாகும். இக் காணொளியை அவதானியுங்கள்.

### *திங்கள்: சித்திரம் தீட்டுதல்*

பங்குபற்றல்: சித்திரக்கலை பற்றிய ஆர்வமுள்ள மாணவர்கள்

நோக்கம்:
1. பாடசாலையை அலங்கரிப்பதற்கான சுவர்ச் சித்திரம் வரைதல்
2. தேசிய மற்றும் சர்வதேச சித்திரப் போட்டிகளுக்காக மாணவரைத் தயார்படுத்துதல்

### *செவ்வாய் : நடித்தல்*

பங்குபற்றல்: நடிப்புத் திறனில் ஆர்வமுள்ள மாணவர்கள்

நோக்கம்:
1. சிறு நாடகம் தயாரித்தல்
2. வீதி நாடகம் மூலம் சமூகத்தை விழிப்பூட்டுதல்

### *புதன்: கவி புனைதல்*

பங்கு பற்றல்: கவிதை புனைவதில் ஆர்வமுள்ள மாணவர்கள்

நோக்கம்:
1. உள்ளார்ந்த ஆற்றல், அனுபவ அறிவு பெறல், நிரந்தரப் பயிற்சியிலீடுபடுதல் போன்ற குணாம்சங்களை வளர்த்துக் கொள்ளல்
2. மாணவர்களின் திறமையை வெளிப்படுத்தும் ஆக்கங்களை சஞ்சிகையாக அச்சிடல்

### *வியாழன்: கதை எழுதுதல்*

பங்குபற்றல்: குட்டிக் கதை, சிறுகதை எழுதுவதில் ஆர்வமுள்ள மாணவர்கள்

நோக்கம்:
1. சிறுகதைகளையும்,சிறுவர் கதைகளையும் தயாரித்தல்
2. படங்களுக்காக கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தல்
3. சிறுகதை, சிறுவர் கதை என்பவற்றை வெளியிடல

### வெள்ளி: இலக்கியம் நயத்தல்

பங்கு பற்றல்: பாடசாலையில் எல்லா வகுப்புகளிலும் உள்ள இலக்கியரசனை உள்ள மாணவர்கள்

நோக்கம்:
1. எழுதுதல் மற்றும் வாசித்தல் திறனைப் பெற்றுக் கொடுத்தல்
2. அடைவுமட்டத்தை நெருங்குவதற்கு உதவுதல்
3. பங்குபற்றுவோரின் படைப்பாக்கங்களை வைத்து கண்காட்சி நடத்துதல்

பாடசாலை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கும் புதிய வேலைத்திட்டங்கள் பற்றி அதிபர் விளக்கமளித்தது இந்த வகையிலாகும்.

வார நாட்கள் ஐந்திலும் செயன்முறைப்படுத்தப்படும் இந்தச் செயற்திட்டத்தை அறிவிப்புப் பலகையினூடாக மாணவர்கள் அறியச் செய்வது வகுப்பாசிரியரின் பொறுப்பாகும். பி.ப. 2.00 மணியிலிருந்து 3.00 மணி வரையலான காலத்தை இதற்காகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு விடயம் சம்பந்தமாகவும் திறமையுள்ள ஆசிரியர்கள் குறிப்பிட்ட தினத்தில் மாலைநேரம் வரை நிற்பதோடு தேவையான வளங்களையும் பெற்றுக் கொள்ளுங்கள். இவ்வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஆசிரியர் குழாத்திலுள்ள அனைவரது ஒத்துழைப்பும் அவசியமாகும். தேவையான எழுதும் பொருட்களை பாடசாலை நலன் விரும்பிகளிடமிருந்தும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திலிருந்தும் பெற்றுக் கொள்வோம்.

குறிப்பிட்ட நாட்களில் நடைபெறும் வேலைத்திட்டத்தினை விடயப் பொறுப்பாசிரியரே திட்டமிட்டுக் கொள்வது மிகவும் சிறந்தது. முதலில் செயற்திட்டம் பற்றி அறியப்படுத்தி பயிற்றுவியுங்கள், பயிற்சி செய்வியுங்கள். பாடசாலை மாணவர்கள் பற்றி சிந்தித்து எல்லோரும் வாரத்திலொரு நாளை அர்ப்பணித்தால் நாம் வெற்றி பெறலாம். அதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு நான் உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். எல்லோருக்கும் நல்லபொழுதாக அமையட்டும்.



## *18. ஒன்று பட்டால்............!!!*

பள்ளிக்கூடமோ ஒதுக்குப்புறம்
மாணவர் குழாமோ வறுமையின் பக்கம்
குறைவின்றிக் கிடைத்தது - எப்போதும்
கணக்கின்றி புறக்கணிப்பு…..

மாணவர்களோ அழுக்குடன்
பாடசாலையோ ஒழுங்கின்மை
சுற்றுச்சூழலோ சுத்தமின்மை - இதனால்
வீழ்ந்தது எப்போதுமே ஓர் இழிவுப் பார்வை……

ஒழுங்கமைக்கத் தேவையறிந்து
பலரும் முனைந்திடவே
அதிபரும் முன்நின்றார் அழைத்திட
அனைத்து வளங்களையும் அங்கு…….

பெற்றாரையும் பெருமையுடன் அழைத்து
ஆசிரியரை அருமையுடன் அமர்த்தி
முன்வைத்தார் அனைத்து குறைகளையும்
முதல்வனாய்த் தீர்க்கும் நோக்கில்…….

வறுமைப் பெயர் போக்கி
நற்பெயர் சேர்க்க நாடின்
நம்பிக்கையுடன் ஒன்றிணைந்து
நல்குவீர் ஒத்துழைப்பை நலம்பெற நாளை….!!

அதிபரின் அறிவுரையை அன்புடன்
அனைவரும் மதித்து இணைந்தனர்
அருமையான திட்டத்தோடு
அணிதிரண்டனர் உள்ளம் திறந்து …….

ஒழுக்கமும் ஒழுங்குகளும் கூறி
மாணவர் நடத்தை நலனோக்கி
ஆசியர் குழாமும் தம்பங்காய்
அளித்தனர் அருமையான அர்ப்பணிப்பை…..!!

எல்லா வகுப்புகளுக்கும் பள்ளியில்
வழங்கினர் அள்ளிப் புள்ளிகளாய் ஆயிரம்
'மொத்தத்தையும் காத்திடுவீர்
பிழைசெய்து குறைக்காமல் ……'

'நற்பணிக்கு புள்ளிகள் ஐந்து'
கூட்டப்படும் மொத்தத்துடன்
' பொருத்தமற்ற செயல்களுக்கும்
குறைக்கப்படும் ஐந்து…..'

ஆசான்கள் அனைவருமே
இதுபற்றி அவதானத்துடன்
பதித்திட்டனர் புள்ளிகளை
நேராய் பெயர்களுக்கெதிராய் …….

அதிக புள்ளி பெற்றிட்டால்
பரிசு வழங்கிப் பாராட்ட
தயாரித்தனர் பாடசாலையில்
அருமையான திட்டமொன்று……..

உணவாக்கக் கூடிய ஊரின்
உற்பத்திகளை பலரும் பயன்பெற
சந்தைக்காய் சரிசெய்து பொதிசெய்து
நடத்திட்டோம் வாரசந்தையை குறையின்றி…….!!

எல்லாச் சந்தைகளும் சனம்நிறைய
எல்லாப் பொருள்களும் பைநிறைய
நிறைந்தன பணப்பைகளும் குறைவின்றி
நிறைந்தன உள்ளங்கள் ஆனந்தக்கண்ணீரால் ……!

உழைத்த அத்தனை சதங்களும்
உறுதியாய் சிறாரின் நலன்களுக்கே
என்றெண்ணம் சிதையாமல் சிறுவர்
எண்ணம்போல் வழங்கிட்டோம் பரிசுகளை…..!!

உன்னதமாய் முடிவுற்ற பரிசளிப்பு விழாவில்
உயர்புள்ளி பெற்றோரும் ஏனையோரும்
பஞ்சமின்றிப் பெற்றனர் பரிசுகளை
அனைத்து உள்ளங்களும் அகமகிழ….!!

வண்ண வண்ண மலர்நிறைந்த
நீலநிற வண்ணத்தில் இடம்நிறைய
சின்னஞ்சிறு கரங்களால்
குதுாகலித்தது முழு கலையகமும்…..

பிள்ளைகள் பண்பொழுக்கங்கள்
நாளாந்தம் முன்னேற
சேர்ந்தன பாடசாலை நாமத்திற்கு
குறைவின்றி பெயரும் புகழும்…..

சிறுவர் வாழ்வு சிறக்க
குறைவின்றி உண்டு பணிகள் செய்ய
காலமறிந்து பணிசெய்தால்
வெற்றி உண்டு உனக்கன்றி உலகிற்கே….!!!

(எண்ணக்கரு – மொனராகலை கல்வி வலய ஹிந்திக்கியுல கனிஷ்ட வித்தியாலயம்)

# 19. மறைந்திருக்கும் திறன்களைத் தேடி

தரம் 10 இல் பயிலும் மாணவி சங்கவி கற்றலில் இடர்பாடுகளை வெளிக்காட்டும் மாணவி என்பது அப்பிரிவிலுள்ள ஆசிரியர்கள் அநேகரின் பொதுவான கருத்து. பிரதான பாடங்களில் அவள் குறைந்த புள்ளிகளைப் பெறுகின்ற காரணத்தினால் அவள் பல வருடங்களாக ஒன்றுமே முடியாத ஒரு மாணவியாகவே கருதப்பட்டாள். சிறு வயது முதல் ஓரளவு பருமனான உடலமைப்பைக் கொண்டிருந்த அவள் அழகியல் பாடத்தை தெரிவு செய்திருந்தாலும் அதில் தனது திறமைகளை வெளிக்காட்ட வாய்ப்புக் கிடைக்கவில்லை. எனினும் பாடசாலையின் ஏனைய செயற்பாடுகளில் மிகுந்த பங்களிப்புச் செலுத்தும் மாணவியாக ஏனைய மாணவிகளாலும் ஆசிரியர்களாலும் இனங்காணப்பட்டிருந்தாள். தனது வயதிலுள்ள மாணவியரோடும் தனக்கு மூத்த மற்றும் இளைய மாணவியரோடும் சிறந்த நேயமான உறவுகளைக் பேணுவதில் திறமை காட்டினாள்.

திருமதி சுந்தரகுமாரி 1800 மாணவர்கள் கல்வி பயிலும் தரம் 6-13 வரை வகுப்புக்களைக் கொண்ட மகளிர் பாடசாலையொன்றின் பிரதி அதிபராவார். அவர் பாட-சாலையின் இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்குப் பொறுப்பாக இருந்தார். பாட-சாலையின் முறைசார்ந்த கல்விச் செயற்பாடுகளுக்குக் காணப்படும் இணையான பெறுமதி எப்போதுமே இணைப் பாடவிதான செயற்பாடுகளுக்கும் உண்டு என்று அவர் ஆணித்தரமாக நம்பினார். சகல மாணவிகளும் பரீட்சைப் புள்ளிகளை மாத்திரம் நோக்கமாகக் கொண்டு கற்றலில் ஈடுபட்டிருப்பதனால் அவர்களின் பல்வேறு ஆற்றல்களும் உள்ளார்ந்த திறன்களும் மழுங்கடிக்கப்படுவது நாட்டின் துர்ப்பாக்கியம் எனக் கருதிய பிரதி அதிபர், மாணவர்களின் ஆற்றல்களை உரசிப் பார்க்கும் விசித்திரமான வேலைத்திட்டமொன்றை திட்டமிட்டார். மாணவர்களில் மறைந்திருக்கும் விசேட ஆற்றல்களை இனங்கண்டு அதனூடாக அவர்களுக்குப் பொருத்தமான தொழில் துறைகளை இனங்காண்பது இந்த செயற்பாட்டின் நோக்கமாகும்.

அதற்கிணங்க இனங்காணப்பட்ட 20 இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் உள்ளடங்கும் வகையில் செயற்பாடுகளையும் அதனுடன் இணைந்த போட்டிகளையும் பாடசாலையினுள் ஒழுங்கு செய்வதற்கு அதிபர் தலைமையில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஒத்துழைப்பை நாடினார்.

| | |
|---|---|
| 1. சித்திரம் | 11. அழகுக் கலை |
| 2. நடனம் | 12. உணவு தயாரித்தல் |
| 3. வாத்தியக் கருவிகளை இசைத்தல் | 13. தையல்/பின்னல் |
| 4. பாடுதல் | 14. கணனி நிர்மாண ஆக்கம் |
| 5. கைப்பணி மற்றும் சிற்பக் கலை | 15. விஞ்ஞான ஆக்கங்கள் |
| 6. அறிவிப்பாளர் தமிழ் | 16. பல்லூடக முன்வைப்பு |
| 7. அறிவிப்பாளர் ஆங்கிலம் | 17. வினாவிடைப் போட்டி |
| 8. எழுத்தாக்கம் | 18. நடிப்பு |
| 9. கவிதையாக்கம் | 19. ஆங்கிலத்திற்கு மொழிபெயர்த்தல் |
| 10. பேச்சு | 20. புலனாய்வு மற்றும் சாகச விளையாட்டுக்கள் |



பாடசாலையில் ஏதோ ஒரு போட்டியில் பங்கு பற்றுதல் கட்டாயப்படுத்தப்பட்டிருந்ததோடு ஒரு மாணவிக்கு குறைந்த பட்சம் இரண்டு போட்டிகளில் மாத்திரம் பங்குபற்ற முடியுமென நிபந்தனை வழங்கப்பட்டிருந்தது.

மூன்று நாட்கள் நடத்தப்பட்ட இந்த வேலைத்திட்டத்திற்கு பாடசாலை ஆசிரியர்களுக்கு மேலதிகமாக அண்மித்த பாடசாலை ஆசி-ரியர்களையும் பங்கேற்கச் செய்தனர். ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் அடங்கலாக பாட-சாலைச் சமூகத்தின் பரந்த ஈடுபாட்டின் பெறுபேறாக இந்த வேலைத்திட்டம் பாடசாலை வளாகத்தின் பல்வேறு பகுதிகளில் வியாபித்திருந்தது.

இப்பாடசாலையின் மாணவி சங்கவிக்கு செயற்பாடுகளில் ஏதாவதொன்றை தெரிவுசெய்ய வேண்டியநிலை ஏற்பட்டது. ஈற்றில் அவள் அபிநய நடனத்தை தெரிவு செய்தாள். அதிகமான போட்டியாளர்கள் அதில் கலந்துகொண்ட போதும் சங்கவியின் நடனம் ஆசிரியர்கள் எவரும் எதிர்பாராத வகையில் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது. சங்கவி போன்ற அநேக மாணவிகளின் திறன்கள் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளின் மூலம் வெளிக்கொணரப்பட்டமையினால் அதிபர் பெருமகிழ்ச்சி அடைந்தார். அத்தோடு பாடசாலை முகாமைத்துவக் குழுவும் மாணவர் நலன் கருதி பல்வேறு செயற்பாடுகளை ஆரம்பிக்க முன்வந்தது.

(எண்ணக்கரு - சிலாபம் கல்வி வலய கிரிமெட்டியான பௌத்த மகளிர் வித்தியாலயம்)

# 20. உலகளாவிய நடமாடும் அறிவகச் சாதனம்

நவீன தொழில்நுட்ப விருத்தியுடன் அதற்கு இணையாக நடக்கும் அறிவுப் பரம்பலை பாடசாலை கல்வித்துறையினுள் உள்வாங்கும் போது தொழில்நுட்ப சாதனங்கள் முக்கிய பங்களிப்பினைச் செலுத்துகின்றன. எனினும் பாடசாலைக் கட்டமைப்பினுள் காணப்படும் நடைமுறைத் தன்மைக்கேற்ப நவீன தொழிநுட்பம் கலந்த அறிவை மாணவ சமூகத்துக்கு பெறுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும் போது பாடசாலைகளில் காணப்படும் வளப்பற்றாக்குறையானது பெருந்தடையாக உள்ளது. இத்தடையை நிவர்த்தி செய்து கொண்டு நவீன தொடர்பாடல் தொழில்நுட்பம் கலந்த நவீன அறிவை வகுப்பறைக்குள் கொண்டு செல்ல எடுத்த அரும் முயற்சியாக இவ் உலகலளாவிய நடமாடும் அறிவகச் சாதனம் (Global Knowledge cart) என்ற செயற்திட்டத்தை அறிமுகப்படுத்த முனை-கிறது.

இச்செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக அமைந்த காரணிகள் சில.

- பாடசாலையில் காணப்படும் குறைந்தளவு கணனி வசதிகளுடன் கூடிய சிறிய அறையானது (Computer room) மாணவர்களது சகல தகவல் தொழில் நுட்ப தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு போதாமை.
- பாடசாலையில் தொலைக்காட்சிப் பெட்டி நூலகத்தில் இணைக்கப்பட்டமையால் அவ்விடத்தில் இடவசதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளமை.
- ஆசிரியர் வரவு குறைந்த சந்தர்ப்பத்தில் வகுப்புமட்டத்தில் பாடவேளைகளுக்கு பதிற்கடமை இடுவதற்கான முறையான திட்டமிட்ட வேலைத்திட்டமொன்றின் தேவை ஏற்பட்டமை.
- பாடசாலையிலுள்ள கல்விக்கான வன்பொருள், இறுவெட்டு, மென்பொருள் சாதனங்களை முறையாக பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்துதல்.

“உலகலாவிய நடமாடும் அறிவகச் சாதனம்” எனும் வேலைத்திட்டம் மேற்குறிப்பிட்ட தேவைகளின் நிமித்தம் பாடசாலை மட்டத்தில் எடுக்கக்கூடிய மாற்று நடவடிக்கையாக ஆரம்பிக்கப்பட்டது. பாடசாலையில் ஒதுக்கப்பட்ட சிறிய உருக்கு அலுமாரியை எடுத்து அதன் மேற்பகுதியில் ஒரு கணனி ஒன்று வைக்கப்பட்டது. இக் கணனி கூட கணனி அறையின் பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்டதாகும். அதனை பழுதுபார்த்து உரிய வேலைக்காக பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டது. உருக்கு அலுமாரியின் கீழ்ப்பகுதி கல்வி வன்பொருள் மற்றும் பை, ஏனைய சாதனங்களுக்காக ஒதுக்கப்பட்டதுடன் இவ்வலுமாரிக்கு நான்கு சிகப்பு சில்லுகள் இணைக்கப்பட்டு வகுப்பறைகளுக்கு தள்ளிச் செல்வதற்காக ஒழுங்குகள் செய்யப்பட்டது. இவ்வண்டி வருப்பறைகளுக்கு கொண்டு செல்லக்கூடியதுடன் அங்கே உரிய இறுவெட்டுக்களை கணனி ஊடாக செயற்படுத்துவதற்குத் தேவையான வசதிகள் செய்யப்பட்டது. அதற்கு மேலதிகமாக அவ்வசதியினூடாக இணையத்தளத்திற்கு பிரவேசிக்கக்கூடிய வாய்ப்பும் ஏற்படுத்தப்பட்டு அம்மாதத்தில் இணையத்தளத்தில் நடைபெறும் நிகழ்ச்சித்திட்டங்களை நேரடியாக பார்ப்பதற்கு அதன்படி தகவல்களை தேடுவதற்கான வசதியும் வகுப்பறைகளுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டது. இச்செயற்றிட்டத்தினூடாக தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தை வகுப்பறைக்குள் இலகுவாக கொண்டு செல்வதற்கு தேவையான நடவடிக்கையை மிக இலகுவாக முறையில் ஏற்படுத்துவதற்கு சனாதிபதி மகளிர் கல்லூரி வெற்றி கண்டுள்ளது. இவ்வுபகரணத்தை ஆசிரியர் வராத பாடவேளைகளில் பதிற்கடமைக்கான வகுப்பறைகளுக்கு தள்ளிச் செல்வதுடன் ஆசிரியர் இல்லாத சந்தர்ப்பங்களில் வெற்றிகரமாக பயன்படுத்தக்கூடிய ஒரு சாதனமாக அமைந்துள்ளது.

இச் செயன்முறையை நடைமுறைப்படுத்துவதனால் பாடசாலை பெற்றுள்ள பயன்கள் அதிகமாகும்.

- பதிற்கடமைக் கால அட்டவணையை மிகவும் சிறப்பாக முகாமைத்துவம் செய்யக்கூடியதாக உள்ளமை.
- தகவல் தொழிநுட்பத்தை பிரயோகிப்பதன் மூலம் அதன் பயன்பாடு பற்றி மாணவர்களிடத்தே உள்ள விளக்கத்தை விரிவுபடுத்திக் கொள்ளமுடிந்தமை.
- கல்வி சார்ந்த வன்பொருள், மற்றும் இறுவெட்டுக்கள் என்பவற்றை வகுப்பறையில் பன்படுத்தக்கூடிய வாய்ப்பினை பெறுதல்.
- இணையத்தள வசதியை நேரடியாக வகுப்பறைக்குள் கொண்டு செல்லக்கூடியதாக உள்ளமை.
- கணனி அறை, நூலகம் என்பவற்றுள் காணப்படும் இட நெருக்கடியை குறைக்கக்கூடியதாக அமைந்தமை
- பாடசாலையின் நாளாந்த முகாமைத்துவ செயற்பாடுகளுக்கு பொருத்தமாக அமைந்தமை.

(எண்ணக்கரு – காலி கல்வி வலய கா/சனாதிபதி மகளிர் வித்தியாலயம்)

# 21. உயிர் கூடும் (ஜீவ கொட்டுவ) விளை நிலமும்

**எண்ணக்கரு**
உக்கும் கழிவுகளை வளமொன்றாக பயன்படுத்தல்

↓

திட்டமிடலும் செயலொழுங்கும்

↓

பாடசாலை வகுப்பு முற்றங்களில் கழிவுத்தொட்டிகளை அமைத்தல்

↓

தினந்தோறும் இடைவேளையின் பின் 05 நிமிடங்கள் ஆசிரியர் மாணவர்கள் ஒன்றிணைந்து சூழலை தூய்மைப்படுத்தி உக்கும் கழிவுகளை கழிவுத்தொட்டியில் இடல்

↓

கூட்டுப் பசளை தயாரித்தல். பாடசாலை பயிர் நிலத்துக்கு பயன்படுத்தல் மற்றும் வெளிநபர்களுக்கு விற்பதன் மூலம் வருமானம் பெறல்

↓

உயிர்க் கூடு எண்ணக்கருவை சமூகத்துக்கு அறிமுகப்படுத்தலும், கிராமத்தில் 200 கழிவுத் தொட்டிகளை அமைத்தலும்.

↓

பயன்கள்

கழிவுகளை வேறுபடுத்தும் பழக்கத்தை மக்களிடையே ஏற்படுத்தல்
சேதனப் பசளை தயாரிப்பதை ஊக்குவித்தல்
பாடசாலைக்கும் சமூகத்திற்கும் வருமானம் கிடைத்தல்
இரசாயன பதார்த்தங்களை பயன்படுத்தாது பயிர்செய்தல்
சூழல் அழகுபெறல்
ஓய்வு நேரத்தை பயனுள்ள வகையில் கழித்தல்



(எண்ணக்கரு - அனுராதபுர மாவட்டத்தின் கிரலோகம சுபோதி மகா வித்தியாலயம்)

## 22. நற்பழக்க வழக்கங்கள் 365 நாட்கள்

பாடசாலை ஆரம்பித்த பின்னர் வகுப்பாசிரியை வகுப்பிற்கு வருகிறார். இன்று ஒரு கணக்கு செய்வோம் எனக் கூற, ஒவ்வொரு மாணவனும் தமது அப்பியாசக் கொப்பிகளில் அதனை எழுதுகின்றனர்.

ஆசிரியை

எல்லோரும் இலக்கம் 6 ஐ எழுதுங்கள்
இலக்கம் 6 ஐ 200 ஆல் பெருக்குங்கள்.
இப்பொழுது விடை என்ன?
விடை : 1200
1200 ஐ 11 ஆல் பெருக்குங்கள்
விடை
இப்போது 13200 ஐ 24 ஆல் வகுங்கள்
விடை : 550
இப்போது 550 ஐ 365 ஆல் வகுங்கள்
விடை அண்ணளவாக 1.5 அல்லது 1 1⁄2 ஆகும்.

இந்தக் கணக்கு என்ன? எது பற்றியது? என ஆசிரியர் விளக்கமளிக்கின்றார்.

வகுப்பறையிலுள்ள சகல மாணவர்களும் இதை ஆவலுடன் செய்து பார்க்கின்றனர்.

- இந்த 6 என்ற இலக்கத்தில் குறிப்பிடப்படுவது நாம் பாடசாலையிலிருக்கும் காலமாகும்.
- 200 எனக் குறிப்பிடப்படுவது வருடத்தில் பாடசாலை நடைபெறும் நாட்களாகும்
- 1200 எனப்படுவது வருடத்தில் நாம் பாடசாலையில் இருக்கும் மணித்தியாலயங்களாகும்.
- 13200 இனால் குறிக்கப்படுவது நாம் தரம் 1 – 11 வரை பாடசாலையிலிருந்த மணித்தியாலங்களாகும்
- 550 இனால் கூறப்படுவதானது 11 வருட காலங்கள் நாம் பாடசாலையில் கழித்த நாட்களின் எண்ணிக்கயாகும்.
- 1.5 அல்லது 1 1⁄2 இனால் கூறப்படுவதானது இந்த 11 வருட காலத்துக்குள் நாம் பாடசாலையில் கழித்த காலமாகும்.
- 11 வருடங்களுள் நாம் பாடசாலையில் கழிப்பது 1 1⁄2 வருடங்களாகும்.
- தரம் 11 முடிவடையும் போது நீங்கள் 16 வயதுப் பிள்ளையாகும்.
- அந்த 16 வருடங்களுள் நீங்கள் எம்முடன் பாடசாலையிலிருப்பது 1 1⁄2 வருட காலம் மாத்திரமேயாகும்.
- மீதி 14 1⁄2 வருட காலமும் நீங்கள் தங்கியிருப்பது வீட்டிலும் சமூகத்திலுமாகும்.

நாம் 70 வருடங்கள் வாழ்வோமானால் அந்த 70 வருடங்களிலும் நற்பிரஜையாக சமூகத்துக்கு சேவை செய்வதற்கும் ஏனைய நல்ல பழக்க வழக்கங்களை எம்முள் ஏற்படுத்திக் கொள்வதற்கும் எமக்குள்ளது 1 1⁄2 வருட காலமேயாகும். நாம் பாடசாலை காலத்துள் சிறந்த குணநலன்களை, பழக்கவழக்கங்களைப் பயில்வோமாயின் ஒரு சிறந்த பிள்ளையாக சமூகத்துக்குள் நுழையலாம்'' இது ஆசிரியரின் விளக்கமாகும்.

நாம் இன்று உங்களுக்கு ஒரு சிறிய புத்தகத்தைப் பகிர்ந்தளிப்பேன். நல்ல பிள்ளையாவதற்கு நமக்கு சிறிதளவு காலமே உள்ளது. ஒவ்வொரு நாளும் புத்தகத்தைப் பூரணப்படுத்த வேண்டும். இப் புத்தகத்தில் கூறப்பட்டுள்ள நல்ல பழக்கவழக்கங்களை நீங்கள் பின்பற்றினீர்களா? இல்லையா என்பதை (√/X) அடையாளம் மூலம் அடையாளப்படுத்துக.

இப்புத்தகத்தில் (√X) அடையாளத்தை உட்படுத்துவது யாரெனத் தெரியுமா? உங்களது தாய், தந்தை. அல்லது ஒரு பெரியவர் மட்டுமே. நீங்கள் நல்ல காரியம் ஒன்றைச் செய்தால் அது பற்றி தாய் அல்லது தந்தைக்குச் சொல்லி அவர்கள் மூலமாக இப்புத்தகத்தைப் பூரணப்படுத்திக் கொள்ளுங்கள். நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் ஒன்று சேர்ந்து வாரத்துக்கொரு முறை இப்புத்தகத்தைப் பூரணப்படுத்துங்கள். இரு வாரங்களுக்கொரு முறை உங்கள் புத்தகத்தை பரிசோதிப்பேன். நீங்கள் நல்ல பழக்கவழக்கங்களை வாழ்க்கையுடன் சேர்த்துக் கொள்வதற்கு முயற்சியுங்கள்.

கிராமிய பாடசாலையாகிய எமது பாடசாலையின் மாணவர்களின் குடும்பச் சூழலானது உயர்ந்த மட்டடத்தில் இல்லை. பெற்றோர்களைப் பொறுத்தவரையில் உயர்கல்வி அறிவைக் கொண்டவர்களல்ல. அதிகமான முரண்பாடுகளைக் கொண்ட குடும்பங்களே இங்கு காணப்படுகின்றன. சில குடும்பங்கள் போதை வஸ்துப் பாவனையால் சமூகப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளன. தொலைக்காட்சிக்கு அடிமைப்பட்ட குடும்பங்களும் உள்ளன.

பிள்ளைகள் அதிகமான நேரத்தினை வீட்டிலேயே கழிக்கின்றனர். பிள்ளைகளுக்கு நல்ல பழக்க வழக்கங்களைச் சொல்லிக் கொடுப்பதற்கு வீட்டில் உள்ளவர்களிடம் அக்கறையில்லை. இத்தகைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண பாடசாலையானது 365 நாட்கள் திட்டத்தினை நடைமுறைப்படுத்துகின்றது, விரும்பத்தகாத சுற்றுச்சூழல்களில் தமது காலத்தைக் கழிக்கின்ற பிள்ளைகளிடையே நற்பழக்க வழக்கங்கள் மற்றும் சிறந்த மனப்பாங்குகளைக் கட்டியெழுப்புதல் இந்த செயற்திட்டத்தின் நோக்கமாகும். பல்வேறு இடர்பாடுகளைத் தாண்டி இச்செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இதன் முதல் நடவடிக்கையாக எல்லா மாணவர்களதும் வீடுகளுக்கும் நல்லொழுக்க வழிமுறைகள் 15 அறிமுகப்படுத்தப்பட்டன. இவை 15 உம் வருடம் முழுவதும் அதாவது 365 நாட்களும் நடைமுறைப்படுத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த ஒழுங்குளைப் பின்பற்ற பெற்றோருக்கு ஆலோசனை வழங்கப்பட்டதோடு அதன்படி செயற்படுகிறார்களா? என்பதைக் கண்காணிப்பதும் பாடசாலை மூலமே இடம்பெற்றது. இப்பழக்க வழக்கங்கள் 15 உம் உள்ளடக்கிய மதிப்பீட்டுப் பத்திரமொன்றும் வீடுகளுக்கு வழங்கப்பட்டு அப்படிவத்தின் குறிகாட்டிகள் 0, 1, 2 என்ற புள்ளிகளின் அடிப்டையில் மதிப்பீட்டிற்காக மாணவரிடம் ஒப்படைக்கப்பட்டது. எழுமாற்றாக வீடுகளுக்கு தொலைபேசி அழைப்பு விடுத்து இப்பணி தொடர்பாக மாணவரிடம் கேட்டறிந்து கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.



| | நல்ல பழக்க வழக்கங்கள் | திநம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | | |
| 1 | நித்திரை விட்டு எழுந்து கட்டிலைச் சரி செய்தல் | | | | | | | |
| 2 | காலை மாலை பெற்றோரை வணங்குதல் | | | | | | | |
| 3 | பெற்றோருக்கு உதவுதல் | | | | | | | |
| 4 | தாம் பயன்படுத்தும் பொருட்களைச் சுத்தமாக வைத்திருத்தல் | | | | | | | |
| 5 | நித்திரைக்குமுன் பல் துலக்குதல் | | | | | | | |
| 6 | தினந்தோறும் கடவுளை வணங்குதல் | | | | | | | |
| 7 | தினந்தோறும் கற்றலில் ஈடுபடல் | | | | | | | |
| 8 | தம்முடைய ஆடை அணிகள், புத்தக மேசை என்பவற்றை சுத்தமாக வைத்திருத்தல் | | | | | | | |
| 9 | கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மற்றவர்களுக்கு உதவுதல் | | | | | | | |
| 10 | வாரத்துக்கொருமுறை நூலொன்றை வாசித்தல் | | | | | | | |
| 11 | விசேட தினங்களில் வணக்கஸ்தலங்களுக்குச் செல்லல் | | | | | | | |
| 12 | கழிவுப் பொருட்களை அதற்குரிய இடங்களில் போடுதல். | | | | | | | |
| 13 | எம்மிலும் வயது குறைந்தவர்களின் கற்றல் நடவடிக்கைக்கு உதவி செய்தல், தனக்குத் தெரிந்த கதை, பாடல்களைச் சொல்லிக் கொடுத்தல் | | | | | | | |
| 14 | சாப்பிடும் போது கதைக்காமலிருத்தல் | | | | | | | |
| 15 | குடும்பதிலுள்ள சகலரோடும் அந்நியோன்யமாகவும் ஒற்றுமையாகவும் வாழு-தல் | | | | | | | |

இதன் பிரதிபலன்கள் பாடசாலைக்குக் கிடைத்தது. மாலையில் எந்தவொரு நாளிலும் மலர்ப்பூசை செய்யாத குடும்பங்கள் அதைச் செய்தனர். குடிபோதையுடன் வீட்டுக்கு வரும் பெற்றோர்கள் அதிலிருந்து தவிர்ந்துகொண்டார்கள். எப்போதும் ஒன்றாக உட்கார்ந்து உணவருந்தாத குடும்ப உறுப்பினர்கள் ஒன்றாக உட்காரந்து உணவருந்தினார்கள். ஆசிரியர் குழாத்தினர் அனைவரும் உற்சாகத்தோடு இதில் பங்குபற்றினார்கள்.

அடுத்த வருடத்தில் இதை 3 முறைகள் செயற்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது. பழக்க வழக்கங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்குமாறும் தினமும் தொலைபேசி அழைப்பு விடுத்து தகவல் கேட்குமாறும் தாய்மார்கள் அநேகர் வேண்டிக்கொண்டனர்.

இந்தச் செயற்திட்டம் பற்றி எமது பாடசாலைப் பெற்றோர்கள் மட்டுமன்றி ஊரில் கடைத்தெருவிலும்கூட பேசப்பட்டது. மதுபானம் அருந்தச் சென்ற பெற்றோருக்கு அந்த இடத்தில் மதுபானம் பெற்றுக் கொடுக்காது இந்த ‘ இரு வாரங்களும் குடிக்க முடியாதுதானே’ எனக் கேட்டதாகவும் தகவல் கிடைத்தது.

(எண்ணக்கரு - கேகாலை கல்விவலய களுகல கனிஷ்ட வித்தியாலம்)

# 23. விண்வெளிப் பயணம்

***பாடசாலையிலுள்ள ஒரேயொரு அவதானிப்பு நிலையம்***

**முதல் தடவையாக பாடசாலையில்
கோள் மண்டலம்.**

**விண்ணியல் விஞ்ஞான ஆய்வினை ஊக்கப்படுத்துவதற்கான
பாடசாலை பயிற்சி நிலையம்**

மேலே காணப்படும் செய்தித் துணுக்குகள் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் கேகாலை புனித மரியாள் தேசிய பாடசாலையில் நடைமுறைப்படுத்தப்படும் மிகச்சிறந்த செயற்பாட்டு செய்தித் தாள்கள் மற்றும் சஞ்சிகைகளில் வெளியானவைகளாகும்.

தற்போது இலங்கையில் நடைமுறையிலுள்ள மிகப் பழைமை வாய்ந்ததாகக் கருதப்படும். “Broadherst Cearkson” வகையிலான தொலை நோக்கி இப்பாடசாலையில் பாதுகாக்கப்பட்டு அதனூடாக சிறந்த பயனைப் பெற்றுக் கொள்ள பாடசாலையின் ஆசிரியர்களும் மாணவர்களும் மேற்கொள்ளும் முயற்சியைப் பாராட்ட வேண்டும்.

பாடசாலையின் வளமாகிய இந்த தொலை நோக்கியை பழுதுபார்த்து பயன்படுத்துவதன் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் படங்களை கணனித் தொழில்நுட்பத்தினுடாக தொடர்பு படுத்தி ஒரே தடவையில் பெரும் எண்ணிக்கையான மாணவர்களுக்கு பயன் படுத்தக் கூடிய வகையில் தற்போது வசதிகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.


பெரும்பாலான பாடசாலைகளில் விண்ணியல் விஞ்ஞான சங்கம் அமைக்கப்பட்டிருந்தாலும் ஆசிரியர்களையும் பாடசாலை மாணவர்களையும் பயிற்றுவிக்கக் கூடிய விண்ணியல் விஞ்ஞான பயிற்சி நிலையம் ஒன்றிற்கு உரிமை கூறும் ஆற்றலுள்ள இலங்கையின் தனியொரு பாடசாலை கேகாலை புனித மரியாள் தேசிய பாடசாலையாகும்.

இந்த விண்ணியல் விஞ்ஞான பயிற்சி நிலையமானது விண்வெளி அவதான நிலையம் ஒன்றுடன் இணைந்தது அதனைப் பயன்படுத்தி அடிப்படை விண்ணியல் விஞ்ஞானப் பயிற்சிப் பாடநெறியும் உருவாக்கப்பட்டுள்ளது.

விண்ணியல் விஞ்ஞானத்தின் அடிப்படை எண்ணக்கருவைத் தெளிவுப்படுத்துதல் இந்த வேலைத்திட்டத்திற்கு உரியதாகும். இன்றுவரை கேகாலை மாவட்டத்தில் பாடசாலைக-ளில் தரம் 06-09 மாணவர்கள் 1500 அளவில் பயிற்றுவிக்கப்பட்டுள்ளதோடு கேகாலை வலயத்தில் தரம் 09 மாணவர்களுக்காக பாடத்திட்டத்திற்கு இணைவாக தயாரிக்கப்பட்ட பயிற்சி நெறி, ஆசிரியர் பயிற்சி நெறி, உயர் தர வகுப்பு மாணவர்களுக்காக இரவில் வானத்தை அவதானித்தல் உட்பட விண்ணியல் விஞ்ஞான செயலமர்வும் நடத்தப்படுகிறது.

இன்று வரை கொழும்பு பல்கலைக் கழகத்தின் உயிரியல் விஞ்ஞானப் பிரிவு, தேசிய விஞ்ஞான மன்றம் மற்றும் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சு என்பன தேவையான தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக் கொடுக்க முன்வந்துள்ளன.

பாடசாலைப் பாடவேளைகளில் ஓய்வான நேரங்களில் இணைப் பாட விதானச் செயற்பாடுகளில் ஒன்றாக விண்ணியல் விஞ்ஞானம் தொடர்பாக விரிவுரைகள் மற்றும் செயற்பாடுகளுக்காக 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த பயிற்சித் தொகுதி இன்று வரை கேகாலை கல்வி வலயத்தில் மட்டுமல்லாது சப்ரகமுவ மாகாணத்திலும் ஏனைய மாகாணங்களிலும் பாடசாலை மாணவர்களுக்கு அண்டவெளி, விண்ணியல் விஞ்ஞானம் தொடர்பான அறிவை வழங்கக் கூடிய பாரிய களமாக உருவா-கியுள்ளது. 2014 ஆம் ஆண்டு தொடங்கிய இந்த வேலைத்திட்டம் 2015 ஆம் ஆண்டில் மாத்திரம் 90 பாடசாலைகளின் மாணவர்களை பயிற்றுவிப்பதற்கு முடிந்துள்ளமை ஆச்சரியமானது.



இந்தப் பயிற்சிகளுக்காக பாடசாலை விஞ்ஞான ஆசிரியர்களுடன் மாணவர்கள் உள்ளடங்களாக பயிற்சிக் குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. பயிற்சிக் குழுக்களுக்கு, உரிய மாணவர்களுக்கு பல்வேறு வழிகளில் தங்களது அறி-வையும் ஆற்றலையும் முன் வைப்பதற்கும் அவர்களது திறன்களை புதுப்பித்துக் கொள்வதற்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

(எண்ணக்கரு:- கேகாலை புனித மரியாள் தேசிய பாடசாலை)

# 24. எமது பாடசாலைக்கும் வீதி விளக்கு

இணைப்பாடவிதான தரவட்டக் கூட்டத்தில் பாடசாலையினுள்ளே வீதி சமிக்ஞை ஒழுங்கொன்றை அமைக்க வேண்டும் என தரம் 5 வகுப்புப் பொறுப்பாசிரியை விடுத்த வேண்டுகோள் அனைவரிடத்திலும் ஒரு சலசலப்பைத் தோற்றுவித்தது.

“அது செய்ய முடியுமான வேலையா?”

இது சாத்தியமா? என்பதே அந்த சலசலப்பு

அப்போது தரம் 5 பொறுப்பாசிரியை அமைதியாகப் பின்வரும் விளக்கத்தை சபைக்கு வழங்கினார்

1. இனங்காணல் சோதனையின்போது வீதி ஒழுங்குமுறையில் அநேகமான மாணவர்கள் குறைவாகப் பதிலளித்துள்ளமை.
2. எமது மாணவர்கள் எந்நேரமும் பிரதான வீதியைப் பயன்படுத்துவதில்லை
3. பிரதான வீதியை முறையாகப் பயன்படுத்துவது பற்றிய பயிற்சி இவர்களிடமில்லை
4. எந்நேரமும் ஊரிலுள்ள ஒற்றையடிப்பாதையை மட்டுமே பயன்படுத்துகின்றமை
5. பிள்ளைகள் பிரதான வீதி ஒழுங்குகளை அறிந்திருப்பது அவசியம்
6. அந்த அனுபவத்தை பாடசாலையினுள்ளே பெற்றுக்கொடுப்பது மிகவும் பயன்மிக்கதாகும்.

இதனைச் செவியுற்ற அனைவரும் இத்திட்டத்தை அமுலாக்க இணங்கினர்.

செயன்முறை;

- ஒரு மாதிரி அமைப்பைச் செய்து பாடசாலை சமூகத்தை அறிவூட்டுதல்
- மாதிரி அமைப்புக்கேற்றவாறு பாடசாலையினுள் வீதிகளை ஒழுங்கமைத்தல்.
- அந்த வீதியில் சமிக்ஞையைத் தயார் செய்து பொருத்துதல்
- மாணவர்களை சரியான வீதி ஒழுங்கைப் பின்பற்றச்செய்தல்.
- மாணவர்கள் வீதி ஒழுங்கைச் சரியாகப் பின்பற்றுவத பற்றி மதிப்பீடு செய்தல்.

மாதமொருமுறை ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு பிரதான வீதி பற்றியும், வீதி ஒழுங்குகள் பற்றியும் செய்முறை அனுபவத்தைப் பெற்றுக்கொடுக்கும் செயற்றிட்டம் நடைமுறையிலுள்ளது, மாணவர்கள் பொலிஸ் அதிகாரியாகவும், வாகனங்களாகவும், பாதசாரிகளாகவும் தமது வகிபங்கைச் செலுத்தினர். இதற்காக இரண்டு பாடவேளைகள் ஒதுக்கப்பட்டுள்ளதோடு இப்பாடவேளையில் மாணவர் மிகுந்த ஆர்வத்துடன் தயாராகின்றனர்.




(எண்ணக்கரு - நிகவரடிய கல்விவலய குமார வித்தியாலயம், இத்தேவ ஆரம்பப் பாட-சாலை)

# 25. தேயிலைத் தோட்டத்திலே கூட்டம்

நேரம் 9.00 மணி கடந்து கொண்டிருந்தது. வளைவுகளைக் கொண்ட பாதையில் தேயிலைத் தோட்டங்களை கடந்த வண்ணம் எமது வாகனம் முன்னேறிச் சென்றது. பாதை வழியே கொழுந்து பறிக்கும் பெண்கள் கொழுந்துகள் நிறைந்த கூடைகளை தம் தோளில் சுமந்த வண்ணம் அவசர அவசரமாக எமது வாகனம் செல்லும் திசையிலே நடந்து சென்றனர். மேலும் ½ கிலோ மீற்றர் தூரத்தைக் கடந்து வாகனம் நிறுத்தப்பட்டது. அது கொழுந்துகளை நிறுக்கும் இடமாகும். அப்போதும் கொழுந்து பறிப்போர் அவ்விடத்தில் கூடி நின்று தமது கூடைகளிலுள்ள கொழுந்துகளை நிறுத்துக் கொண்டிருந்தார்கள்.

கல்வி அமைச்சின் அதிகாரிகளான எங்களுடன் அவுஸ்திரேலிய நாட்டைச் சார்ந்த தேசிய கல்வி ஆலோசகர் ஒருவரும் இருந்தார். இலங்கையின் மத்திய மலைநாட்டுக்குரிய இடங்களில் மக்களின் வாழ்க்கை, கலாசாரம், பொருளாதார சமூக அமைப்பு பற்றி அவருக்கு விளக்கமளித்த வண்ணம், நாமும் பஸ்ஸர பிரதேசத்திற்கு பாடசாலை ஒன்றினை கண்காணிக்கச் செல்லும் வழியிலேயே அவ்விடத்தில் வாகனத்தை நிறுத்தினோம். ஏதோ ஒரு வகையில் விஷேடத்துவம் பெற்ற ஒரு நபரும் அவ்விடத்திற்கு வருகை தந்திருந்தார்.

அவர் அப்பிரதேசத்தில் மிகவும் பிரபல்யம் வாய்ந்தவர். கௌரவத்துக்குரியவர் என்பதை அவ்விடத்தில் கூடியிருந்தோரின் முகத்திலும் வாயிலிருந்து வெளியாகும் பேச்சிலிருந்தும் விளங்கிக் கொண்டோம். சிறிது நேரத்தின் பின் அவர் அங்கு கூடியிருந்தோரை பார்த்து சில தகவல்களைச் கூறியதுடன் சில விடயங்களை பற்றி சுருக்கமாகவும் கேட்டுத் தெரிந்து கொண்டார். தமிழ் மொழியில் இடம் பெற்ற கலந்துரையாடல் வழங்கிய தகவல்கள் பாடசாலையினதும் மாணவர்களதும் பாதுகாப்பு தொடர்பான வேலைத்திட்டம் பற்றியதென தெளிவாகிறது. அவர் கல்வித் துறை சார்ந்தவர் என்பதும் விளங்கியது. அவரது அறிவுறுத்தல்களுக்கு பின்னர் அவருடம் நாமும் கதைத்தோம்.

ஆரம்ப பாடசாலை அதிபரொருவரான அவர் சரளமாக சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் எம்முடன் தகவல்களைப் பரிமாறிக் கொண்டார். அவ்வதிபர் ஆரம்பப் பிரிவு தோட்டப்பாடசாலையொன்றில் தலைமைத்துவம் வகிப்பதுடன் அப்பாடசாலை மாணவர்களது பெற்றோர் கொழுந்து பறித்தலிலும் அது தொடர்பான வேறு தொழில்களிலும் ஈடுபடுவோர் என்பதை அவர் மூலம் தெரிந்து கொண்டோம். பாட-சாலையின் பல்வேறு விடயங்கள் பற்றியும் மாணவர்கள் பற்றியும் கலந்துரையாட, பெற்றார் கூட்டத்தை பாடசாலை நேரத்தில் நடத்துவது மிகவும் சிரமமான காரியம் என்பதையும் அந்நேரத்தில் அவர்களை பங்குபற்றச் செய்வதால் அவர்களது நாளாந்த சம்பளம் கிடைக்காமல் போகும் என்பதையும் அதிபர் எமக்கு தெளிவுபடுத்தினார். வறுமையாலும் கல்வி அறிவின்மையாலும் அல்லலுறும் இவர்களுக்கு எதிர்கால கனவுகள் இருக்கவில்லை எனினும் தம் ஒரே செல்வமான பிள்ளைகளது எதிர்காலத்தை ஒளிமயமாக்குவது அவர்களது முக்கிய நோக்கமாகும். அதற்காக பாடசாலைக்கு செய்ய வேண்டிய கடமைகள் பற்றி நன்குணர்ந்த அதிபரொருவர் எங்களுக்கு கிடைத்துள்ளார் என்பதை அவர்களது பேச்சிலும் நடத்தைகளிலும் தெளிவாயிற்று

அதற்காக பெற்றாரை பாடசாலைக்கு அழைப்பதற்குப் பதிலாக அவர் பெற்றாரிடம் சென்று தேவையான செய்திகளையும் தகவல்களையும் பரிமாறிக் கொள்வதற்கு பின்வாங்கவில்லை. கோட்டம் மற்றும் வலய காரியாலயங்களினால் கிடைக்கும் அறிவுறுத்தலின் படி நடைமுறைப்படுத்த வேண்டிய வேலைத்திட்டங்கள் பாடசாலை மட்டத்தில் கல்வி அபிவிருத்திக்காக திட்டமிடப்படும். செயற்திட்டங்கள் நடத்துவதற்கு பெற்றாரை அறிவுறுத்தும் இடமாக அவ்வதிபர் தெரிவு செய்திருப்பது கொழுந்து நிறுக்கும் இடத்தையாகும். அதிபருக்குரிய சமூக வரவேற்பும் கௌரவமும் மரத்திற்கு மரப்பட்டை எவ்வளவு முக்கியமோ அவ்வாறே அதிபருக்கும் சமூகத்திற்கும் இடையே நிலவும் உறவு காரணமாக தோட்ட நிர்வாகம் விசேட அனுமதியை இதற்காக வழங்கியிருந்தது.

தினமும் காலை 9.00 மணி, பகல் 12.00 மணி, பின்னேரம் 4.00 மணிக்கு பறித்த கொழுந்துகளை நிறுத்து ஒப்படைப்பதற்கு வரும் பெற்றாரை இலகுவில் சந்திக்க முடியும். அவ்விடத்தில் பெற்றோரில் அநேகமானோர் ஒன்று சேர்வதால் தேவையான நேரங்களில் தகவல்களையும் அறிவுறுத்தல்களையும் பெற்றுக் கொடுக்க அதிபர் தேநீர் வேளை 9.00 மணிக்கு வருவார். இதனால் மாணவர்களது கல்வி மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளின் அபிவிருத்தி பற்றி பெற்றாரின் கவனம் தொடர்ச்சியாக கிடைத்துள்ளது. பாடசாலை பற்றி மிக பெறுமதியான எண்ணக்கருவினை மக்களிடத்தே நிலைக்கச் செய்வதும் இச்செயற்பாடாகும்.

(பஸ்ஸர எல்டெப் இல 1 தமிழ் வித்தியாலயம்)

## 26. சிந்தனை ஊற்றை திறந்திடலாமா........

அறிவிப்பாளர்: நாம் இப்போது நமது வைபவத்தின் முக்கிய கட்டத்திற்கு வந்திருக்கிறோம். இந்த வருடத்தின் மிகச் சிறந்த மாணவனுக்கான பரிசினை வழங்குவதற்கான நேரம். உயிரியல் விஞ்ஞானத்தில் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்ற எமது பாடசாலையின் உதேஸ் சங்கர் அவர்களை தனது பரிசினைப் பெற்றுக் கொள்வதற்கு மேடைக்கு அழைக்கின்றோம்.

(கரகோஷங்களுக்கு மத்தியில் உதேஸ் மேடைக்கு வருகிறார்.)

நாங்கள் உங்களை அன்புடன் வரவேற்கிறோம். பாடசாலையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்குபற்றியதோடு உயர்தரப் பரீட்சையிலும் சிறப்பாக சித்தியடைந்துள்ளீர்கள். உங்கள் வெற்றிக்கு பிரதான காரணம் இருக்குமென நினைக்கிறோம். அதைப்பற்றிய உங்களது கருத்தினை கூறுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது.

உதேஸ் சங்கர்: மிகவும் நன்றி. அனைவருக்கும் வணக்கம். இது என்னுடைய வாழ்வில் மிக முக்கியமான சந்தர்ப்பம். என்னுடைய பள்ளி வாழ்க்கையின் சிந்தனையை மீட்டுவதற்கு எனக்கு வழங்கப்பட்ட அழைப்பை ஏற்றுக் கொள்கிறேன்.

நான் கடந்த வருடம் அகில இலங்கை ரீதியிலான விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு தங்கப் பதக்கம் வென்றமை உங்கள் யா-வருக்கும் நினைவிருக்கும். அவ்வாறே சென்ற வருடம் சுற்றாடல் கழகத்தினால் எங்களுக்கு பாடசாலை ரீதியாக சிறந்த சுற்றாடல் முகாம் ஒன்றினை நடாத்த முடிந்தது. அதற்கு முன்னைய வருடத்தில் புதிய கண்டுபிடிப்பாளர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட கண்காட்சியில் வெற்றிபெற்ற ஆக்கம், சர்வதேச ரீதியிலும் விருதுபெற முடிந்தது. நானும் அதில் ஒருவனாக பங்காற்றிய காரணத்தினால் அது பற்றி கௌரவமாகப் பேசுகின்றேன். சகல இணைப்பாடவிதானம் மற்றும் வெளிச்செயற்பாடுகளில் ஈடுபட்டதுடன் உயர்தர விஞ்ஞான, கணிதப் பிரிவில் மிகச் சிறந்த திறமையினை வெளிக்காட்ட எனக்கும் எனது உயர்தர வகுப்பு சகோதரர்களுக்கும் எவ்வாறு முடிந்தது என்பது பற்றி கூற முனைகின்றேன்.

உயிரியல் பாடத்துறையில் கற்ற எங்களுக்கு பௌதீக விஞ்ஞான பாடமே மிகவும் கடினமாக இருந்தது. அதைப் போலவே உயர் தரத்தில் செயன்முறைப் பரீட்சைகளில் ஒரு தொகுதி வினாக்கள் அடங்குகின்றன. பல்தேர்வு வினாக்களைப் போலவே கட்டுரை மற்றும் அன்றாட வாழ்க்கையின் சரளமான விஞ்ஞான ரீதியான எண்ணக் கருக்களை இனங்கண்டு கொள்வதற்கும் செயன்முறை பரீட்சையை எதிர் நோக்குவது மாணவர் சமூகத்துக்கு மிக முக்கியமானது. ஆனாலும் உயர் தர கணித விஞ்ஞானப் பிரிவில் அனேகமான மாணவர்களுக்கு இவ்வாறான பாடவேளைகள் விடுபடுகின்றன. இணைப்பாடவிதான செயற்பாடுகளில் இவர்கள் ஈடுபடுவதனால் கல்வி சார் விடயங்களுக்கு காலம் போதாமலிருப்பதே இதற்கான காரணமாகும். எமது பாடசாலையில் இதற்காக அதிகமான சந்தர்ப்பங்களும் வாய்ப்புக்களும் வழங்கப்பட்டுள்ளன.

எமக்கு பௌதிக விஞ்ஞானம் கற்பித்த லலிதா மிஸ் தான் அதிபருடன் கதைத்து விஞ்ஞான, கணிதப் பிரிவு மாணவர்களுக்கு விடுபடுகின்ற பௌதிக விஞ்ஞான செயன்முறைகளை மேற்கொள்வதற்கான நேர ஒதுக்கீட்டுக்கான மாற்றுவழி பற்றி கலந்துரையாடினார். இச் சவாலை வெற்றிகொள்ளும் வழிமுறைகள் பற்றி எம்மிடமும் வினவினார். இவ்வாறாகவே கற்றலுக்கு இடமளிக்கும் செயல் ரீதியான வேலைத்திட்டம் உருவானது. இதனை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

முதலில் கணித விஞ்ஞான வகுப்புக்களின் குழுக்களுக்கு ஆய்வுகூடம் பிரித்து ஒதுக்கப்பட்டது. இதற்காக 5S எண்ணக்கருவை பயன்படுத்திக் கொண்டோம். முறையான கால அட்டவணையையும் தயாரித்தோம். காலை 6.00 மணி தொடக்கம் பி.ப.3.00 மணிவரை பங்கேற்கும் வகையில் லலிதா டீச்சர் அந்தப் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டார்.

அதன் பின் பௌதீக மற்றும் இரசாயனவியல் பாடத்திற்கான செயன்முறைப் பரீட்சை/ பயிற்சிகள் யாவும் விஞ்ஞான ஆய்வு கூடத்தினுள் மாதிரிகளாக காட்சிப்படுத்தப்பட்டன. இதனைக் காட்சிப்படுத்துவதற்கான பின்னணியை நாங்கள் உருவாக்கினோம். லலிதா டீச்சர் அவற்றை நேர்த்தியாக தரப்படுத்தினார். பாடசாலை அபிவிருத்திக் குழுவின் அனுசரணையுடன் உருவாக்கப்பட்ட விஞ்ஞான கூடத்தில் பெரிய அளவிலான LCD திரை அமைக்கப்பட்டது. அந்தத் திரைகளில் செயன்முறை செயற்பாடுகள் அடங்கிய பாட அலகுகள் காட்சிப்படுத்தப்பட்டன. எங்களுக்காக ஒதுக்கப்பட்ட நேரத்தில் தவறாமல் அவற்றைக் கற்றுக் கொண்டோம். அனேக நேரங்களில் நான் காலை 6.00 மணிக்கே அதில் பங்கேற்றேன். லலிதா டீச்சர் எங்களுக்கு முன்பே விஞ்ஞான ஆய்வு கூடத்திற்கு வந்திருந்தார். அன்பான சகோதர சகோதரிகளே, நான் கடந்து வந்த பாதை எதுவென்று உங்களுக்குத் தெரிகிறது தானே? அதற்காக பாடசாலையிலிருந்து கிடைத்த வழிகாட்டல், லலிதா டீச்சரின் பங்களிப்பினை நாம் பெரிதும் மதிக்கின்றோம். அதற்காக இச் சந்தர்ப்பத்தில் நான் அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன். நான் பெற்றுக் கொண்ட இந்த வெற்றி எனது தனிப்பட்ட வெற்றியல்ல. பாடசாலையின் வெற்றியே. அதற்கு எங்களுக்கும் பங்களிப்புச் செய்ய சந்தர்ப்பம் கிடைத்தமையை இட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். அனைவருக்கும் எனது நன்றிகள்.

பலத்த கரகோஷம் எழுந்து ஓய்ந்தது. லலிதா டீச்சரின் கண்களிலிருந்து வழிந்த ஆனந்தக் கண்ணீரை அவர் துடைப்பது தெரிந்தது.

(எண்ணக்கரு - கண்டி புனித சில்வெஸ்டர் கல்லூரி)




# 27. பாடசாலை நாட்குறிப்பு

இது தரம் 1 - 13 வரையிலான வகுப்புகள் காணப்படும் ஒரு 1AB வகைப் பாடசாலையாகும். சிங்கள, தமிழ் மொழிமூல மற்றும் இருமொழி என மூன்று பிரிவுகளாக இங்கு கற்றல் கற்பித்தல் இடம்பெறுகின்றது. 3500 ற்கும் மேற்பட்ட மாணவர்கள் அறிவொளி பெறும் இப்பாடசாலையில் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளும் சிறப்பாக இடம்பெறுகின்றன. பொறுப்புள்ள மாணவர் சமூகம் ஒன்றைக் கட்டியெழுப்பும் நோக்கில் நிறைய செயற்திட்டங்கள் இங்கு செயற்படுத்தப்படுகின்றன. இங்கு மாணவர்களின் அன்றாட நடவடிக்கைகளைப் பதிந்து வைப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் "மாணவர் தினக்குறிப்புப் புத்தகம்" சாதாரண தினக்குறிப்புப் புத்தகத்தைப் போலன்றி பாடசாலை முகாமைத்துவச் செயற்பாடுகளையும் இலகுபடுத்தும் ஒரு கோவையாகும். குறிப்பாக மாணவர்களின் அன்றாட பாடசாலைச் செயற்பாடுகள் தொடர்பாக ஆசிரியர்களும், பெற்றோரும் தெரிந்துகொள்ளக்கூடிய ஒரு சாதனமாகும்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் பாடசாலைச் சமூகத்துடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் தீர்மானப்படி இதில் உள்ளடக்கப்பட வேண்டிய அம்சங்கள் தீர்மானிக்கப்பட்டன. இதன் அடிப்படையில் முகாமைத்துவ கட்டமைப்பு, நோக்கம், பொறுப்புக்கள், பாடசாலை சட்ட ஒழுங்குவிதிகள், விளையாட்டு மற்றும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகள், ஆசிரியர் மையச் செயற்திட்டங்கள், மாணவர் வரவு தொடர்பான பிரச்சினைகள் போன்ற தகவல்கள் இங்கு உள்ளடக்கப்பட்டன. மாணவர்களுக்கு இந்த "மாணவர் பதிவுப் புத்தகம்" வருட ஆரம்பத்திலேயே வழங்கப்பட்டதோடு பெற்றோரின் ஒத்துழைப்போடு அதில் ஆங்கிலத்தில் தகவல்களைப் எழுதுவதற்கும் வழிகாட்டப்பட்டது.

"மாணவர் பதிவுப் புத்தகத்தின்" ஒவ்வொரு பக்கங்களிலும் மாணவர்களுக்கான அறிவுறுத்தல்கள், முன்மாதிரிக் கூற்றுகள் உள்ளடக்கப்பட்டிருந்தன. தினமும் பதிவுப் புத்தகத்தில் குறிப்பெழுதும் மாணவர்கள் தமது குறிப்புகளை வாசிக்கையில் அந்தப் பொன்மொழிகள் மூலம் தமது வாழ்க்கையை மேம்படுத்தும் இலட்சியங்களைக் கட்டியெழுப்பிக் கொண்டனர்.

மாணவர்களின் குறிப்பேடுகள் தினமும் வகுப்பாசிரியர்கள் அல்லது மாணவத் தலைவர்கள் மூலம் பரிசீலிக்கப்பட்டது. இதன்போது மாணவர்களின் தகவல்களில் காணப்படும் இலக்கணப் பிழைகள் திருத்தப்படவும் சந்தர்ப்பம் கிடைத்தது. தினக்குறிப்பேட்டின் அறிமுகத்தினால் பாடசாலை அநேக நன்மைகளைப் பெற்றுக் கொண்டது. இதில் முதல் பகுதியில் உள்ளடக்கப்பட்டிருக்கும் தகவல்கள் பாடசாலை சமூகமானது பாடசாலைச் சட்டதிட்டங்கள், முகாமைத்துவ ஒழுங்கு, கலாச்சார அம்சங்கள் என்பவற்றை அறிந்துகொள்ள உதவியதோடு முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கும் இலகுவாக அமைந்தது. குறிப்பாக மாணவர், பெற்றோர், ஆசிரியர் தொடர்புகளுக்கு உறுதுணையாக அமைந்தது. மாணவரின் ஆங்கில மொழிவிருத்திக்கும் இது துணையாக அமைந்தது. குறிப்பாக மாணவரின் அன்றாட செயற்பாடுகளை மீண்டும் மீண்டும் வலியுறுத்தவும் இதனால் வாய்ப்புக் கிடைத்தது.



(எண்ணக்கரு - கேகாலை கல்விவலய கேகாலை வித்தியாலயம்)

# 28. தொலைத் தொடர்பினால் புதுவாழ்வு பெறும் பாடசாலை

கா/தலாகஸ்தெனிய ஜயந்தி வித்தியாலயத்திற்கு பெருமையைத் தேடித் தரும் பல சுவாரஸ்யமான விடயங்கள் உள்ளன. பிரசித்தி பெற்ற பாடசாலைகளைப் பற்றி மக்களுக்கு செய்திகளை பரிமாறும்போது இந்த வித்தியாலயம் பெற்றுள்ள முன்னேற்றத்தைப் பற்றி கவனம் எடுக்க வேண்டும். இன்று பாடசாலையில் அனைத்து செய்தி பரிமாற்றத்திற்கும் அதிபர் உட்பட ஆசிரியர் குழாத்திற்கும் தொலைத் தொடர்பு சாதனங்களை பயன்படுத்த முடியாத நிலை உள்ளது.

நவீன தொடர்பாடல் முறையின் மூலம் மனித வளத்தையும் அதிக செலவினத்தையும் கொண்டு செயற்படுத்தும் வேலையினை தமது தொலைபேசியின் மூலம் பாடசாலை Webs.lk இன் மூலமாகவும் செய்துகொள்கிறார். சில வருடங்களுக்கு முன்பு தமது பாடசாலையின் செயற்பாடுகளுக்கு தகவல்களை பரிமாறும்போது பல இடர்பாடுகளுக்கு முகங்கொடுக்கவேண்டியிருந்தது. இச்செயற்பாடுகளை செவ்வனே நிறைவேற்றுவதற்கு நவீன தொடர்பாடலை அறிமுகம் செய்வது பற்றி தாம் சிந்தித்தமை பாடசாலையின் வசந்தகாலமே எனலாம்.

1100 மாணவர்களையும் 28 ஆசிரியர்களையும் கொண்டு இயங்கும் இப்பாடசாலையின் அதிபர் பெற்றோர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தும் போது எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வினை காண்பதற்கு ஒரு புதிய யோசனையை சில வருடங்களுக்கு முன்பு பாடசாலை அபிவிருத்திக் கூட்டத்தில் முன் வைத்தார். அன்றைய தினம் அவர் ஆற்றிய உரை பின்வருமாறு. இது ஒரு முக்கிய யோசனையாகும். ஆரம்ப பாடசாலை மாணவர்கள் ஆயிரம் பேரை கொண்டுள்ள எமது பாடசாலையின் தொடர்புகளுக்கு பெற்றோரை அணுகுவது எமக்கு கடினமாக உள்ளது. மாணவரிடம் கூறி அனுப்பினாலும் அது உரிய முறையில் அவர்களை சென்று அடைவது இல்லை. இதனால் பாடசாலையோடு அவர்கள் தொடர்பு கொள்வது குறைவாகவே உள்ளது. வகுப்பறைக் கூட்டத்திற்கும் பெற்றோரின் வருகை மிகவும் குறைவாகவே உள்ளது. இதனாலேயே இப்பிரச்சினைக்கு ஒரு தீர்வினை முன்வைக்கிறேன். எல்லா பெற்றோரும் கையடக்கத் தொலைபேசி பாவிக்கின்றனர். அதனால் அந்த தொலைபேசியையே நாம் தொடர்பு சாதனமாக பயன்படுத்த வேண்டும். பெற்றோரின் தொலைபேசி இலக்கமானது பாடசாலை வலைப்பின்னலில் பதிவு செய்யப்பட வேண்டும். அதன்முலம் அவர்களுக்கு உரிய செய்திகள் சென்றடையும். இதன்முலம் இரண்டு நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். இந்நவீன தொழில் நுட்பம் மாணவருக்கும் பெற்றோருக்கும் இடையில் தெளிவுபடுத்தப்படுகிறது. அதே போன்று பாடசாலை மீது கொண்டுள்ள நம்பிக்கை வலுப்படுத்தப்படுகிறது. இது வரைக்கும் நாம் எமது பாடசாலையின் வலைப்பின்னல் தொடர்பினை பெற்றோரின் உதவியோடு நவீனமயப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அதிபரால் விதந்துரைக்கப்பட்ட இந்த வேண்டுகோளுக்கு செவிமடுத்து பெற்றோரின் தொலைபேசி இலக்கங்கள் (Website) பதிவு செய்யப்பட்டது. துண்டுப்பிரசுரங்களின் மூலம் பெற்றோர்களை அறிவுறுத்தி இலவசமாக பெற்றுக் கொள்ளும் குறுஞ் செய்தி தொடர்புகள் மூலம் தொடர்பினை ஏற்படுத்த வழி செய்யப்பட்டது. இது பாடசாலைக்கு பெரும் புரட்சியாக இருந்தது. பாடசாலை முலம் பரிமாற்றப்படும் செய்திகள் வெகு விரைவில் பெற்றோருக்கு குறுஞ் செய்திகள் மூலம் அனுப்புவது சாதாரண-விடயமாகிவிட்டது. ஊடாக இணையத்துக்கு நுழையும் அதிபர் அனுப்புவதற்கு தேவையான செய்திகளை இலகுபடுத்தி வலைத்தளத்தில் பதிவு செய்யப்பட்ட தொலைபேசி இலக்கத்திற்கு ஒரே தடவையில் அனுப்புவதற்கான முயற்சிகளை செய்தார்.

இந்த பொறுப்பு ஒரு சில ஆசிரியர்களிடம் ஒப்படைக்கப்பட்டு இருந்தது. பாடசாலைகளின் வேண்டுகோளின்படி பெற்றோர் ஒவ்வொரு நாளும் தமது தொலைபேசியை பரீட்சித்து தகவல் ஏதும் உள்ளதா என அறிந்து கொள்வர். தொழில்நுட்ப அறிவு அற்ற பெற்றோர் கூட இத்தகவல் அறியும் முறைக்கு தாம் விரும்புவதாக அவர்கள் அதிபரிடம் கலந்துரையாடியதிலிருந்து தெரியவந்தது.




அதிபர் தமது சிந்தனையை மேலும் விரிவுபடுத்துமுகமாக மாணவர்களது மாதாந்த தவணைப் பரீட்சைப் புள்ளிகளை பெற்றாரின் கையடக்கத் தொலைபேசிகளுக்கு அனுப்புவதற்கான உயர்மட்ட தொடர்பாடல் தொகுதி ஆரம்பிக்கப்பட்டு விட்டது. இவற்றை இணையத்தளத்தில் சேர்ப்பதற்கும் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தற்போது தகவல் தொழில் நுட்பத்தினை உயர்மட்டத்தில் செயன்முறையாக பயன்படுத்தும் பாடசாலையாக மாறியுள்ளது. ஒவ்வொரு வார இறுதியிலும் விடுமுறை காலத்துக்குரிய ஒப்படைகள் அனுப்பவும் செய்திகளை அறிவிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுளளது. மேலும் மாணவர்களின் கையடக்கத் தொலைபேசிகளுக்கு S.M.S. மூலம் வினாக்களை வழங்கி விடைகளைப் பெறும் வினா விடைப் போட்டிகளும் நடைபெறுகிறது அது மட்டுமன்றி பிறந்த நாள் வாழ்த்துக்கள் அனுப்பவும் பெற்றோரின் ஆலோசனைகளைப் பெறவும் வழி செய்யப்பட்டுள்ளது. இதனால் மாணவர்களும் அவர்களது பெற்றோர்களும் தகவல் தொழில் நுட்பத்தோடு ஒன்றிணைந்து நவீன தொடர்பாடல் கலாசாரத்தைக் கட்டியெழுப்பக் கூடியதாக உள்ளது.

இந்த வலைப்பின்னல் அதிபர் மேற்பார்வை செய்வதுடன் பயிற்சியளிக்கப்பட்ட மாணவர் குழு மூலம் தொகுதியை தற்காலப்படுத்தி அருகிலுள்ள பாடசாலைகளுக்கும் இம்முறையினை அறிமுகப்படுத்தவதும் பாடசாலை வளாகத்தினுள் சுதந்திர வை பை (Wi Fi) வலயமொன்றினை உருவாக்குவதும் சகல வகுப்பறைகளுக்கும் இணையத்தள வசதிகளுடனான கணணிகளைப் பெற்றுக் கொடுப்பதுமான இலக்குகளைக் கொண்ட வேலைத்திட்டமாக இதனைக் குறிப்பிட முடியும்.

(எண்ணக்கரு - அம்பலாங்கொட கல்விவலய கா/தலாகஸ்தெனிய ஜயந்தி வித்தியாலயம்)

# 29. வேடிக்கையாக கணிதத்தைக் கற்போம்

தரம் 6-11 வகுப்புக்களில் கணிதம் கற்பிக்கும் ஆசிரியர்களின் தரவட்டம் வழக்கம் போல மாதத்தின் இறுதி வெள்ளிக்கிழமை கூடியது. பாடசாலையில் சாதாரண தர கணிதப் பெறுபேறுகள் குறைவடைந்து காணப்படுவதனால் சித்தியடையும் வீதமும் குறை-வடைந்தே காணப்படுகிறது என்பது தொடர்பாக கலந்துரையாடுவதே அன்றைய தரவட்டத்தின் பிரதான தலைப்பாகும்.

தரவட்டத்தை ஏற்பாடு செய்த திருமதி கல்யாணி ஆசிரியர் பின்வருமாறு கலந்துரையாடலை ஆரம்பித்தார்.

பல வருடங்களாக நாம் கணித பெறுபேறுகளை அதிகரிப்பது தொடர்பாக பல்வேறு பெறுபேற்று விருத்திச் செயற்திட்டங்களை பாடசாலையில் மேற்கொண்டபோதும், கணிதபாடப் பெறுபேறுகளில் எதிர்பார்த்த தரத்தை அடைவதற்கு இன்று வரை முடியாமல் போயிற்று. கணித ஆசிரியர் என்ற வகையில் எமது சாதரண தர பெறுபேறுகளை அதிகரித்துக் கொள்வதற்கு விசேட வேலைத்திட்டம் ஒன்று செயற்படுத்தினால் நல்லது. இங்கே நாம் ஆலோசித்து பொருத்தமான வேலைத்திட்டமொன்றை திட்டமிட்டுக் கொள்வதே இன்றைய பிரதான நோக்கமாகும் என சுமதி ஆசிரியர் கூறினார்.

உண்மையிலேயே பரீட்சைப் பெறுபெறுகள் குறைவடைவதற்கு மாணவர்கள் கணிதபாடத்தை விரும்பாமையும் ஒரு காரணமாகும். எனவே முடியுமானால் மாணவர்கள் விரும்பும் ஊடகத்தைப் பயன்படுத்தி கணிதப்பாடத்தை படிப்பதனூடாக கணித அடைவுமட்டத்தை அதிகரித்துக்கொள்ளமுடியும் என நிர்மலா ஆசிரியர் கூறினார்.

கணினி விளையாட்டு மூலம் கணித எண்ணக்கருவை கற்பிக்க எங்களால் முடியுமல்லவா? அவ்வாறே செயற்பாடுகளை பயன்படுத்தி புள்ளிகள் வழங்கி மதிப்பீடு செய்யவும் முடியுமான வகையில் வேலைத்திட்டமொன்றை தயாரித்தல் நன்று இல்லையா? தர்சினி ஆசிரியர் ஆலோசனை கூறினார்.

உண்மையிலேயே அது நல்ல யோசனை. நாம் முதலில் கணித பாடப் பெறுபேறுகளை உயர்த்துவதற்கு இச் செயன்முறையை நடைமுறைப்படுத்த வேண்டும். அது வெற்றி பெற்றால் ஏனைய பாடங்களுக்கும் இதனை அறிமுகம் செய்வோம்.

அதன் அடிப்படையில் பாடசாலையின் தகவல் தொழிநுட்ப ஆசிரியர்களின் உதவியுடன் கணித தரவட்டத்தினுடாக மாணவர்களுக்கான ஆரம்ப கணித எண்ணக்கருவை உறுதிசெய்வதற்கும் பொருத்தமான விளையாட்டு முறை உருவாக்கப்பட்டது.

இம்முறையை முதலாம் தவணையிலிருந்து பாடசாலையில் நடைமுறைப்படுத்திய போது மாணவர்கள் கணித பாடம் தொடர்பாக காட்டிய ஆர்வம் அதிகரித்துக் காணப்பட்டதுடன் தவணைப் பரீட்சை பெறுபேறுகளைப் போன்றே சா/தர பெறுபேறுகளிலும் தெளிவான ஒரு முன்னேற்றம் காணப்பட்டது.

சாரதண தர பெறுபெறுகள் வந்தபின் பாட சம்பந்தமாக பகுப்பாய்வு செய்வதற்காக அதிபர் மூலம் ஆசிரியர் கூட்டமொன்று கூட்டப்பட்டது. அக்கூட்டத்தின் போது அவர் அது பற்றி பின்வருமாறு கூறினார்.

எங்களது கணித பெறுபேறுகளை அபிவிருத்தி செய்வது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கணினி விளையாட்டினூடாக அறிமுக வேலைத்திட்டம் இப்போது வெற்றிகரமான பலனைத் தந்துள்ளது. அதனால் எங்களது பெறுபேறுகள் வளர்ச்சி அடைந்துள்ளதைப் போன்றே புதிய தொழில்நுட்ப பாவனையிலும் அதிகக் கவனம் செலுத்துவதைக் காணமுடிகிறது.

ஏனைய பாடங்களுக்கும் இம்முறையை அறிமுகம் செய்தால் நல்லது என நான் விரும்புகிறேன். அது போன்றே இவ்வெண்ணக்கருவை எங்கள் பாடசாலையில் அறிமுகப்படுத்திய கணித பாடப் பொறுப்பாசிரியருக்கு எனது நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன் என்று கூறி அதிபர் தமது உரையை நிறைவு செய்தார்.



(எண்ணக்கரு - தெநுவர கல்வி வலய தீரானந்த வித்தியாலயம்)

## 30. சிறுதுளி……!!

பத்துமாதம் சுமந்து, அன்புடன் அரவணைத்து
வளர்த்தெடுத்த பெற்றார் - இல்லா துயரை
அனுபவித்து நீராற்றும் சேவைக்கு
பக்தியுடன் கொடை கொடுக்க பெற்றிடுவோம் வழியதனை

கண்கொள்ளா மலைச்சரிவில் உள்ளதொரு பழம்பள்ளி
நன்னடத்தை குறைந்ததனால் கல்வியும் வீழ்ந்ததுவே
அதிபருடன் ஆசான்களும் பெற்றோரும் பிள்ளைகளும்
இணையாமல் வெறுப்புடனே பிரிந்தனரே குழுக் குழுவாய்

கலையகத்தை இருட்டடித்த சவால்களை வெற்றிகொள்ள
புதுத் திட்டம் அமைத்திடவே பிறந்ததுவே வழியதுவே
பிள்ளைகளாம் தாம் இணைந்து தயாரித்த தானம் அதுவே
பெற்றோர்கள் அனுபவிக்க பகிர்ந்தனரே பரிவுடனே

எல்லோரின் உள்ளத்திலும் நட்புறவு பதிவுபெற
இவ்வரிய நடைமுறைதான் வழங்கியதே வழியதனை
பொறுப்புக்கள் நிலைபெற்று உறவுகளும் உறுதியுற்று
பள்ளிக்கூட வளாகத்தில் குணப்பண்பும் மிளிர்ந்தனவே

பிள்ளைக்கு ஒன்று என கையளித்த உண்டியலில்
நாளுக்கு ஒரு ருபாய் என்று இங்கு சேர்ந்தனவே
அப்பணத்தை பயன்படுத்தி வரும் ஒவ்வொரு வருடத்திலும்
பெற்றோருக்கே தானம் ஒன்று கொடுத்திடவே முனைந்திட்டார்

ஒழுக்கமது கவர்ந்திடவும் பள்ளியது மிளிர்ந்ததுவே
கலையகத்தின் கலை வளமும் தற்போது செழித்ததுவே



(எண்ணக்கரு – கம்பளைக் கல்வி வலய கம்/பன்விலதென்ன மகாவித்தியாலயம்)

# 31. ஆசிரியரின் விம்பம்

மலர் பாடசாலைக்கு புதிதாக நியமனம் பெற்றுவந்த ஒரு பட்டதாரி ஆசிரியராவார். தமது முதல் நியமனம் பெற்ற பாடசாலை தொடர்பாக அவரிடம் ஒரு திருப்தியற்ற மனோ நிலை காணப்பட்டது, ஏனெனில் பட்டதாரி ஆசிரிய தெரிவுக்காக மாகாணத்தில் இடம்பெற்ற போட்டிப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர் என்றவகையில் தமது சொந்தப் பிரதேசப் பாடசாலைக்கு நியமனம் கிடைக்குமென எதிர்பார்த்திருந்த போதிலும் அவருக்கு ஊரிலிருந்து 60 கி.மி தொலைவிலுள்ள ஆரம்பப் பாடசாலைக்கே நியமனம் கிடைத்தது. வணிகப் பட்டதாரியான மலருக்கு ஒரு ஆரம்பப் பிரிவுப் பாட-சாலைக்குக் கற்பிக்கச் செல்லவேண்டியிருந்த கஸ்டமான மனோநிலையிருந்து விடுபடுவது கடினமாக இருந்தது. எவ்வாறாயினும் அந்த வெறுப்புடனே தமது ஆசிரிய சேவையின் முதல்நாள் பாடசாலைக்குள் நுழைந்தார்.

நேரம் மு.ப. 7.30 ஐத் தாண்டிக் கொண்டிருந்தது. பாடசாலைக்கு முன்னால் காணப்பட்ட நெரிசலுக்கூடாக மலர் பாடசாலையினுள் நுழையும்போது மாணவர்கள் காலை ஆராதனைக்காக விளையாட்டு மைதானத்தில் கூடியிருந்தனர். விளையாட்டு மைதானத்திற்கு அண்மையிலிருந்த கட்டடித்தின் நீண்ட வெளியில் தனிவரிசையாக நின்ற மாணவர்களுடன் ஆசிரியர்களும் காலை ஆராதனையிலீடுபட்டமை சிறந்த ஒரு ஒழுக்கமாக காணக்கூடியதாக இருந்தது. காலை ஆராதனையின் பின்னர் மாணவர்களின் நிகழ்ச்சிகள், அதிபரின் சிற்றுரை என்பன முடிவடைந்ததும் மாணவர்களை வரிசையாக வகுப்புகளுக்கு அனுப்புவதில் ஆசிரியர்களும், மாணவ தலைவர்களும் ஈடுபட்டிருந்தனர்.

பாடசாலை வளாகம் முழுவதும் சாடிகளில் செழிப்பாக வளர்ந்திருந்த பூச்செடிகள் பல்வேறு வர்ணங்களில் அழகாக காட்சியளித்தன. வகுப்பறைகளுக்குள் நுழையும் மாணவர்கள் விரைவாக தமது நீர்ப் போத்தல்களிலிருந்த நீரை தத்தமது வகுப்புகளுக்கு முன்னாலிருந்த பூஞ்செடிகளுக்கு பாய்ச்சினர். அதிபரின் காரியாலயத்திற்கு எவ்வாறு செல்லலாம் என ஒரு ஆசிரியரிடம் வினவியபோது அவர் அன்பாகப் பேசி புதிய ஆசிரியைக்குக் காரியாலயத்தைக் காண்பிக்குமாறு மாணவ தலைவர் ஒருவரை வேண்டினார். மாணவ தலைவரும் மிக மரியாதையுடன் அவரை காரியாலயத்திற்கு அழைத்துச் சென்றார்.

அம் மாணவரிடம் ஒரு விசேடமான நட்பு ரீதியான நடத்தையை மலர் உணர்ந்தார். காரியாலயத்தினுள் நுழையும் போதே அனைத்து ஆசிரிய ஆசிரியைகளிடமும் புன்முறுவலுடனான அன்னியோன்யமான நடத்தையைக் காணமுடிந்தது. ஆசிரியரினதும் மாணவரினதும் இந்நடத்தை வேறு பாடசாலைகளை விடவும் வித்தியாசமானதென மலரால் உணர முடிந்தது. என்றாலும் அவரினுள் காணப்பட்ட வேதனை மற்றும், கோபம் காரணமாக அது பாடசாலை வளவினுள் செயற்கையாக ஏற்படுத்திக்கொண்ட ஒன்றாகவே மலர் எண்ணினாள்.

அதிபர் மற்றும் ஆசிரியர் குழாத்திடமிருந்து ஒரு மகத்தான வரவேற்பு கிடைத்தது. அனைத்து ஆசிரியர்களும் நட்புடன் உறவாடினர். ஆசிரியர் தொடர்பாக மலர் இதற்கு முன்னர் அறிந்தும் கேட்டுமிருந்த தகவல்களின் அடிப்படையில் இவ்வாறான ஒரு சிறப்பான நிலையை எதிர்பார்த்திருக்கவில்லை. பல்வேறு செய்தித்தாள்கள் மற்றும் ஊடகங்கள் மூலமாக ஆசிரியர்கள் மற்றும் பாடசாலைக் கல்வி தொடர்பாக பரப்பப்படும் தகவல்கள் இதைவிடவும் எந்தளவு மோசமானது என மலருக்குத் தோன்றியது. இந்த விசேட நடத்தைக்கான காரணம் யாது என மலரால் புரிந்துகொள்ள முடியவில்லை.

அதிபர் மலருடன் மேற்கொண்ட சிறு கலந்துரையாடலின் பின்னர் அவருக்கு பாடசாலையின் நாளாந்த வரவு இடாப்பில் கையொப்பமிட அறிவுறுத்தல் வழங்கினார். ஆசிரியர் வரவு இடாப்பு ஒரு உயர்ந்த விசேட மேசையின் மீது வைக்கப்பட்டிருந்தது. அதன் வலப்பக்கமாக பத்திரிகையிலிருந்து வெட்டியெடுக்கப்பட்ட ஒரு செய்தி புகைப்படச் சட்டகத்தினுள் பொருத்தப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

"**ஆசிரியரின் சமயோசித முயற்சி காரணமாக முரண்பாடு முடிவுக்கு வந்தது**" என்று கொட்டை எழுத்துக்களால் பிரசுரமாகியிருந்த செய்தியின் பக்கம் மலரின் கண்கள் முழுமையாகத் திரும்பியது. ஒரு ஊரில் இரு பிரிவினருக்கிடையில் இடம்பெறவிருந்த பாரிய சண்டை ஒரு ஆசிரியையின் சமயோசிதமான செயற்பாடு காரணமாக தடுக்கப்பட்டது என்று அங்கு குறிப்பிடப்பட்டிருந்தது. மலரின் உள்ளத்தினுள் சுயமாக கற்பனையொன்று தோன்றியது. இவ்வாறான செய்திகள் பிரசுரமாவது அபூர்வமெனினும் இச்செய்தி ஆசிரிய சேவைக்கு ஒரு பெறுமானத்தைச் சேர்க்கின்றது என்பதை மலர் புரிந்துகொண்டாள். இது மலரின் உள்ளத்திலிருந்த அதிருப்தியை சிறிதளவு அகற்றியது.



ஆசிரிய வரவுப் பதிவுப் புத்தகத்தில் கையொப்பமிட்டு நிமிர்ந்தவுடன் அவள் கண்ட அந்தக் காட்சி ஒருமுறை தன் உடலினூடாக மின்சாரம் பாய்வது போன்ற ஓர் உணர்வை அவளினுள் ஏற்படுத்தியது. எதிர்பாராத ஒரு சந்தர்ப்பத்தில் தனது முகத்தைத் தாமே காணும்போது ஏற்படும் உணர்வு அவளுக்கு ஏற்பட்டது. ஆசிரியர் வரவுப் புத்தகத்திற்கு எதிரே அதற்கு நேராக சுவரில் பொருத்தப்பட்டிருந்த கண்ணாடியில் தனது முகத்தைக் காணுகையில் மலரின் தோற்றத்தில் அச்சந்தர்ப்பத்தில் தன்னுடைய மனோநிலையை அது தெளிவாகக் காட்டுகின்றது என்பதைத் தீர்மானித்துக் கொள்வது சிரமமாக இருக்கவில்லை. இவ்வாறான ஒரு கண்ணாடி ஆசிரியர் வரவுப்பதிவுப் புத்தகத்திற்கு மேலாக பொருத்தப்பட்டிருப்பது ஒரு நோக்கத்தோடு தான் என்பது அவளுக்கு புரிந்தது.

தான் நினைத்ததைவிடவும் ஒரு எதிர்மாறான ஒரு மனோநிலையை பாடசாலையின் முதல் நாளிலேயே மலர் உணர்ந்தாள். இரண்டாம் நாள் முதல் நாளில் அவளிடமிருந்த மனோநிலையிலிருந்து சற்று மாறுபட்ட மனோநிலையுடன் அவள் பாடசாலைக்கு வந்தாள். வந்ததும் அவள் கையொப்பமிட முன்னர் எதிரே இருந்த கண்ணாடியிலும், சட்டகச்செய்தியிலும் அவளது பார்வை சுயமாக சென்று திரும்பியது.

முன்னைய நாள் சட்டகத்தினுள் காணப்பட்ட செய்திக்குப் பதிலாக சஞ்சிகையிலிருந்து எடுக்கப்பட்ட கடிதம் ஒன்று அதில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. தனது பதினைந்து வயதில் விபத்துக்குள்ளாகி பெற்றோரை இழந்த உடல் ஊனமுற்ற குழந்தையொன்றை தத்தெடுத்து வளர்த்து கல்வியை முறையாக வழங்கி அவரை ஒரு சட்டத்தரணியாக ஆக்குவதற்கு அர்ப்பணிப்போடு செயற்பட்ட ஆசிரியத் தாயொருவர் பற்றிய வெளிநாட்டுச் செய்தியொன்று அதில் காணப்பட்டது. அதனை வாசித்தபொழுது மலருக்கும் தானொரு ‘ உன்னதமான சேவையிலிருக்கின்றேன்’ என்ற மனப்பாங்கு ஏற்பட்டது.

வரவுப் புத்தகத்தில் கையொப்பமிட்டுச் செல்கின்ற ஆசிரியர்களின் பக்கம் மலர் நோக்கியபோது, அவர்கள் கட்டாயமாக கண்ணாடியைப் பார்த்து தமது முகத்தில் புன்முறுவலை வரவழைத்துச் செல்வதைக் கண்டாள். சில ஆசிரியர்கள் கண்ணாடியைப் பார்த்து தமது முகங்களில் வடியும் வியர்வையை துடைத்து, கலைந்திருக்கும் தலைமுடியினை சீர்செய்து செல்வதனையும் காணக்கூடியதாக இருந்தது. வரவுப் புத்தகத்தில் கையொப்பமிட்ட மலரும் வேண்டுமென்றே கண்ணாடியைப் பார்த்து தனக்கு காணமுடியாத தனது முகத்தின் சுபாவத்தினை சரியாகப் பார்த்து தன்னைப்பற்றி சுய பரிசீலனை செய்துகொண்டாள். கண்ணாடியில் காணப்பட்ட தனது முகத்தின் விம்பம் தன்னுள் ஏற்பட்டுள்ள மாற்றத்தினை எடுத்துக்காட்டியது. புன்சிரிப்பொன்றை வரவழைத்துக்கொண்ட மலர் தான் வரும்வரையில் வகுப்பறையில் காத்துக்கொண்டிருக்கும் மாணவர்களை நோக்கி ஆசிரியர் தாயென்ற உணர்வோடு சென்றாள்.

(எண்ணக்கரு - அம்பாறை கல்வி வலய உகண கனிஷ்ட வித்தியாலயம்)

## 32. பாடசாலையில் உருவான மாதிரி மிருகக் காட்சிச் சாலை

பாடசாலையில் காலைக் கூட்டம் ஆரம்பமானது. அதிபர் அன்றையதினம் தனது உரையில் விசேட தகவலொன்றைக் கூறினார். அவ்வுரையில்

“நாங்கள் பாடசாலையில் மாதிரி மிருகக் காட்சி சாலை ஒன்று அமைப்போம். நீங்கள் வீசும் உக்காத மூலப் பொருட்கள் மற்றும் உக்கும் கழிவுப் பொருட்களை வேறு வேறாக சாடிகளுக்குள் போட்டு உரிய இடத்தில் வைத்திருப்பதை ஏற்கனவே அறிவீர்கள். அந்தக் கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி ‘ஒரிகம்’ எனும் கலை ஆக்கத்தைப் பயன்படுத்தி சிறிய மாதிரி மிருகக் காட்சிச்சாலையொன்று அமைக்க முயற்சி செய்வோம். இன்றிலிருந்து உங்கள் வீட்டில் சேரும் உக்காத கழிவுப் பொருட்களைப் பாடசாலைக்குக் கொண்டுவாருங்கள். அவற்றைச் சேகரிப்பதற்கு நான் ஓரிடத்தைத் தயார் செய்து வைக்கிறேன். பாடசாலை மாணவத் தலைவர்கள் வெள்ளிக் கிழமை உங்கள் வகுப்பறைக்கு வருவார்கள். நீங்கள் கொண்டுவரும் உக்காத பொருளுள்ள பைகளை அவர்களிடம் ஒப்படையுங்கள். இன்னும் சிறிது காலத்தில் உங்கள் பாடசாலையில் ஒரு அழகான மாதிரி மிருகக்காட்சிச்சாலையொன்றைக் காணக்கூடியதாக இருக்கும்.”

அது தொடர்பாக உங்கள் ஒத்துழைப்பையும் உதவியையும் நான் எதிர்ப்பார்க்கிறேன்.

மாணவர்களிடத்தில் மகிழ்ச்சியைத் தட்டியெழுப்பி, அதிபர் தன் உரையை நிறைவு செய்தார். அன்றைய தினமே மாணவ தலைவர்களுடனும் ஆசிரியர்களுடனும் கலந்துரையாடலொன்று நடைபெற்றது. அப்போது அதிபர் மாதிரி மிருகக் காட்சிச்சாலை உருவாக்கும் செயற்பாடு பற்றி விளக்கமளித்தார்.

- பொலித்தீன், யோகட் கோப்பைகள் மற்றும் சாடிகளைச் சேகரித்தல்
- அவற்றை மிருகங்களின் மாதிரி உருவங்களுக்குள் சேமித்து வைத்தல்
- தெரிவு செய்த மாணவர் குழுவுடன் இணைந்து கடதாசி, பசை என்பவற்றை உபயோகித்து மாதிரி உருவம் மூடப்படும் வகையில் வெளிப்பகுதியில் ஒட்டுப்பசையைப் பூசுதல்
- அதனைக் காய வைத்து தேவையானவாறு உருவமைத்து நிறந் தீட்டுதல்
- அம் மிருக மாதிரிக்கு அருகில் தயாரிக்கப்பட்ட அட்டையை வைத்தல்

இவ்வேலையே அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டது. இதற்கான திட்டமொன்று தயாரி-யுங்கள். ஒவ்வொரு ஆசிரியரும் அவரவர் திறமையினடிப்படையில் அவ்வச் செயற்பாடுகளைப் பொறுப்பேற்றுக் கொள்ளுங்கள். மாணவர்களுக்காகச் செய்யும் இந்த நற்காரியத்தில் ஈடுபாடு காட்டுங்கள். இது உங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் வேலையாகும். இது தொடர்பாக அனைத்து மாணவர்களுக்கும் வழிகாட்டுங்கள்.

எல்லா ஆசிரியர்களும் தத்தமது வகுப்பறைப் பொறுப்புக்களுடன் ஒவ்வொரு வகுப்பறையைப் பொறுப்பேற்றுக் கொண்டனர். பாடசாலை நடைபெறும் வேலையிலும் மாலை நேரங்களிலும் வகுப்பறையில் மாணவர்கள் மிகவும் ஈடுபாட்டுடன், இரு வாரங்களுக்குள் மிக அழகான ஒரு படைப்பாக்கத்தை நிர்மாணித்தார்கள். சுற்றாடற் கல்வி ஆசிரியர்களின் உதவியும் குறைவின்றிக் கிடைத்தது.

பாடசாலையிலுள்ள சகல மாணவர்களும் மிகவும் மகிழ்ச்சியுடனும் ஆர்வத்துடனும் இந் நற்செயற்பாட்டில் ஈடுபட்டிருந்ததைக் காண முடிந்தது.

தத்தமது ஆக்கத்திறனுக்கு அமைவாக மாதிரி மிருகங்களுக்குப் பொருத்தமாக வேறு ஆக்கங்களும் நிர்மாணிக்கப்பட்டன. அதனூடாக சூழல் மேலும் அழகாகக் காட்சியளித்தது. மிகவும் வெற்றிகரமான, ஆக்கபூர்வமான பாடசாலைச் சூழல் அமைக்கப்பட்ட அதே வேளை பிள்ளைகள் கவிதை, பொன்மொழிகள், ஆக்கபூர்வான தகவல்கள் போன்றவற்றை அவ்வவ் மாதிரிகளுக்கு அருகில் வைக்கவும் முனைந்தனர். அறிவு, திறன், மனப்பாங்கு போன்ற கல்வியின் நோக்கங்களை நிறைவு செய்து கொண்ட பாடசாலையின் உன்னத நிகழ்ச்சிகளில் அதி உன்னத செயற்பாடாக இது பாராட்டப்பட்டதாயிற்று.


செயற்பாட்டினூடாக பெற்றுக் கொண்ட பிரதி பலன்கள்

- ஆசிரியர் மாணவர், பெற்றோர் மற்றும் ஊரார்களுக்கிடையில் பாடசாலை தொடர்பான மதிப்பும் நேசமும் உண்டாகியமை
- ஆசிரியர் மாணவர்களுக்கிடையிலான படைப்பாக்கச் சிந்தனையும் திறனும் அபிவிருத்தி அடைதல்
- பாடசாலை மற்றும் சுற்றுச்சூழல் கழிவுப் பொருட்களின் தொல்லையிலிருந்து விடுபடல்
- கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தும் முறைபற்றி தெளிவு பெறல்
- ஓய்வு நேரத்தைப் பயனுள்ள முறையில் கழித்தல்
- நேயமுள்ள பாடசாலைச் சூழல் மூலம் அனைவருக்கும் மனத்திருப்தி ஏற்படுதல்
- சூழலுக்கு அன்பு செலுத்தும் மாணவர் சமுதாயமொன்றை உருவாக்கல்

(எண்ணக்கரு - மொனராகல கல்வி வலய சரஸ்வதி தமிழ் கனிஷ்ட வித்தியாலயம்)

# 33. எங்கள் பாடசாலை வரைபடம்

இலங்கை முழுவதும் காணப்படும் பாடசாலைகளில் பயன்பாட்டிலுள்ள சிறந்த நடைமுறை பிரவேசிப்புக்களைத் தேடிச் செல்கையில் அபூர்வ பாடசாலை ஒன்றை சந்தித்தோம். அங்கு சமாந்தர வகுப்புகளைக் கொண்ட மண்டபங்களும், சகல வகுப்பறைகளும் ஒரு விசேடமான ஒழுங்கு முறையில் பெயரிடப்பட்டிருந்தன. அதனை விளக்குவதை விட அந்தப் பாடசாலை வரைபடத்தைப் பார்த்தே அதனை நாம் அறிந்து கொள்ள முயற்சிப்போம். (எண்ணக்கரு- ஹிங்குரக்கொட வலயம் பொ/ பக்கமூன ஆரம்பப் பாடசாலை)



# 34. ஹெலபட பாரம்பரியத் தேசிய நெல்லினத்தை அறிமுகப்படுத்தும் செயற்றிட்டம்

மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில் தெனுவர கல்வி வலயத்திற்குற்பட்ட கன்னொருவ வித்தியாலயம் தரம் 1 - 11 வரையிலான வகுப்புக்களைக் கொண்டதாகும். இங்கு 300 மாணவர்கள் கல்வி கற்பதோடு 25 ஆசிரிய ஆசிரியைகள் கல்வி கற்பிக்கின்றனர்.

ஹெலபட பாரம்பரிய தேசிய நெல்லினத்தை அறிமுகப்படுத்தும் இச் செயற்திட்டமானது வித்தியாலயத்தில் இருக்கும் சூரிய சக்தியின் மூலம் பெற்றுக் கொள்ளும் குழாய்க் கிணற்று நீர் விரயமாக்கப்படுவதைத் தவிர்ப்பதாகும். மேலும் பாட-சாலையில் வீண் விரயமாக்கப்படும் கழிவுப் பொருட்களைக் கொண்டு உச்ச கட்ட பயனைப் பெற்றுக் கொள்வதற்கு பாடசாலையினுள் விவசாயக் கேந்திர மையம் ஒன்றினை நிர்மாணிப்பதற்கு முயற்சி எடுக்கப்படுகிறது. அதைப்போலவே இலங்கை மக்களின் பாவனையிலிருந்து நீக்கப்பட்டுள்ள தேசிய நெல் வகைகளை பாதுகாப்பதற்கும் அதன் பாரம்பரிய பயிர்செய்கை முறையினை மாணவ சமுதாயத்திற்கு எடுத்துக் கூறுவதும் இச்செயற்றிட்டத்தின் நோக்கமாகும்.

பாடசாலையில் இவ் விளைச்சலுக்கு பொருத்தமான இடமொன்றை அமைத்ததோடு அருகிலிருக்கும் விவசாயத் திணைக்கள அதிகாரிகளின் உதவிகளைப் பெற்றுக் கொண்டு இச்செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. அதிபரின் பரந்த மேற்பார்வையின் கீழ் ஆசிரிய மாணவ ஒன்றிணைப்பு மூலம் இச்செயற்திட்டம் செயற்படுத்தப்படுவதோடு, பதில் கடமை கால அட்டவணை, மாலை நேர வேலைகளிலும் இந்த செயற்பாடுகளுக்கு தேவையான பங்களிப்பினை செய்து கொள்ள முடியும்.

இந்த செயற்திட்டத்தை பாடசாலையினுள் செயற்படுத்துவதன் மூலம் பெற்றுக் கொள்ளக் கூடிய அனுகூலங்கள்

- பாடசாலையில் வீணாக்கப்படும் நீரைக் கொண்டு வினைத்திறன்மிக்க செயற்பாடாக மாற்றிக் கொள்ளமுடிந்தமை.
- பாடசாலை பூமியில் உச்ச பயனை பெறுதல்.
- பயிர்செய்கை பற்றி மாணவர்கள் விழிப்புணர்வு பெறுவர்
- மனப்பாங்கு விருத்தியடைதல்
- பாரம்பரிய நெல் விளைச்சல் பற்றி தற்கால மாணவர் சமூகத்திற்கு தெளிவுபடுத்தல்.
- பாடசாலை சூழல் அழகுபடுத்தப்படுகிறது.
- பாடசாலையில் உணவுத் திட்டத்திற்கான மூலப்பொருளை பாடசாலை வளாகத்திலேயே பெற்றுக் கொள்ளல்.
- பாரம்பரிய சம்பிரதாயபூர்வமான வேலைத்திட்டத்துடன் கூடிய கலாச்சாரம் பற்றிய அறிவினைப் பெற்றுக் கொள்ளல்.

கீழ்வரும் மாதிரி நெல்லினங்கள் பயிர்செய்யப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

கறுப்பு சீனெட்டி
வெள்ளை சீனெட்டி
கோனபெரு (பச்சைப் பெருமாள்)
மாவீதா (பெருநெல்)
மடத்தவாளு
சுவதெல்
றம்புட்டான்
தட்டுவீ
சீரகச் சம்பா
கஹவனு



இவ் வேலைத்திட்டமானது விவசாயத்துடன் கூடிய சூழல் ஒன்றை ஏற்படுத்தும் நோக்கத்தை கொண்டதாகும். இதன் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் அறிவானது இலங்கையின் விவசாய தொழில்நுட்ப அறிவினைக் கொண்டு விளங்கும் மனப்பாங்குடைய சந்ததி ஒன்றை உருவாக்க வழிவகுத்து உள்ளது.

(எண்ணக்கரு - கண்டி/தெ/கன்னொருவ வித்தியாலயம் - பேராதெனிய)

# 35. பழையன கழிதலும் புதியன புகுதலும்

இலங்கையின் பாடசாலைத் தொகுதியில் பலவகையான பாடசாலைகள் காணப்படுகின்றன. இவற்றுள் பிரபலமான பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் தாமாக முன்வந்து உதவி ஒத்தாசைகளை வழங்கும்போது சாதாராண பிரசித்தமில்லாத பாடசாலைகள் தத்தமது பலத்திற்கும் வசதிக்கும் ஏற்ப பாடசாலைக்குத் தேவையான வசதிகளைச் செய்துகொள்கின்றன. இவ்வாறு பிரசித்தமற்ற மொனராகல கல்விவலயத்தில் நகரத்திற்கு வெளியே அமைந்துள்ள ஒரு பாடசாலை எழுச்சிபெற செய்யும் ஆக்கபூர்மான முயற்சிகள் பற்றி அறியக்கிடைத்தது. அம்முயற்சிகளின் எழுத்துமூலமான சாட்சியே இது.

அதிபர்,

மொ/ஹொரம்புவ வித்தியாலயம்,

ஹொரம்புவ.

2016. 05. 13

முகாமையாளர்,

மக்கள் வங்கி,

மொனராகல.

<u>**வங்கியிலிருந்து அகற்றப்படும் கழிவுப்பொருட்களை பெற்றுக் கொள்வது சம்பந்தமாக**</u>

மேற்படி விடயம் தொடர்பாக என்னால் 2016.03.03 அன்று அனுப்பப்பட்ட கடிதத்தில் நான் கேட்ட உதவிகளை வழங்கியமைக்கு எனது நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவிப்பதற்காக இக்கடிதத்தை வரைகின்றேன்.

உங்களது நிறுவனத்திலிருந்து எமது பாடசாலைக்கு வழங்கப்பட்ட பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்ட இரும்பு கடவை (Iron gate) எமது கல்லூரியின் முக்கிய தேவையாக இருந்த இரும்பு நுழைவாயில் கடவைத் தேவையை நிவர்த்தித்துள்ளதை மிகுந்த நன்றியுடன் நினைவு கூறுகிறேன். அது ஒரு பெற்றாரால் இலவசமாகவே திருத்தியமைக்கப்பட்டது, நுழைவாயில் பொருத்தப்பட்டமை பாடசாலைக்கு ஒரு கம்பீரமான தோற்றத்தைத் தந்தது. அது மாணவருக்கும் பெற்றாருக்கும் மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது.

சென்ற ஆண்டில் உங்கள் நிறுவனத்தைப் புதுப்பிக்கும்போது எமக்குப் பெற்றுத்தந்த அகற்றப்பட்ட அனைத்து இரும்பு வலைகள் அனைத்தும் தரம் 1. 2, 3 ஆகிய வகுப்பறைகளை மறைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டது. இதனால் அவ்வகுப்புகளில் பொருட்களைப் பாதுகாத்துக் கொள்வது சம்பந்தமாகக் காணப்பட்ட நீண்டகாலப் பிரச்சினைக்குத் தீர்வாக அமைந்தது. இந்த கௌரவமும் உங்கள் நிறுவனத்திற்கே உரித்தாகும்.

உங்கள் நிறுவனத்தைப் போன்றே மொனராகலைப் பிரதேசத்தில் மேலும் பல நிறுவனங்களில் அகற்றப்படும் பொருட்களைப் பாடசாலைப் பௌதீகவள விருத்திக்காகப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தோம். அதற்கான வேண்டுகோள்களையும், அனுமதியையும் முறையாகப் பெற்றுக்கொண்டோம்.

அதன் பெறுபேறாக பிரதேசத்திலுள்ள தனியார் நிதி நிறுவனங்கள், பிரதேச சபை, பிரதேச செயலாளர் காரியாலயம், வலயக் கல்விப் பணிமனை உட்பட ஏனைய பாட-சாலைகளில் இருந்தும் அகற்றப்பட்ட கதிரை, மேசை, அலுமாரி, கோவை அலுமாரி, கம்பு, செங்கல், தகரம் போன்ற பல பொருட்களைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. இப்பொருட்களைப் பயன்படுத்தி ஒரு புதிய செயற்பாட்டு அறையையும் (Activity Room) உம் சென்ற வருடத்தில் உருவாக்க முடிந்தது.

உங்கள் நிறுவனம் உட்பட ஏனைய நிறுவனங்களிடமிருந்தும் எமக்கு வழங்கப்பட்ட பொருட்களை அவை பயன்பாட்டிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட பொருள் என அடையாளம் காண முடியாத அளவுக்குக் கவர்ச்சியாகத் திருத்தியமைக்க பாடசாலைச் சமுதாயத்தின் ஒத்துழைப்புக் கிடைத்தது, இதனால் மாணவருக்கு அதிக வசதிகளை வழங்கவும், கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் தர மேன்பாட்டிற்குமாக அநேக பௌதீக வளங்களைத் தயாரித்துக் கொள்ள பாடசாலையால் முடிந்தது.

மேலும் எமது பாடசாலைத் தோட்டத்தை மிருகங்களிடமிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான ஒரு வேலியை அமைத்தல், ஆரம்பப் பிரிவு கழிவறைகளுக்கான குழாய்நீர் வழங்கல் தொகுதியை தயாரித்தல், காரியாலயத்திற்கு முன்னால் கொடி கம்பத்தை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளதோடு ஆசிரியர் ஓய்வறைக்கு ஒரு பாதுகாப்புப் பெட்டகத்தையும் ஒரு மேசையையும் பெற்றுக் கொள்ளவும் முயற்சி செய்துகொண்டிருக்கிறோம்.

எமது பாடசாலையை தேசத்திற்கு சுமையற்ற ஒரு பாடசாலையாக சுயமாக எழுந்து நிற்க வைக்க எடுக்கும் முயற்சிக்கு நீங்கள் உட்பட உங்கள் நிறுவன உறுப்பினர்கள் அனைவரும் வழங்கிய ஒத்துழைப்புக்களை மீண்டும் மீண்டும் நினைவுகூறுவதோடு உங்கள் நிறுவனம் மேலும் மேலும் முன்னேறி உயர்ச்சிபெற வேண்டும் எனவும் பாட-சலை சார்பாக நான் பிரார்த்திக்கின்றேன்.

அவ்வாறே எதிர்காலத்தில் பாடசாலை மட்டத்தில் உங்கள் நிறுவனத்திற்கு தேவைப்படும் ஏதும் உதவிகள், ஒத்துழைப்புகள் இருப்பின் அதனை எவ்விதக் குறைவுமின்றி நிறைவேற்ற நாம் மிகுந்த விருப்பத்தோடு இருப்பதையும் இத்தால் உங்களுக்கு அறியத்தருகிறோம்.

நன்றி


அதிபர்

# 36. மேலதிகமாக சிந்தித்து பரிசு வெல்லுங்கள்

இந்தப் படங்களை சற்று உன்னிப்பாக கவனியுங்கள். அதிலுள்ள பொருட்கள் பற்றி உங்கள் மனதில் தோன்றும் எண்ணம் தான் யாது? அப்பொருட்கள் சொல்லுகின்ற மறைந்திருக்கும் அர்த்தங்கள் என்ன என்பது உங்களுக்குப் புரிகிறதா? பார்வைக்குத் தென்படுவதைவிட சற்று வித்தியாசமாக சிந்திக்க முடிகிறதா? அதனை எழுத்தில் வடித்துக் காட்டுங்கள்.










**உங்களுக்கு என்ன தோன்றுகிறது?**

கிராமத்தில் தனிமைப்படுத்தப்பட்ட கஷ்டப்பிரதேச பாடசாலையொன்றில் எமக்கு கிடைத்த மிக வேறுபட்ட நடைமுறைப் பிரவேசிப்பை நாம் இப்படி முன்வைக்கின்றோம். மாணவர்களது போன்றே பெற்றோரதும் சிந்தனையை விரிவுபடுத்தும் நோக்கில் இப்பிரவேசிப்பு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இரு வாரங்களுக்கொருமுறை ஏதாவது ஒரு பொருள் பாடசாலையின் ஓரிடத்தில் காட்சிப்படுத்தப்படும். அப்பொருளை நன்றாக அவதானித்து பின்னர் மாணவர்களும் ஆசி-ரியர்களும் தாம் உணர்கின்ற அங்கு மறைந்திருக்கும் அர்த்தமொன்றினைப்பற்றி எழுதி தமது பெயரையும் வகுப்பினையும் குறிப்பிட்டு காரியாலயத்தின் முன் வைக்கப்பட்டுள்ள பெட்டியினுள் இடுவதற்கு அதிபர் மாணவர்களையும் ஆசிரியர்களையும் அறிவுறுத்தியுள்ளார். அவ்வாறு பெட்டியினுள் இடப்பட்டுள்ள எழுத்தாக்கங்களில் மிகச் சிறந்த பொருள்பதிந்த ஆக்கங்களைத் தெரிவு செய்து அவை மூன்று வகையாக வகைப்படுத்தப்படும். அதாவது தரம் 1-5, 6-11 எனும் வகையிலும் ஆசிரியர்களது ஆக்கங்களை ஒரு வகையாகவும் வேறுபடுத்தப்படும். அவ்வகைகளின் கீழ் சிறந்த ஆக்கபூர்வமான பொருள் பதிந்த ஆக்கங்கள் மூன்றினுக்கு பரிசு வழங்கப்படும். தெரிவு செய்யப்பட்ட ஏனைய பொருள்மிக்க ஆக்கங்கள் காட்சிப்பலகையில் காட்சிப்படுத்தப்படும். மிகவும் அசாதாரணமான இலகுவான செயற்பாடெனினும் அதன்மூலம் மாணவர்களுக்கு வளர்ச்சியடையக்கூடிய திறன்கள் பல உள்ளன. சாதாரண வாழ்க்கையில் சிந்திக்க துணியும் எல்லைக்கப்பால் தம் சிந்தனையை கொண்டு செல்ல மாணவர்களை பயிற்றுவிக்க இதனூடாக முடிகிறது. அதேபோன்று தம் மனதில் தோன்றுகின்ற கருத்தை சுருக்கமாக எழுதி வெளிப்படுத்தும் திறனையும் விருத்தி செய்யக்கூடிய சந்தர்ப்பமாக இது அமைகிறது. இன்னும் ஒரு பொருள்பற்றி முன்வைக்கப்பட்டுள்ள கருத்துக்கள் சிலவற்றின் கூட்டான சிந்தனையினை உருவாக்கி அதிலிருந்து வரக்கூடிய கருத்துப் பற்றி விளங்கிக்கொள்வதற்கான ஒரு பயிற்சியினையும் இச் செயற்பாட்டின் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

ஆசிரியர்களுக்கு மாணவர்களது சிந்தனையின் பல்வேறுபட்ட தன்மையினை இதன்மூலம் தெளிவுபடுத்திக்கொள்ளக் கூடியதாக உள்ளது. ஆசிரியர்களுக்கும் ஆக்கத்திறனுடனாக சிந்திப்பதற்கும் இச்செயற்பாடு தூண்டுதலாக இருக்கிறது.

இச்செயற்பாட்டினுள்ளே காட்சிப்படுத்தப்பட்ட கருத்துக்களையும் ஆலோசனைகளையும் போடவேண்டிய வெற்றுப் பெட்டியினை அவதானித்து 9ஆம் தர மாணவியினால் முன்வைக்கப்பட்ட கருத்து இவ்வாறு அமைந்திருந்தது.

"இந்தப் பெட்டியானது உலகென நான் நினைக்கின்றேன். இந்தப் பெட்டிக்குள் போடப்படும் வேறுபட்ட கருத்துக்களை தாங்கியுள்ள காகிதங்களினால் உலகில் வாழும் மனிதர்களின் தோற்றம், வணக்கமுறைகள், நம்பிக்கைகள் மற்றும் உணர்வுகள் என்பன யாவும் வெளிப்படுகின்றன என தோன்றுகிறது."

பாருங்கள் சிந்தியுங்கள் 14 வயதுடைய இச்சிறுமியின் சிந்தனையை முன்னெடுத்துச் செல்வதற்கு இந்த பிரவேசிப்பு எந்தளவு பயன்மிக்கதாக அமைகிறது?

(எண்ணக்கரு – மதுகம கல்வி வலய பதுரலிய இங்குறுதலுவ கனிஷ்ட வித்தியாலயம்)

## 37. போதைப்பொருள் பாவனையிலிருந்து மாணவர்களை விடுவிப்போம்

மாணவன் தனது எதிர்கால வாழ்வை நடாத்திச் செல்வதற்கு சரியான வழிகாட்டலைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். போதைப் பொருளுக்கு அடிமைப்பட்டு தனது எதிர்காலத்தை அழித்துக் கொள்ளப்போகும் மாணவனுக்கு ஆலோசனை வழிகாட்டல் உடனடித் தேவையாகும். தவறிப்போன கல்வியை மீண்டும் பெற்றுக் கொடுப்பது அத்தியவசியமானது. அது மட்டுமன்றி, பாடசலையின் ஏனைய மாணவர்களையும் போதைப்பொருள் பாதிப்பிலிருந்து பாதுகாப்பது அவசியமாகும். இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பாடசாலையால் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்திட்டமொன்று கீழே தரப்படுகின்றது.

பாடசாலையில் பிரகாசித்த ஒரு மாணவனின் நடத்தையில் ஏற்பட்ட மாற்றம் இவ்வாறான ஒரு நடைமுறையை செயற்படுத்துவதற்குக் காரணமாகியது. வகுப்பறையில் கற்றலில் ஈடுபடும் மாணவன் வழமைக்கு மாற்றமான நடத்தையைக் காட்டுவானானால், கற்றலில் அவனின் ஈடுபாடும் அக்கறையும் படிப்படியாக குறைந்து செல்வதை அவனுடன் தொடர்புபடும் ஆசிரியருக்கே தெளிவாக விளங்கிக்கொள்ள முடியும். தரம் 12 வர்த்தகப் பிரிவில் கல்விகற்கும் குமார் க.பொ.த. (சா/த) பரீட்சையில் 9 பாடங்களிலும் A சித்திகளைப் பெற்ற திறமையான மாணவனாவான். ஆனால் உயர்தர வகுப்பிற்கு வந்து ஓரிரு நாட்களில் அவனின் நடத்தையில் பல மாற்றங்களை அவரது ஆசிரியர்கள் அவதானித்தார்கள். பாடசாலையில் இருக்கும் கற்றலில் அக்கறை காட்டாத பல மாணவர்களுடன் குமாரின் நெருங்கிய ஈடுபாடு வெளிப்படையாகத் தெரிந்தது.

பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முதல் செயல்முறை ஆரம்பித்தது இவ்விடத்திலிருந்தாகும். கிடைத்த தகவல்களின் அடிப்படையில் குமார் போதைப் பொருளுக்கு அடிமைப்பட்டிருப்பதாகத் தெரியவந்தது. மாணவர்களை போதைக்கு அடிமைப்படுத்தும் பல்வேறு சக்திகள் பாடசாலைச் சூழலில் செயற்படும் தகவலும் கிடைத்தது. பாடசாலை மாணவர்களில் போதைப் பொருட்களுக்கு அடிமைப்பட்டவர்களின் பட்டியலொன்றைத் தயாரிக்க வேண்டிய அவசியம் நிர்வாகத்திற்கு ஏற்பட்டது இதனாலேயாகும். எனவே மாணவர்களைப் போதைப் பொருட்களிலிருந்து பாதுகாக்க ஒரு பாதுகாப்புச் சூழலை ஏற்படுத்துவது நிர்வாகத்திற்கு கட்டாயத்தேவையாகியது. அதன் முதற் கட்டமாக பாட-சாலைச் சமூகத்தைச் சார்ந்த சூழலிலுள்ள வியாபாரிகள், முச்சக்கர வண்டி ஓட்டுநர்கள், வீட்டுரிமையாளர்கள் போன்றோரை அதிபர் இரகசியமாக அழைத்து இதுபற்றி அவதானமாக இருந்து தகவல்களைப் பெற்றுத் தருமாறு கேட்டுக்கொண்டார்.

பாடசாலையின் நாளாந்த நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக ஒவ்வொருநாளும் போதைப் பொருள் பரிசோதனை செய்யும் செயற்பாடு நடைபெற்றது. இக்குழுவில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர் தலைவர்கள் இணைக்கப்பட்டிருந்தனர். பாடசாலை நேரத்தில் ஏதாவது ஒரு பாடவேளையில் இத்தேடலை மேற்கொள்ள நேரம் ஒதுக்கப்பட்டது. கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் மாணவரின் சுயமரியாதை, கௌரவம் பாதிக்கப்படாத வகையில் இத்தேடல் இடம்பெற்றது.

இந்த தேடலின் மூலம் பாடசாலையில் மாணவர்கள் தொடர்பான பல்வேறு போதைப் பொருட்களின் பாவனை பற்றி அதிகமான தகவல்கள் சேகரிக்கப்பட்டன. போதைக்கு அடிமைப்பட்டிருந்த குமாரின் உளநிலையை மாற்றும் செயற்பாட்டை பொறுப்புடனும், கவனமாகவும் முன்னெடுக்க வேண்டியிருந்தது. இதற்காக பாடசாலை உளவளத்துணை ஆசிரியர்களின் வழிகாட்டலில் பிரச்சினையின் பரிணாமம் இனங்காணப்பட்டு உரிய சிகிச்சை பெற்றுக் கொடுக்கப்பட்டது, குமார் மட்டுமன்றி போதைக்கு அடிமைப்பட்டிருந்த மேலும் சில மாணவர்களும் ஆலோசனை வழங்கல் சேவைக்கு உட்படுத்தப்பட்டனர். தேவைக்கேற்ப பொலிஸ் மற்றும் சிறுவர் நன்நடத்தைப் பராமரிப்பு அலுவலருடன்

பாடசாலையும் இணைந்து செயற்படுத்திய இப்பாதுகாப்பு செயற்திட்டத்தின் மூலம் மாணவர்கள் இத்தகைய விஷமிகளின் வலையில் சிக்கிக்கொள்ளாது பாதுகாக்கப்பட்டது மட்டுமன்றி மாணவர்கள் தம்மிடம் போதைப் பொருட்களை வைத்துக் கொள்வதற்கும், கொண்டுவருவதற்கும்கூட அஞ்சினர்.




இன்று குமார் க.பொ.த. (உ/த) பரீட்சையில் சிறப்பாகச் சித்தியடைந்து பல்கலைக்கழகம் செல்லத் தயாராக இருக்கின்றான். அதேபோல் ஏனைய மாணவரும் போதைப் பொருளிலிருந்து விடுபட்டு கற்றல் செயற்பாடுகளில் வெற்றிகரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். போதைப் பொருட்களை மாணவருக்கு வழங்குவோருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுப்பதற்கு பாடசாலை சமூகத்தால் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள் பொலிஸாருக்கு மிகவும் உதவியாக அமைந்தது. எமது பாடசாலையால் இரு வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இச்செயற்திட்டம் தொடர்ந்தும் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்படுவதோடு, அது வருங்கால இளைஞர் சமுதாயத்தைப் பாதுகாக்க மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றது.

(எண்ணக்கரு - பொல்காவெல கு/பராக்கிரமபாகு ம.ம.வி. (தேசிய பாடசாலை)

## 38. சகல மாணவர்களுக்குமான சுயவிபரக்கோவை

மாணவர்களின் பாடசாலை வரவு, வரவின்மை பற்றிய தகவல்கள் வரவு இடாப்பில் பதியப்படுகின்றன. மாணவர்கள் பற்றிய தகவல் முறைமைகளை பாதுகாப்பாக பேணுதல் பாடசாலைக்கும் மாணவர்களுக்கும் பயனுடையதாக அமையும்.

இதன் மூலம்,

பிள்ளையின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுகின்றது.

பெற்றோர் தொடர்பு வலுவடைகின்றது.


தகவல் தேடலுக்கான நேரம் மீதப்படுத்தப்படுகின்றது.

மாணவர் ஆசிரியர் தொடர்பு பலப்படுத்தப்படுகின்றது.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலையில் தரம் 1 முதல் 11 வரையான வகுப்புக்கள் காணப்படுகின்றன. ஓர் வகுப்பில் ஏறத்தாள 15 முதல் 20 வரையான மாணவர்கள் கற்கின்றனர். வகுப்பு மாணவர்கள் பற்றிய தகவல்கள் வகுப்பு மட்டத்தில் பேணுவது இலகுவானது என்பதனால் வகுப்பு மட்டத்திலேயே சுயவிபரக்கோவைகள் தயாரிப்பதற்கான ஆலோசனை கிடைத்தது. அதன்படி ஒவ்வொரு மாணவர்களுக்கும் சுயவிபரக்கோவைகள் தயாரிக்கப்பட்டன.

சுயவிபரக் கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ள விபரங்கள்

- மாணவன் / மாணவி பற்றிய பொதுத் தகவல்கள் (புகைப்படம், பெயர், முகவரி, பிறந்த திகதி, தாய், தந்தை, பாதுகாலவர் பற்றிய விபரம், அவர்களது தொழில் மற்றும் மாதாந்த வருமானம், பாடசாலைக்கு வருகின்ற முறை, ....)
- மாணவர்களின் நடத்தை பற்றிய ஆசிரியர் குறிப்பு
- மாணவரது இணைப்பாடவிதான செயற்பாடுகள்
- மாணவரது அடைவு பற்றிய விபரங்கள் (தவணைப் பரீட்சைப் புள்ளிகள், பகுப்பாய்வு, அட்டவணைகள், ...)
- மாணவரது உடல்நலக் குறிப்புக்கள் (தடுப்பூசிகள், நோய்கள், பரிசோதனை சான்றுகள், ...)
- மாணவரது போசாக்கு பற்றிய விபரங்கள்




குறுகிய காலத்திற்குள் பெரும்பாலான மாணவர்களது கோவைகள் ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்டன. இதற்கு மாணவர்களும் பெற்றோர்களும் ஒத்துழைப்பு நல்கினர்.

ஆசிரியர்களுக்கு இக்கோவைகளை பேணுவதில் சிரமம் ஏற்பட்டது. அதற்காக நீண்ட காலம் தேவைப்பட்டது. ஆசிரியரிடையே எதிர்ப்புத் தோன்றியது. அதற்கு அதிபரினால் தீர்வு வழங்கப்பட்டது. அதாவது சகல ஆசிரியர்களினதும் சுயசெயற்திட்டமாக இதனை மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. அதனை ஆசிரியர் தரக் கணிப்பீட்டிற்கு உட்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. இதனை சகலரும் ஆர்வத்தோடு வரவேற்றனர். கோவைகளும் காகிதாதிகளும் பாடசாலையினால் வழங்கப்பட்டன. மாணவர்களது சுயவிபரக்கோவைகளும் தயாராகின. அவற்றை பேணிப்பாதுகாப்பதற்காக வகுப்பறை அலுமாரிகள் திருத்தம் செய்யப்பட்டன. தகவல்களை பதிவதற்கு மாணவர்கள் பற்றி ஆசிரியர்கள் மிகவும் அவதானத்துடன் இருந்தனர். இதனால் ஆசிரியர் மாணவர் உறவு நெருக்கமானது. ஆசிரியர்கள் பெற்றாருடனும் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டனர்.

மாணவர்களது விசேடத் திறமைகள், பிரச்சினைகளை சரியாக இனங்காணல், பாடசாலை சமூகத்தின் திறமைகளை அறிதல், ஆலோசனை வழிகாட்டல் தேவையை அறிதல். பாடசாலை திட்டமிடலின் போது இத் தகவல்களை தரவாகக்கொள்ள முடிதல் போன்றவை இச் செயற்திட்டத்தின் மூலம் கிடைக்கப்பெறும் பயன்களாகும்.

இதனூடாக மாணவர்களுக்கான வழிகாட்டலை மேற்கொள்வது ஆசிரியர்களுக்கு இலகுவாக உள்ளது.



(எண்ணக்கரு - கெபிதிகொல்லேவ கல்வி வலய அ/எதாகட மகா வித்தியாலயம்)

# 39. CCTV

CCTV கமரா பாவிப்பது தொடர்பான தொலைக்காட்சி விமர்சனமொன்று ஒளிபரப்பாகின்றது…. இங்கு காட்சிகள் ஒளிபரப்பாகும் போதே பின்னணியில் ஒலியும் கேட்கிறது.

**பின்னணி அறிவித்தல்**

CCTV அல்லது Closed - Circuit Television என்பது தற்காலத்தில் மனித நடமாட்டம் அதிகமுள்ள பகுதிகளில் பாதுகாப்புக்காகப் பயன்படுத்தப்படும் ஒரு கருவியாகும்.

வங்கிகள், கடைத்தொகுதிகள், வைத்தியசாலைகள், பிரதான தெருக்கள் மட்டுமல்லாது வீடுகளிலும்கூட CCTV இணைக்கப்பட்டு அவ்விடங்களில் இடம்பெறும் நிகழ்வுகள் அவதானிக்கப்படுகின்றன. CCTV இன்று கல்வி நிறுவனங்களிலும் தனது செல்வாக்கினைச் செலுத்தியுள்ளது. பரீட்சைத் திணைக்களம் போன்ற இரகசியத்தைப் பேணும் நிறுவனங்களிலும் CCTV ஒரு பாதுகாப்புக் கருவியாகச் செயற்படுகின்றது. CCTV இன்று பாடசாலைகளின் நிர்வாக செயற்பாடுகளை அவதானிக்கவும் உதவுகின்றது. இதன்மூலம் வகுப்பறைக் கற்பித்தல் நடவடிக்கைகளை இலகுவாக மேற்பார்வை செய்யலாம்.

நாம் CCTV பயன்படுத்தப்படுகின்ற ஓர் பாடசாலையான பொலன்னறுவை மாவட்ட கிரிதலே பிரதேசத்திலுள்ள ஹிங்குரக்கொடை கல்வி வலய ஜயந்தி குருகுல ஆரம்பப் பாடசாலைக்குச் சென்றோம். அப் பாடசாலையின் அதிபரைச் சந்தித்து பாடசாலையின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு CCTV எவ்வாறு உதவுகின்றதென்று வின-வியபோது அவர் பின்வருமாறு கூறினார்.

“உண்மையாக பாடசாலை மட்டத்தில் ஆசிரியர்களின் கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்பார்வைக்கு உட்படுத்திக் கொள்வதற்கு இது மிகவும் இலகுவான முறையாகும். எமது பாடசாலையில் வெவ்வேறான மாதிரிக் கற்பித்தல் அறைகள் உள்ளன. அவற்றின் பிற்பகுதியில் CCTV இணைக்கப்பட்டுள்ளன. காரியாலயத்திலிருந்தே LCD கணனி மூலம் பார்த்துக் கொள்ள முடியும். குறிப்பிட்ட வகுப்பறையில் கற்பித்தல் நடவடிக்கைகள் எவ்வாறு நடைபெறுகின்றன, மாணவர்களின் கற்றல் நடத்தைகள் எவ்வாறு இடம்பெறுகின்றன என்பதோடு ஆசிரியர் எந்தளவு சிரத்தையுடன் பாடத்தைக் கற்பிக்கின்றார் என்பதையும் முழுமையாக எனக்கு மேற்பார்வை செய்யமுடியும். சகல வகுப்புகளுக்கும் முறையான கால அட்டவணை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி சகல ஆசிரியர்களும் ஒவ்வொரு நாளும் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுதல் வேண்டும். அவ்வாறே தாம் கற்பித்த பாடத்தினை மீண்டும் பார்வையிட்டுக் கொள்ள முடியும். அதற்கான சந்தர்ப்பம் அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. பாடம் தொடர்பான பிரச்சினைகள் பலம், பலஹீனம் தொடர்பாக கலந்துரையாடி அதற்கான தீர்வினை வழங்கவும் இலகுவாக இருக்கும். ஆசிரியர் ஒருவர் கற்பிக்கும்போது அவ்வகுப்பின் பிற்பகுதியிலிருந்து மேற்பார்வை செய்வதை விட இது இலகுவான முறையாகவும் வெற்றிகரமான முறையாகவும் அமைகின்றது.”

**பின்னணி**

அதிபரின் விளக்கத்திற்கு பின்பு பதிவுசெய்யப்பட்ட வகுப்பறை செயற்பாடொன்று திரையிட்டுக் காட்டப்பட்டது. அதில் ஆசிரியரின் கற்பித்தல் நடவடிக்கைகள், மாணவர்களின் பங்களிப்பு போன்றவைகளை தெளிவாகப் பார்க்க முடியுமாக இருந்தது.

எதிர்பார்க்கும், எதிர்பாராத முறையில் நடைபெறும் நிகழ்வுகள், சம்பவங்களை எவ்வித மாற்றமும் இன்றி இயல்பாகவே பாரத்துக்கொள்ள CCTV ஏதுவாக இருக்கும். எனினும் பாடசாலையின் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு CCTV பாவனையானது வரவேற்கத்தக்கதாகும்.

இச் செயற்பாடு எதிர்காலத்தில் முன்மாதிரியாக வியாபிப்பதற்கு முடியுமாக இருக்கும்.




(எண்ணக்கரு - ஹிங்குராக்கொடை கல்வி வலய - ஜயந்தி குருகுல ஆரம்பப் பாடசாலை)

# 40. புத்தெழுச்சி

''எனது மகன் நேற்றும் பாடசாலைக்கு போகவில்லை''
''ஏன் சென்ற வாரமும் இரண்டு நாள் போகவில்லைதானே''

''அது தானே தங்கச்சி. நாங்கள் 5.00 மணிக்கு வேலைக்கு வருவதால் பிள்ளைகள் காலையிலே எழும்புவதில்லை பாடசாலைக்குப் போவதில்லை. சரியாக முகம் கை கால்களைக் கூட கழுவுவதில்லை. எனக்கு இது பெரிய பிரச்சினை.''

'' அது என்றால் உண்மை தான். என்றாலும் இது மாதிரி ஒரு தொழில் கூட இல்லாமல் நாங்கள் எப்படி வாழ்வது.''

'' நான் எந்நேரமும் எனது மகனுக்கு எங்களைப் போல தெரு கூட்டவும், மலசல கூடங்களை கழுவவும், புதை குழிகளை தோண்டவும் இல்லாமல் பரீட்சை பாஸ் பண்ணி தொழில் ஒன்றை தேடிக் கொள்ள சொல்வதுண்டு. அதுவும் அந்த இடத்திற்கு செல்லும் வரை அவர்களை பாடசாலைக்கு அனுப்புவதே பிரச்சினை.''

காலையில் பஸ் தரிப்பில் நின்ற விஜய வித்தியாலய புதிய பிரதி அதிபரான சமரசிங்க அவர்களின் காதுகளில் விழுந்த இவ்வுரையாடல், விடியற்காலை 5.00 மணிக்கு நகர சபையில் தொழில் பார்க்கும் பெற்றோரின் கதைகளிலிருந்து காதுக்கு எட்டிய ஒரு பகுதியாகும்.

இவ்வுரையாடலில் இருந்து தனது சிந்தனையை ஆரம்பித்த சமரசிங்க அவர்களுக்கு இப்பிரதேசத்தில் நிலவும் சமூக, பொருளாதார சூழலுக்கு ஏற்ப பிள்ளைகளது பாடசாலை வாழ்க்கை பாதிக்கப்பட்டிருக்கும் முறையை விளங்கிக் கொள்வது கஷ்டமாக இருக்கவில்லை. 500 பிள்ளைகளுக்கு மேல் கல்வி கற்ற விஜய வித்தியாலயத்தில் தற்போது 100 பேருக்கும் குறைந்த மாணவர்களே உள்ளனர். மிகவும் வசதி குறைந்த, சமூக நிலையில் தாழ்ந்த மட்டத்தில் உள்ள ஏழைப் பிள்ளைகளைக் கொண்டதாக திகழும் இப்பாடசாலைக்காக நிறைய அர்ப்பணிப்புக்களை செய்ய வேண்டி வரும் என்பதை சமரசிங்க அவர்கள் உணர்ந்து கொண்டார். பாடசாலையில் விடியற் காலையிலே வேலைகளை ஆரம்பிப்பது இதற்கு சிறந்த வழியாக அமையுமென கருதிய பிரதி அதிபர், இது பற்றி அதிபருடனும் ஆசிரியர்களுடனும் கலந்து பேசினார்.

| | |
|---|---|
| நதிரா :- | அடக் கடவுளே எங்களுக்கு என்றால் விடிய 5.00 மணிக்கு பாட சாலைக்கு வர முடியாது. காலையில் நாங்கள் எமது வீடுகளில் பெரிய யுத்தத்தையே நடத்தி விட்டு வருகிறோம். உங்களுக்கென்ன ? |
| சமரசிங்க :- | நல்லது நல்லது நான் காலை 5.00 மணிக்கு வருகிறேன். ஆனால் 6.00 மணி ஆகும் போது இன்னும் இரண்டு மூன்று பேர் வர வேண்டும். |
| அதிபர் :- | நாங்கள் பிள்ளைகளுக்கு காலை உணவு ஏதாவது கொடுப்போம். நான் பெற்றாரை அல்லது வேறு யாரையாவது கதைத்து இதற்கான ஒழுங்கினை செய்கிறேன். |
| சுமனா :- | அது என்றால் மிக நல்லது. முதலில் இப்படியாவது பிள்ளைகளை பாட சாலைக்கு வர செய்ய வேண்டும். |
| அதிபர் :- | சமரசிங்க உங்களுக்கு கணிதம் கற்பிக்க முடியும் தானே? முக்கிய தேவையான பாடத்தை காலையிலேயே படிப்பிப்போம். |
| சுமனா :- | நான் ஆங்கிலம் படிப்பிக்கிறேன் எப்படியும் பிள்ளைகளுக்கு கணக்கும் ஆங்கிலமும் முக்கியமான தேவை என்பது பெற்றார்களுக்குத் தெரியும் தானே. |
| அதிபர் :- | என்னவாவது செய்து பாடசாலையை கரை சேர்க்க வேண்டும். இப்போ சமரசிங்க மாதிரி திறமையான இளம் பிரதி அதிபர் ஒருவர் இருப்பதால் இந்த வேலையை நாம் எப்படியாவது செய்வோம். |

சுமரசிங்க :- நாம் முதலில் இப்பிள்ளைகளின் வீடுகளுக்குச் செல்வோம். இதற்கு பாடசாலை முடிந்த பின் ஒரு நேரத்தை ஒதுக்குவோம். போய் குடும்பங்கள் பற்றி விசாரிப்போம். பிள்ளைகள் பற்றி பெற்றார் பற்றிய தொழில் பற்றி தேடிப் பார்ப்போம். பாடசாலைக்கு வராத பிள்ளைகள் இன்னும் வீட்டில் இருப்பார்கள் அவற்றை தேடிப் பார்த்து பிள்ளைகளின் பெயர் பட்டியலொன்றை தயாரித்து வகுப்புக்களில் கற்பித்தலை புதிதாகவே தொடங்குவோம்.

அதிபர் :- நாங்களும் பலமுறை முயற்சித்தோம். இது மாதிரி தகவல்களை சேகரித்து பிள்ளைகளை எடுப்பதற்கு ஆனால் அது வெற்றியளிக்கவில்லை.

சுமனா :- பெரிய பிரச்சினையாக இருப்பது பிள்ளைகளை காலையிலே எழும்பி ஆயத்தப்படுத்தி பாடசாலைக்கு அனுப்ப ஒருவரும் இல்லை

சுமரசிங்க :- உண்மைதான் அதற்கென்றால் நல்லதொரு வழி தேவை தான் நாங்கள் காலை 5.00 மணிக்கே பாடசாலையை ஆரம்பிப்போம். 6 முதல் 11 வகுப்பு வரை.

சுமரசிங்க :- அவர்களின் தலைமையில் வேலைத்திட்டம் ஆரம்பமானது எல்லா மாணவர்களும் தம் பெற்றோருடன் காலை 5.00 மணிக்கு பாடசாலைக்கு வந்தார்கள். இரண்டு தாய்மார் அவர்களுக்காக தேனீர் தயாரித்தார்கள். தேனீர் அருந்தியதும் முதலில் சமரசிங்க அவர்களின் கணித வகுப்பில் கற்கும் மாணவர்கள் 6.00 மணிக்கு ஆங்கிலம் கற்பார்கள் அதற் பிறகு காலை உணவு தயாரிக்கப்படும். அப்பகுதியிலுள்ள அறிஞர்கள், படித்தவர்களின் பறை உதவியினால் இலகுவானது.

தற்போது பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை 250 ஆக அதி கரித்துள்ளது. க.பொ.(சா/தர) பரீட்சைக்காக மாணவர்கள் சிலர் ஆயத்தமாக இருக்கின்றனர்.அவர்கள் பரீட்சையில் சித்தி பெறுவார்கள். ஏன்பது ஆசிரியர்களின் கருத்தாகும். பிரார்த்தனையுமாகும்.

விஜய வித்தியாலயத்தை வெற்றி பெறச் செய்வதற்கு பாடசாலை சமூ கத்தினரிடையே பாடசாலை பற்றி புதிய எண்ணக்கரு வளர்ந்து வருவதை அதிபர் ஞாபகப்படுத்துவது மிக்க மகிழ்ச்சியுடதாகும்.



(கண்டி வலயத்தில் கலைமகள் வித்தியாலயம்)

# நூலாக்க குலு

**வழிகாட்டலும் ஆலோசனையும் :**

திருமதி எஸ்.எம்.எல்.கே. செனவிரத்ன
கல்விப் பணிப்பாளர் - முகாமைத்துவ மற்றும் தர உறுதிப்பாட்டுக் கிளை

**தயாரித்தலும் பதிப்பித்தலும் :**

திரு. டி.எச்.எஸ்.டி. சோமரத்ன
உதவிக் கல்விப் பணிப்பாளர்-முகாமைத்துவ மற்றும் தர உறுதிப்பாட்டுக் கிளை

**எழுத்தாளர் குழு :**

திரு. இஸட். தாஜுதீன் - கல்விப் பணிப்பாளர் - முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்திக் கிளை
செல்வி எஸ்.எம்.ஏ. சிபாயா – பிரதிக் கல்விப் பணிப்பாளர் - தேசிய மொழிகள் மற்றும் மானுடவியற் கிளை
திரு. எம்.ஐ.எம். நவ்பர்தீன் - உதவிக் கல்விப்பணிப்பாளர்- முஸ்லிம் பாட சாலைகள் அபிவிருத்திக் கிளை
திரு. எம். பாலசுப்பிரமணியம் - கோட்டக் கல்விப்பணிப்பாளர் - ஏறாவூர்பற்று
திரு. பி. கமலேந்திரன் - அதிபர் - எல்டப் No 1 த.வி., பசறை
திரு. எச்.ஏ.எம். ஹபீல் - அதிபர் - ர/அஸ்லாம் முஸ்லிம் மகா வித்தியாலயம்
திரு. எம்.ஐ.எம். சியாட் - பிரதி அதிபர் - ஸாஹிரா கல்லூரி, மாவனெல்ல
திருமதி. ஏ.எல்.எஸ்.கரீமா - ஆசிரிய ஆலோசகர் - அக்குரணை முஸ்லிம் பாலிகா வித்தியாலயம்
திருமதி. எப்.எப். இன்சிறா - ஆசிரியர், கொ/பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி
திருமதி. கே.எம். பாதுஷா - ஆசிரியர், கொ/பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி
திருமதி. எல். வாசுதேவன் - ஆசிரியர் - சொய்ஸா மகா வித்தியாலய, மொரட்டுவ
திரு. எஸ்.எம். மிசார் - ஆசிரியர் - கெகுனுகொல தேசிய பாடசாலை
திரு. வீ. விஜயகாந்த் - ஆசிரியர் - பசறை தமிழ் மகா வித்தியாலயம்

**கணனி தட்டச்சு :**

திருமதி. ஜீ. தயாளன் - அபிவிருத்தி உதவியாளர் - முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்திக் கிளை
திருமதி. எஸ். சித்திராதேவி - அபிவிருத்தி உதவியாளர் - ஆயிரம் இடைநிலைப் பாடசாலைகள் கிளை
திரு. ஏ. சிராஜ்முனீர் - அபிவிருத்தி அலுவலர் - - தேசிய மொழிகள் மற்றும் மானுடவியற் கிளை

**ஓவியங்கள் :**

திரு. எச்.பீ.சி. பனிதெனிய – ஆசிரியர் - மகாமாய பாலிக்கா வித்தியாலய, கடவத்த
திரு. சீ.சீ. திசாநாயக்க – ஆசிரியர் - ஸ்ரீ சங்கமித்தா வித்தியாலய, நலிகம, இராகம
திரு. ஆர்.எச்.சீ.ஜே.எஸ். குமார – ஆசிரியர் - ஹந்துபொட மகா வித்தியாலய. தெல்கொட